07



நேர்காணல்: முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூப்

## "இணக்கம் காணமுடியாத இடைவெளியொன்று ஆரம்பத்தில் இருந்தே நிலவியது"

04



## ரணில் யாருக்கு எதிரி?







# மீள்பார்வை

මීළ්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 405 • 26 ஒக்டோபர் 2018 வெள்ளிக்கிழமை • ஸபர் 1440 • விலை 40.00







# ஷரீஅத்துக்கு முரண்பாடு என்பதில் பாயிஸ் முஸ்தபா உடன்பாடா?



முன்வைக்கப்பட்டுள்ள முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த அறிக்கையில் முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூப் முன்வைத்துள்ள முன்மொழிவுகள் முஸ்லிம்களுக்கு விரோதமானவை எனவும் இஸ்லாத்துக்கு முரணானவை எனவும் பாயிஸ் முஸ்தபா தரப்பு அறிக்கையே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் அனைத்து மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனங்களை அழைத்து நடத்திய மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆனாலும் முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தக் குழுவின் அங்கத்தவரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா இந்த நிலைப்பாட்டில் இல்லை எனத் தெரியவருகிறது. (பக். 14)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் டிசம்பரில் பாராளுமன்றில்



சர்வதேச அழுத்தங்களுக்கு இசைவாக இலங்கையில் இயற்றப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் டிசம்பர் மாதமளவில் பாராளுமன்ற விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (பக். 15)

## சுற்றுலாப் பயணிகள் கடற்கரையில் குட்டையாக அணிவதை தடுக்க முடியாது




இலங்கைக் கலாச்சாரத்துக்கு ஏற்ற உடைகளை அணியும்படி குறிப்பாக சுற்றுலாப் பயணிகளை வேண்டிக் கொண்ட அறிவித்தல் பலகை தொடர்பாக கிளம்பியுள்ள சர்ச்சைகள் தொடர்பில் பொது நிர்வாக மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார பிபிசிக்கு கருத்து (பக். 15)

## இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகம் விஜயம் செய்த நாடுகளில் இலங்கை

2016 மே 02 இலிருந்து 2018 ஜூன் 18 வரை இங்கிலாந்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகம் விஜயம் செய்த நாடுகளுள் ஒன்றாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.



முதல் 10 நாடுகளில் அடங்குகின்ற சவூதி அரேபியா, தாய்வான், ஹொங்கொங், கட்டார், பஹ்ரைன், டுபாய், ஜப்பான், இந்தியா, ஜிப்ரோல்டர் நாடுகளில் இலங்கையும் அடங்கியுள்ளது. ஐக்கிய ராஜ்ஜியத்தின் பாராளுமன்ற செலவுப் பட்டியலில் குறித்துக் காட்டியுள்ளபடி, இங்கிலாந்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான நான்கு விஜயங்களை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இதற்கென 8.6 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது.

## CTA சட்டத்தை மேலும் திருத்தக் கோருகிறது HRW

HUMAN RIGHTS WATCH

பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக தற்போது அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் முன்னைய சட்டத்தை விட முன்னேற்றகரமானதாக இருந்தாலும் அதில் மேலும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருப்பதாக ஹியூமன் ரைட் வொட்ச் சுட்டிக் காட்டியுள்ளது. (பக். 15)

## கல்வியை நவீனமயப்படுத்தும் முயற்சியில் உலக வங்கி



இலங்கையின் கல்வியை நவீனமயப்படுத்தும் முயற்சிகளை உலக வங்கி திங்கட்கிழமை (22) ஆரம்பித்து வைத்தது. கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தலைமையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இலங்கையின் கல்விமுறையை பலப்படுத்தவும் சர்வதேசத்துக்கு ஏற்ற வகையில் நவீனமயப்படுத்தவும் உலக வங்கி 100 மில்லியன் டொலர்களை கடந்த ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் போது ஒதுக்கியிருந்தது. இலகு கடன் அடிப்படையிலான இந்த செயற்றிட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (பக். 15)

## பொது விவகாரங்கள் பற்றி இயக்கங்களின் தலைவர்கள் சந்திப்பு



இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் அமீராக அண்மையில் தெரிவு செய்யப்பட்ட உஸ்தாத் உஸைர் (இஸ்லாஹி) அவர்களை இன்று (23/10/2018) ஜமாஅதுஸ் ஸலாமாவின் தலைமைபீடம் சந்தித்து வாழ்த்துக்களையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொண்டது. அத்தோடு நாட்டின் பொது விவகாரங்கள், முஸ்லிம் சமூகத்தின் பொதுப் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பில் ஸலாமா சார்பாக அதன் தலைவர் உஸ்தாத் ஆஸாத் அப்துல் முாத் மற்றும் உதவித் தலைவர்களான Dr. ஸைபுல் இஸ்லாம், சகோதரர் நிஹாஸ் ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் நியமனத்தில் தாமதம் ஏன்?

கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

(முஹம்மது இக்பால்)

பாடசாலைகளில் மாணவர்களுக்கான விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களை நியமிக்கும்பொருட்டு கடந்த வருடம் (2017) கல்வி அமைச்சினால் பகிரங்கமாக விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதற்காக விண்ணப்பித்தவர்களில் தேசியரீதியாக விளையாட்டில் வெற்றி பெற்ற மற்றும் கல்வித் தகைமையுடயவர்களை நேர்முகப் பரீட்சை மூலமாகவும் செயல்முறை பரீட்சை மூலமாகவும் கல்வி அமைச்சு தெரிவு செய்திருந்தது. (பக். 15)


Dealers Islandwide

FB Industries

Tel: 0773435700
0112431356, Fax: 0112321361

MY & BRAND IMPORTERS AND MANUFACTURE

Rads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா- சவூதி கூட்டுப் படுகொலையே Jamal Khashoggi இன் மரணம்.



ஜமால் ஒரு அற்புதமாக ஊடகவியலாளர். 1980 ஆம் ஆண்டு துணிவுடன் ஒஸாமா பின்லாடனை பேட்டி எடுத்தவர். அவர் நிகழ்வுகளை பகுப்பாய்வு செய்யும் முறை அலாதியானது. சவூதி அரச குடும்பத்திற்கு மிகவும் நெருக்கமானவர். ஆனால் இளவரசர் முகம்மத் பின் சல்மானின் அதிரடி நடவடிக்கைகளால் பல தொழில் அதிபர்கள் மற்றும் அறிஞர்களை கைது செய்தமையை கடுமையாக எதிர்த்தார்.

அவர் முகம்மத் பின் ஸல்மானின் எதிரியாக மாறியதுடன் வாசிங்டன் போஸ்ட் உட்பட பல ஊடகங்களில் அவரைக் கடுமையாக சாடி கட்டுரைகளை எழுதினார். அரச குடும்பத்தில் சல்மானின் எதிர் தரப்புடன் நெருங்கிய உறவைப் பேணியதுடன் அந்த எதிர்ப்பை நிறுவனமயப்படுத்தினார். முஹம்மத் பின் சல்மானை வைத்து சவூதியை ஆளும். அமெரிக்காவிற்கும் இது பெரும் சிக்கலை ஏற்படுத்துயது.

2018 ஒக்டோபர் 10 ஆம் திகதி அமெரிக்க உளவு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஜமாலை கடத்த முயற்சி நடப்பது CIA இற்கு தெரியும் என அறிவித்துள்ளது. எனவே அமெரிக்க அரசின் பின்னணி அறிவுடனே இந்த படு கொலை நடந்துள்ளது.

குறிப்பாக அமெரிக்க தேவையுடன் கைது செய்யப்பட்ட தொழில் அதிபர்களின் நிதியை மீளப் பெறுவதற்கும், எதிர்த் தரப்பை ஒழுங்குபடுத்துவதிலும் ஜமால் கரிசனையுடன் தொடர்புபட்டார். எனவே இவர் சவூதி, மற்றும் அமெரிக்க இரு தரப்பினதும் இலக்காக காணப்பட்டார்.

குறிப்பாக அமெரிக்காவில் உள்ள டிரம்ப் எதிர்ப்பு ஊடகங்களை ஜமால் நன்கு பயன்படுத்தினார். அவரது பேனாவின் வலிமை அமெரிக்க, சவூதி ஆட்சியாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. எனவே அவரைக் கொலை செய்வது அல்லது கடத்துவது என்ற முடிவை எடுத்தனர்.

ஆனால் பலமான துருக்கிய உளவுப் பிரிவு அவர்களின் திட்டத்தை துல்லியமாக கண்டறிந்து உலகறியச் செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலமையை சமாளிப்பது தொடர்பில் இரு தரப்பும் கடும் பிரயத்தனம் செய்கின்றது.

கட்டாரில் உள்ள துருக்கிய இராணுவத்தளத்தில் துருக்கி, சவூதி, அமெரிக்க அதிகாரிகள் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடாத்தி சில தீர்மானங்களிற்கு வந்துள்ளனர். அதில் துருக்கி, கட்டார் மீது உள்ள பொருளாதாரத் தடைகளை நீக்குவது தொடர்பிலும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் துருக்கிய சட்ட மாஅதிபர் காரியாலயம் விசாரணைகளை ஆரம்பிக்க முன் சவூதியின் ஸ்தான்பூலுக்கான கவுன்சலர் நாடு திரும்புவதற்கு அனுமதிப்பது உட்பட பல உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. துருக்கிய ஊடகங்கள் அவர் எதிர்பாராதவிதமாக நாட்டை விட்டு வெளியேறியதாக அறிக்கை விடுத்து வருகின்றன. ஆயிரம் நன்மைகள் இருந்தாலும் ஒரு கொலையை நியாயப்படுத்த முடியாது.

- எம்.என்.முஹம்மட்







## சவூதியை அசைத்த மரணம்: யார் இந்த ஜமால்?

சர்ச்சைகளுக்குப் பெயர்போன சவூதி அரேபியா அரசு, கடந்த சில ஆண்டுகளாக உலக நாடுகளுக்கிடையே தங்களது கடந்த காலம் குறித்தான கரும்புள்ளிகளை அகற்றுவதற்கான சீர்திருத்த நடவடிக்கைகளை அதன் மன்னர் சல்மானும், அந்நாட்டின் இளவரசர் முஹம்மது பின் சல்மானும் எடுத்து வந்தனர்.

குறிப்பாக, பெண்கள் முன்னேற்றம் சார்ந்த பல்வேறு உத்தரவுகளை சவூதி பிறப்பித்து உலக நாடுகளை ஆச்சரியப்படுத்தியது. இதன் பின்னணியில் சவூதியின் அரசியல் மறைந்திருப்பதாக அந்நாட்டிலுள்ள அரசியல் விமர்சகர்களும், சமூக ஆர்வலர்களும் விமர்சித்து வந்த வேளையில் அதனை உறுதிப்படுத்தும் விதமாக ஜமாலின் கொலை அரங்கேறியுள்ளது.

சவூதியில் பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுக்கு எதிராக பல ஆண்டுகளாக வன்முறைகள் நடந்தேறி வருகின்றன என்றாலும், ஜமால் விவகாரத்தில் சவூதியின் ரத்தம் படிந்த கரங்கள் வெட்ட வெளிச்சமாக்கப்பட்டுள்ளது.

ஜமால் கஷோகி சவூதியின் புகழ்பெற்ற பத்திரிக்கையாளர். 1980 களில் அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனின் வளர்ச்சியிலிருந்து தனது எழுத்துப் பணியைத் தொடங்கியவர். அமெரிக்காவின் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராக இருந்து சவூதி அரசையும், அதன் மன்னர் மற்றும் இளவரசர்களை விமர்சித்து ஆங்கிலத்திலும், அரபு மொழியிலும் கட்டுரை எழுதி வந்தவர்.

அமெரிக்காவில் செப்டம்பர் 11 தாக்குதலில் அரப் நியூஸ் பத்திரிகையின் தலைமை ஆசிரியராக இருந்த அவர், இந்தத் தாக்குதல் சம்பவத்தை முஸ்லிம்கள் எப்படி அணுகுகிறார்கள் என்பதை வெளிநாட்டு ஊடகங்கள் அறிய முக்கிய ஆதாரமாக விளங்கினார். இதனைத் தொடர்ந்து அவர் மீது சர்வதேச ஊடகங்களின் வெளிச்சம் விழுந்தது.

சவூதி அரசை விமர்சித்து வந்ததன் காரணமாக இரண்டு முறை தனது ஆசிரியர் பதவியிலிருந்து ஜமால் நீக்கப்பட்டார். (சவூதி அரசைப் பொறுத்தவரை தனியார் பத்திரிகைகள் உட்பட அனைத்து பத்திரிகைகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது). இதனைத் தொடர்ந்து சவூதியை விட்டு வெளியேறவும் ஜமால் முடிவு செய்தார். இது தொடர்பாக கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வாஷிங்டன் போஸ்ட்டில் கட்டுரை ஒன்றை ஜமால் எழுதி யிருந்தார்.

இதுகுறித்து ஜமால் குறிப்பிடும்போது, ''நான் எனது நாட்டையும் குடும்பத்தையும், எனது வேலையையும் விட்டுச் செல்கிறேன். ஆனால் நான் தொடர்ந்து குரல் கொடுப்பேன். இங்கு பெரும்பாலானவர்களால் சொல்ல முடியாத செய்திகளை நான் கூறுவேன். சவூதி தற்போது எப்போதும் இல்லாத நிலையில் ஆட்சியில் மோசமாக இருக்கிறது. சவூதிக்கு வேறு ஒரு தகுதியான நபர் தேவை'' என்று எழுதியிருந்தார்.

மேலும் எமன் போரில் சவூதியின் மனிதத் தன்மையற்ற நடவடிக்கைகளை ஜமால் கடுமையாக விமர்சித்தார். எமன் மக்கள் வறுமையாலும், பசியாலும் வாடி வருகிறார்கள். சவூதி அரசர் இந்தப் போரை நிறுத்த வேண்டும் என்றும் ஜமால் வலியுறுத்தி வந்தார்.

சவூதி இளவரசர் முகமது பின் சல்மானால் பத்திரிகைச் சுதந்திரம் சுருங்கி வருகிறது. எனது உயிருக்கும் ஆபத்து இருப்பதாக கடந்த சில வருடங்களாகவே ஜமால் தனது நண்பர்களிடத்திலும், சக ஊழியர்களிடத்திலும் தெரிவித்திருக்கிறார். இது தொடர் பான செய்தியை அரபின் செய்தி நிறுவனமான அல் ஜஸீரா கடந்த மார்ச் மாதம் வெளியிட்டது.

துருக்கியைச் சேர்ந்த பெண்ணை ஜமால் திருமணம் செய்யவிருந்த நிலையில் கடந்த அக்டோபர் 2 ஆம் தேதி துருக்கியிலுள்ள சவூதி தூதரகத்தில் ஜமால் கொல்லப்பட்டிருக்கிறார்.

ஜமாலை சவூதியைச் சேர்ந்தவர்கள் மிகக் கொடூரமான முறையில் கொலை செய்ததாக துருக்கி குற்றம் சாட்டிய நிலையில் சவூதி அதனைத் தொடர்ந்து மறுத்து வந்தது. சவூதிக்கு எதிராக வலுவான ஆதாரங்களைத் துருக்கி வெளியிட, சவுதியின் நட்பு நாடான அமெரிக்காவும் இந்த விவகாரத்தில் கைகொடுக்கத் தயங்கியதைத் தொடர்ந்து ஜமால் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதை சவூதி ஒப்புக் கொண்டது. அதுவும் சவூதி தூதரகத்தில் நடந்த தகராறில் கொல்லப்பட்டிருக்கிறார் என்று கூறியுள்ளது.

எனினும் ஜமாலை யார் கொன்றது? அவரது உடல் எங்கு உள்ளது என்பது குறித்து சவூதி வாய் திறக்கவில்லை. ஜமால் மரணம் தொடர்பாக சவூதியைச் சேர்ந்த இரண்டு மூத்த அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து விசாரணை நடந்து வருவதாகவும் சவூதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜமால் கொலை வழக்கில் ஆதாரங்களின் அடிப்படையில் குற்றத்தை சவூதி ஒப்புக் கொள்ளுமா? அல்லது வழக்கம் போல் வழக்கை திசை திருப்புமா? என்பதை பொறுந்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தனது அதிகாரத்தினாலும், செல்வாக்கினாலும் அரேபிய நாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் சவூதிக்கு ஜமாலின் மரணம் உலக நாடுகளிடையே பெரும் சரிவை ஏற்படுத்தி இருக்கிறது.

- இந்துமதி


தற்செயலாக ஒரு விபத்தின் மூலம் இறந்த கைக்குழந்தை கொலை செய்யப்பட்டதாக தீர்ப்பு வழங்கப்பட்டு, ராஜதந்திர ரீதியில் விடுதலைக்காக பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டும், இலங்கையைச் சேர்ந்த ஓர் ஏழை இளம் பெண்ணிற்கு கழுத்து வெட்டப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது. அப்படிப்பட்ட நீதி நியாயமுள்ள நாட்டில், உலகையே திரும்பிப் பார்க்க வைத்த கஷோகி கொலையில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அதே தண்டனை வழங்கப்படுமா?

- ஸஹ்ரான் கரீம்

## மு.த.ச. திருத்த அறிக்கை முஸ்லிம்களுக்கு விரோதமானது எனத் தீர்மானம்

(அஷ்ரப் ஏ சமத்)

முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் பற்றி நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பள்ளிவாசல்கள் சம்மேளன நிர்வாகிகளுக்கு தெளிவுபடுத்தும் மாநாடொன்று கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தினால் வெள்ளவத்தை மெரைன் ரைவ் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாடு முழுவதிலும் உள்ள பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் 3 உறுப்பினர்கள் என 150 பேர் அளவில் இதில் ஒன்று கூடினர்.



இந்த மாநாட்டில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் விவாக மற்றும் விவகாரத்து திருத்தச் சட்டம் தொடர்பில் ஒய்வு பெற்ற நீதியரசர் சலிம் மர்சூப் நீதியமைச்சுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கை முஸ்லிம்களுக்கு விரோதமானது. அது குர்ஆன். ஸுன்னாஹ் அடிப்படைக்கு எதிராக எழுதப்பட்டுள்ளது. அக்குழுவில் உள்ளவர்கள் வெளிநாட்டு சக்திக்கும் என்.ஜி.ஓவுக்கும் சம்பந்தப்பட்டவர்கள். இவ் அறிக்கையை நாம் அனுமதித்தால் அது இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகத்துக்கு நாம் செய்யும் பாரிய துரோகமாகும்.

அதனைத் தடுத்து நிறுத்தி ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையிலான அறிக்கையை நாம் அனுமதித்தல் வேண்டும். அவரது குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணி காலம் சென்ற சிப்லி அஸீஸ், கலாநிதி எம். ஏ.எம் சுக்ரி, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா தலைவர் றிஸ்வி முப்தி, செயலாளர் முபாறக் மௌலவி ஆகியோர் குழுவாக சமர்ப்பித்த அறிக்கையையே நாங்கள் ஆதரிக்கின்றோம். இவ் அறிக்கை அல் குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் உடன்பட்டது. (இதனையே அகில இலங்கை ஜம்இயத்துல் உலமாவின் பத்வா குழு அங்கீகரித்துள்ளது. ஆகவே அரசாங்கம் பாயிஸ் முஸ்தபா அறிக்கையையே அனுமதித்தல் வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாயிஸ் முஸ்தபா தலைமையிலான அறிக்கையையே தாம் ஆதரிப்பது என அங்கு சமூகமளித்திருந்த அகில இலங்கை பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஏகமனதாகத் தீர்மானித்து பகிரங்கமாகவே ஊடகங்களுக்கும் தெரிவித்தனர்.

இங்கு கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் அஸ்லம் ஒத்மான் கருத்து வெளியிடுகையில், கடந்த வாரம் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சமமேளனம், கொழும்பில் உள்ள சில இஸ்லாமிய இயங்கங்களது பிரநிதிகள் மற்றும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் ஆகியோருடன் நீதியமைச்சர் தலத்தா அத்துக்கோரளவை சந்தித்து பாயிஸ் முஸ்தபா அறிக்கை பற்றி உரையாடினோம். அதில் டொக்டர் மரினா றிபாய் உட்பட பெண் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். அவர் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவையும் மற்றும் பெரும்பான்மையான பொதுமக்களது கோரிக்கையையுமே தான் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார். அதற்கமைவாகவே இவ்வாறு ஒரு கூட்டத்தினை நாங்கள் ஏற்பாடு செய்தோம். இதன் மூலம் பள்ளிவாசல்கள் சம்மேளனம் இதனை தத்தமது ஊர்களில் உள்ள பொது மக்களுக்கு தெளிவுபடுத்தும் எனத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட பள்ளிவாசல் தலைவர்கள் கிழக்கு மாகாண மக்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பள்ளிவாசல்கள் தலைவர்களுக்கும் பாயிஸ் முஸ்தபா அறிக்கையே சரியானது எனத் தெளிவுபடுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. அங்கு சமுகமளித்திருந்தவர்கள் பலரும் கருத்து வெளியிடுகையில் இதுவரையும் தங்களுக்கு எவரும் நீதியரசர் சலிம் மர்சூப் அறிக்கையில் சில விடயங்கள் நமக்கு எதிரானவை என்பதைத் தெளிவுபடுத்தவில்லை என்றும், இந்த இரு அறிக்கைகளையும் அஷ் ஷேக் இர்பான் முபீன் மற்றும் அஷ் ஷேக் முக்திஸ் அஹமட் ஆகியோர் தெளிபடுத்தியதனால் இன்றுதான் நாம் தெளிவு பெற்று விட்டோம். இதனை எமது பகுதிகளிலும் தெளிவுபடுத்துவோம் எனவும் கருத்து வெளியிட்டனர்.

## துரைவி விருது-2019

2018 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழில் வெளிவந்த கட்டுரைத் தொகுப்பு மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களில் சிறந்தவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 'துரைவி விருது' வழங்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்படும் சிறந்த நூல் ஒவ்வொன்றுக்கும் தலா 10,000.00 ரூபாவும், விருதும், சான்றிதழும் வழங்கப்படும்.

கட்டுரைத் தொகுப்பு கலை இலக்கிய விமர்சனம், ஆய்வு, கோட்பாடுகள் போன்ற வகையான ஆக்கங்கள் கொண்ட நூலாக இருத்தல் வேண்டும். மொழி பெயர்ப்பு நூலின் மூலப்படைப்பு உலகின் எந்த மொழியிலும் வெளிவந்தாகவும் இருக்கலாம். மொழிபெயர்க்கப்படும் நூல் ஆக்க இலக்கியமாக இருத்தல் வேண்டும்.

**விதிகள்**

- விருதுக்காக அனுப்பப்படும் நூல் இலங்கையில் பதிப்பிக்கப்பட்டு இலங்கையில் ISBN இலக்கம் பெற்றிருத்தல் வேண்டும். நூலாசிரியர்- மொழி பெயர்ப்பாளர் இலங்கையில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். நூலாசிரியர் -மொழிபெயர்ப்பாளர் பற்றிய விபரக் கொத்து, சமர்ப்பிக்கப்படும் நூலுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு நூலிலும் மூன்று பிரதிகள் தெரிவுக்காக அனுப்பப்படல் வேண்டும்

நூலின் பிரதிகள் நேரடியாகவோ தபால் மூலமாகவோ 2019 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆந் திகதி முன்னதாக கீழ் காணும் விலாசத்திற்கு சேர்க்கப்படல் வேண்டும்.

**முகவரி**
Duraivi, c/o Vijaya General Stores,85, Wolfendhal Street, Colombo-13.

**மேலதிகத் தொடர்புகளுக்கு:**
மேமன்கவி-0778681464, துரைவி அலுவலகம்- 011-2327011,
மின்னஞ்சல்: duraivi1931@gmail.com

## ரமழான் விடுமுறை கால பாடநெறிகளை இணைந்து நடாத்த MRCA மற்றும் OMSED அமைப்பு ஆகியன உடன்பாடு



ரமழான் மாதத்தில் நாடு பூராகவும் OMSED அமைப்பு நடாத்தி வருகின்ற Ramadan Vacation Course மற்றும் Youth Towards Rayyan போன்ற பாடநெறிகளை இனிவரும் காலங்களில் இணைந்து நடாத்த முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கும் OMSED அமைப்புக்கும் இடையில் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இப்பாடநெறிகள் முஸ்லிம் சமூகத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இவ்வருடம் ரமழான் மாதத்தில் நடாத்தப்பட்ட இந்தப் பாடநெறியில் சுமார் 2500 மாணவர்கள் நாடு முழுவதும் பங்குகொண்டனர். அந்த வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தி இன்னும் அதிக மான மாணவர்களிடம் கொண்டு போய் சேர்ப்பதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அஷ். M.R.M. மலிக் அவர்களை சந்தித்த OMSED இன் பிரதிநிதிகள் ரமழான் மாதத்தில் நடாத்தி வருகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக விளக்கினர். இந்தப் பாடநெறிகளுக்கான தனது மேலதிக ஆலோசனைகளையும் முன்வைத்த பணிப்பாளர் அவர்கள் எதிர்வரும் காலங்களில் இந்தப் பாடநெறிகளை இணைந்து நடாத்துவதற்கான உடன்பாட்டினையும் தெரிவித்த தாக OMSED அமைப்பின் பொதுச் செயலாளர் M.S.M. ஸஹீல் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரக் கொள்கையின்றி மிதக்கும் இலங்கையின் நாணயம்


• பியாஸ் முஹம்மத்

இலங்கையின் மத்திய வங்கி இலங்கை நாணயத்தை மிதக்க விட வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தலைவர் மெனுலா கொரெத்தி இவ்வருடம் ஜூன் மாதம் தெரிவித்திருந்தார். மே மாதத்தில் இலங்கை மத்திய வங்கி தனது நாணயத்தைப் பாதுகாப்பதற்காக 190 மில்லியன் டொலர்களை விற்பனை செய்திருந்தது. 220 மில்லியன் டொலர்கள் விற்கப்பட்டும் 90 மில்லியன் டொலர்கள் வாங்கப்பட்டும் இருந்தன. இதனைக் கருத்தில் கொண்டே ஜூனில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார்.

நாணயத்தை மிதக்க விடுதல் என்பதை எளிதாகச் சொன்னால், தனது நாணயத்தை வெளியிடுவதற்கு நிகராக தங்கமோ அல்லது வேறு சொத்துக்களோ ஒதுக்கீட்டில் இல்லாதபோது சந்தையின் எதிர்பார்ப்புக்கும் நிரம்பலுக்கும் ஏற்ப நாணயத்தின் மதிப்பை தளம்பலுக்கு விடுவதாகும். இதனை வெளிநாட்டுச் செலாவணியின் ஒதுக்கீடுகளே தீர்மானிக்கின்றன. இலங்கை வெளிநாடுகளுடனான கொடுக்கல் வாங்கல்களுக்காக டொலரை ஏற்றுக் கொண்டுள்ள ஒரு நாடு. அந்த வகையில் சந்தையில் உள்ள டொலரின் கேள்விக்கும் நிரம்பலுக்கும் ஏற்ற வகையில் இலங்கை நாணயத்தை மிதக்க விடுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அண்மையில் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி, இலங்கையின் சந்தையில் டொலர் அதிகமாகக் காணப்பட்டால் இலங்கை மத்திய வங்கி அதனை வாங்கி ஒதுக்கீடாக வைக்க வேண்டும். கடந்த இரண்டு வருடங்களிலும் இலங்கை மத்திய வங்கி இந்த வேலையைச் செய்தது. இதனால் நாட்டில் தற்பொழுது டொலருக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் காரணமாக, கையிருப்பிலுள்ள டொலரை வெளியிட முடியாத நிலையில் இலங்கை அரசாங்கம் இருக்கிறது. டொலருக்கு நிகராக இலங்கையின் ரூபா பலமில்லாததால் இலங்கை நாணயம் தற்போதுமதிப்பிறக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

ரூபாவை மதிப்பிறக்கம் செய்வது இலங்கையில் இதுதான் முதற்தடவையல்ல. ஆனாலும் 1977 க்குப் பின்னரில் இருந்தான காலப்பகுதிக்குள் நல்லாட்சியின் மூன்று வருடங்களில் மட்டும் ரூபா 30 வீதத்தால் மதிப்பிழந்திருக்கிறது.



இதற்கு அமெரிக்க டொலர் பலமடைந்தது தான் காரணம் என அனைத்துக்கும் அமெரிக்கா என்றிருக்கும் நிதியமைச்சர் காரணம் கற்பித்திருந்தாலும் இது உண்மையல்ல என்பதை தரவுகள் நிரூபிக்கின்றன. செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த நிதியாண்டில் அமெரிக்காவின் கடன் சுமை 21.52 டிரில்லியன் டொலர்களாகக் காணப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இது 6.3 வீத அதிகரிப்பாகும்.

இந்தக் கடன் தொகை அமெரிக்காவின் தேறிய தேசிய உற்பத்தியில் 105.4 வீதமாகும். அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்படுவதன்படி, அமெரிக்காவின் பாதுகாப்புக்கும் சுகாதார சேவைக்கும் செலவழிக்கப்படும் தொகையை விட அதிகமான தொரு தொகையை எதிர்வரும் காலங்களில் அமெரிக்கா தனது கடனையும் கடன் வட்டியையும் செலுத்துவதற்கு ஒதுக்க வேண்டியிருக்கும். இந்த நிலையில் அமெரிக்க டொலர் பலமடைந்திருக்கிறது என்றும் அதுவே டொலரின் பெறுமதி கூடுவதற்கான காரணம் என்றும் இலங்கையில் போதிக்கப்படுபவை ரூபாவின் மதிப்பிறக்கத்துக்கான காரணம் அல்ல என்பது தெளிவானது.

அப்படியானால் ரூபா என்றுமே இல்லாத அளவுக்கு மதிப்பிழந்ததன் காரணம் என்ன? இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கீட்டுக்குத் தேவையான டொலர் இலங்கைச் சந்தைக்கு வராமையும் இலங்கையிலிருந்து அதிகளவிலான வெளிநாட்டு நாணயம் வெளியேறுவதும் இதற்கான பிரதான காரணங்கள். இலங்கை தற்பொழுது வருடாந்தம் 11 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களையும் சேவைகளையும் ஏற்றுமதி செய்கின்றது. மறுபுறத்தில் 21 பில்லியன் டொலர் அளவில் இறக்குமதி செய்கின்றது. இந்த வகையில் வருடாந்த வர்த்தக நிலுவை 10 பில்லியன் டொலராக அமைகிறது. 2017 ஆம் ஆண்டின் வர்த்தக நிலுவை 9619 மில்லியன் டொலர்களாக இருந்தது. 2018 ஜூன் வரையிலான காலப்பகுதியில் ஏற்றுமதி வருமானமாக 6805 மில்லியன் டொலர்களும் இறக்குமதிச் செலவாக 13196 மில்லியன் டொலர்களுமாக இருந்துள்ளன. இந்தவகையில் முதல் ஆறு மாத காலப் பகுதியிலேயே 6391 மில்லியன் டொலர் வர்த்தக நிலுவையாக உள்ளது. இந்த அதிகரிப்பின் படி, வெளிநாட்டுச் செலாவணி உள்நோக்கி வராமலேயே இந்த ஆறு மாதங்களிலும் 6 பில் லியன் டொலர்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. ஒதுக்கீட்டில் டொலர் இல்லாமலேயே மேற்கொள்ளப்பட்ட இந்தச் செலவினங்கள் தான் டொலருக்கு நிகராக ரூபா பெறுமதி இழப்பதற்குக் காரணமாக இருக்கிறது என எளிதாகச் சொல்லி முடிக்கலாம்.

ஆனால் இப்படி என்னதான் இந்த நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகிறது என்பதனைப் பார்த்தால் ரூபாவின் மதிப்பிறக்கத்துக்கான காரணம் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டறியலாம். உள்நாட்டு உற்பத்திக்கான பெறுமானம் குறைக்கப்பட்டு அன்றாடப் பாவனைக்கான அனைத்தையுமே இறக்குமதி செய்கின்ற அவல நிலைக்கு நாட்டுத் தலைவர்கள் நாட்டை இட்டுச் சென்றிருக்கிறார்கள். பாடசாலையின் பாலர் வகுப்பு மாணவனும் தயாரித்துக் கொள்ள முடியுமான பட்டங்கள், கவண்கள் (உண்டிவில்லு) என்பவற்றிலிருந்து பாரிய தொழிற்சாலைகளில் தயாரித்துக் கொள்ள முடியுமான வாகனச் சட்டங்கள் வரை எல்லாமே இங்கு இறக்குமதி தான். 2017 தரவுகளின்படி ஏற்றுமதியை விட இறக்குமதி 1466 பில்லியன் ரூபாவினால் அதிகரித்திருக்கிறது. இதில் 686 பில்லியன் உணவுப் பண்டங்களுக்காக இந்த விவசாய நாட்டில் செலவிடப்பட்டிருக்கிறது.

நாட்புறமும் கடலால் சூழப்பட்டுள்ள இந்தத் தீவுக்கு 14 பில்லியன் ரூபாவுக்கு கருவாடு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. மாடுகளை உயிருக்கும் மேலாகப் போற்றும் தேசத்தில் பால் மற்றும் பாலுற்பத்திப் பொருட்களின் இறக்குமதிக்காக 48 பில்லியன் ரூபா செலவிடப்பட்டிருக்கிறது. பால், பாலுற்பத்திப் பொருட்களின் இறக்குமதி 2008 இல் 31 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. உணவுப் பண்டங்களின் இறக்குமதிச் செலவு கூட 2008 இல் இருந்த 217 பில்லியன் ரூபாவில் இருந்து 686 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருக்கிறது.

இவற்றை விட அதிகமாக நாட்டின் இறக்குமதியில் பெரும்பான்மையாகக் காணப்படுவது வாகனங்கள், எரிபொருள், மின்சார உபகரணங்கள் போன்றவையாகும். வாகன இறக்குமதிக்கென 2008 இல் செலவழிக்கப்பட்ட 366 பில்லியன் ரூபா 2017 இல் 522 பில்லியனாக அதிகரித்திருக்கிறது. உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியுமான டயர், டியூப் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்காக 2008 இல் 4.3 பில்லியன் செலவழிக்கப்பட்ட போதும் 2017 இல் அது 11.9 பில்லியனாக அதிகரித்திருக்கிறது.

பட்டம் தயாரிப்பது முதல் பட்டறைகளில் தயாரிக்கப்படுபவை வரை அனைத்துமே இங்கு உற்பத்தி செய்யக் கூடுமான நிலை இருந்த போதும் அந்நியச் செலாவணியை வெளியேற்றும் இறக்குமதிகளை கட்டுப்படுத்தும் கொள்கை அரசாங்கத்திடம் காணப்படாமை இந்த பாதகமான வர்த்தக நிலுவைக்கு காரணமாக அமைகிறது. உணவு உற்பத்தியை உள்நாட்டிலேயே நிவர்த்தி செய்துகொள்ள முடியுமான நிலை இருந்த போதிலும் இந்தியாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை காரணமாக இஞ்சி, வெள்ளைப் பூடு போன்றவை கூட தற்பொழுது இறக்குமதி செய்யப்படுகின்றன. களனி டயரை சியட்டுக்கு விற்பனை செய்த பின்னர் சியட் ரப்பர் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்கிறது. வாகனச் சட்டகங்கள் செய்வதற்கான தொழிற்சாலைகள் முன்னர் இலங்கையில் இயங்கிய போதும் அவற்றை மூடிவிட்டு புதிதாக வொக்ஸ் வகன் கம்பனி அமைக்கப்படவிருப்பதாக அரசாங்கம் பூச்சாண்டி காட்டியது.

இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தருகின்ற முக்கியமான மூலங்களில் ஒன்றாக ஆடைக் கைத்தொழில் இருக்கின்றது. ஆனாலும் ஆடைக் கைத்தொழிலுக்கான மூலப்பொருட்களில்

(பக்.11)

# வடக்கிலிருந்து வெளியேறியவர்களை மீள்குடியமர்த்த முன்னர்...


• நேசன்

என்னதான் பன்மைத்துவம் பேசினாலும் தனது இனம் என்று வரும் போது மனிதாபிமானமே மாயமாகிப் போவதைத் தான் இன்றைய உலகம் இனவாதம் என்கின்றது. வட மாகாணத்தில் பிட்டும் தேங்காய்ப் பூவும் போல, அண்ணன் தம்பி போல என்றெல்லாம் வாழ்ந்தவர்கள் தான் தமிழர்களும் முஸ்லிம்களும். ஆனால் என்ன நடந்தது? தமிழர்களின் விடுதலைக்கான போராட்டத்தில் முஸ்லிம் சமூகம் பலிக்கடாவாக்கப்பட்டது. என்ன காரணம் என்பது இதுவரை அறியப்படவில்லை. இருந்தாலும் அவர்கள் முஸ்லிம்களாக இருந்தார்கள் என்பது மட்டும் தான் ஒரே காரணம் என்பது நிகழ்வுகளின் தொகுப்பில் நன்றாக விளங்குகிறது.

வடமாகாண முஸ்லிம்கள் வேண்டுமென்றால் புலிகளின் நில வெறியின் காரணமாக அப்புறப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால், பொலன்னறுவையின் பள்ளித்திடல் மக்கள், அழிஞ்சிப்பொத்தானையில் அழிந்து போன பச்சிளம் பாலகர்கள், காத்தான்குடிப் பள்ளிவாசலில் தொழுகையில் இருந்த நிராயுதபாணிகள் என்றெல்லாம் கருவறுக்கப்படுவதற்குக் காரணம் நில வெறியல்ல. இனவெறி. முஸ்லிம்களின் வெளியேற்றத்துக்கு இராணுவத்துக்குத் துப்புக் கொடுத்தார்கள் என்றொரு காரணமும் பின்னர் கற்பிக்கப்பட்டது.

வடக்கிலிருந்த பெண்கள், குழந்தைகள் என 75,000 பேர் இந்த வேலையைச் செய்திருப்பார்களா? துப்புக் கொடுத்தவர்களைத் தேடிப் பிடித்து துப்பாக்கியால் அவர்களை விசாரிப்பதில் வல்லவர்களான புலிகள், துப்புக் கொடுத்தவர்களை கண்டு பிடிக்கத் தெரியாமல் ஒட்டுமொத்த இனத்தையுமே வடக்கு மண்ணிலிருந்து வெளியேற்றினார்கள் என்பதை புலிகளின் வீர காவியங்கள் தெரிந்த எந்தக் குழந்தை ஒப்புக் கொள்ளும்?

காட்டிக் கொடுக்கின்றார்கள் என்று முஸ்லிம்களை வடக்கிலிருந்து இனச்சுத்திகரிப்பு செய்த பின்னர் தானே புலிகளின் போராட்டம் தோல்வியடைந்தது? முஸ்லிம்களே அறிந்திராத பல பகுதிகளையும் தேடிப் பிடித்து இராணுவம் அழித்தது. இராணுவத்துக்கு இந்த இடங்களையெல்லாம் காட்டிக் கொடுத்தது முஸ்லிம்களா? இவர்கள் யார் என்பது தெளிவாகத் தெரிந்த பின்னும் அவர்களை சொகுசு வாழ்க்கை வாழ விட்டிருப்பது அவர்கள் முஸ்லிம்கள் இல்லைதானே என்பதினாலா?



இப்படியெல்லாம் பார்க்கும் போது 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடந்தது வெறும் துன்பியல் நிகழ்வு அல்ல. அப்பட்டமான இனவெறித் தாக்குதல். இன்றுள்ள தமிழ் மக்களும் இவர்களைப் போற்றிப் பாடுவது என்பது புலிகள் அழிந்தாலும் இந்த இனவெறி உணர்வுகள் அழியவில்லை என்பதையே காட்டுகிறது. இந்த இனவெறிதான் அவர்களைப் பாசிஸப் புலிகள் என்று பேசவைத்தது.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இராணுவம் வடக்கை மீட்டெடுத்த போதும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலங்களை அவர்களிடம் மீள ஒப்படைப்பதற்கு முயலாமல் புலிகளின் பினாமிகள் இன்றும் தடைபோட்டு வருகின்றன. யுத்தம் முடிந்த கையுடன் முஸ்லிம் மக்கள் தமது இடங்களுக்குச் சென்றால் சிலரது இடங்களை இராணுவம் கையகப்படுத்தியிருந்தது. இன்னும் சிலரது இடங்களை அங்கிருந்த மக்கள் கைப்பற்றியிருந்தார்கள். இவர்களது நிலங்களை இவர்களுக்கு மீட்டுக் கொடுப்பதற்கு உரியவர்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மாற்றமாக மீள்குடியேறுவதற்காக அங்கு வந்த போது அவர்களுக்கு பல நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறார்கள்.

அரச காணியிலிருந்து ஒரு பகுதி அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட போது அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்தது தமிழ் மக்களே. இவை எல்லாம் வடக்கில் இனவெறியே கோலோச்சுகிறது என்பதையும் அது தான் முஸ்லிம் சமூகம் அங்கு தமது இடங்களில் வாழ முடியாமைக்குக் காரணம் என்பதையும் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

75000 மக்கள் வெறும் பதினைந்து நாட்களில் (ஒக்டோபர் 16 -30) கட்டம் கட்டமாக வெளியேற்றப்பட்டமை அன்டன் பாலசிங்கம் ஒப்புக் கொண்ட துன்பியல் நிகழ்வுக்கு அப்பால் ஒரு பாரிய இனச் சுத்திகரிப்பு என்பதனை புலிகளோ புலிகளின் கொள்கைகளைத் தொடருகின்ற தமிழ்த் தலைமைகளோ மிக அண்மைக் காலம் வரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 780 ஆவது தீர்மானம் இனச் சுத்திகரிப்பு என்பதை வரையறுக்கிறது. தமது இனத்தை அல்லது மதத்தை முதன்மைப்படுத்துவதற்காக ஓர் இனத்தைச் சேர்ந்த ஆட்சியாளர் அல்லது ஒரு குழு இன்னொரு இனத்தைச் சேர்ந்த மக்களை அவர்களின் நகரங்கள் அல்லது கிராமங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றுதல், படுகொலை செய்தல், பாரபட்சம் காட்டுதல், ஆட்களைக் கடத்துதல், அச்சுறுத்துதல், மனித உரிமை மீறல்களில் ஈடுபடுதல் என்பன இனச்சுத்திகரிப்பாகும் என ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை வரையறுக்கின்றது.

உலகில் இத்தகைய கொடுஞ் செயல்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் மிகவும் சொற்பமாகவே நிகழ்ந்துள்ளன. செச்னியாவில் சேர்பியர்கள் செய்த இனச் சுத்திகரிப்புக்கு அடுத்ததாக இலங்கையில் புலிகள் முஸ்லிம்களை வேறோடு பிடுங்கியமையே மோசமான இனச்சுத்திகரிப்பாகக் கருதப்பட்டது. இதனை இனச்சுத்திகரிப்பாக அரசாங்கமோ புலிகளோ ஏற்றுக் கொள்ளாத போதும் 2015 நவம்பரில் தமிழ்மிரருக்கு கருத்து வழங்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இதனை ஒரு இனச்சுத்திகரிப்பாக ஏற்றிருந்தார்.

இந்த வகையில் பாசிஸப் புலிகள் வடமாகாண முஸ்லிம்களை வெளியேற்றியமை ஒரு இனத்தின் மீதான திட்டமிட்ட கருவறுப்பு என்றே கருதப்பட வேண்டியிருக்கிறது. ஐந்து இடங்களில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போதும் ஒவ்வொரு இடங்களிலும் வேறுவேறான காரணங்களே சொல்லப்பட்டிருக்கின்றன.

சாவகச்சேரியில் முஸ்லிம்கள் வாழ்ந்த பிர தேசங்களில் வாள்கள் மற்றும் வயர்லெஸ் கருவிகள் மீட்கப்பட்டதாகவும் முஸ்லிம்கள் தமக்கெதிராகச் சதி செய்வதாகவும் கூறியே சாவகச்சேரி முஸ்லிம்களை மூன்று நாட்கள் அவகாசத்தில் ஒக்டோபர் 16 ஆம் திகதி வெளியேற்றினர். ஒக்டோபர் 22 இல் மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது, உங்கள் கிராமத்திலிருந்து இராணுவத்துக்கு தகவல்கள் வழங்கப்படுகின்றன. எனவே உடனடியாக நீங்கள் இந்த ஊரை விட்டு வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டனர்.

வெளியிடங்களுடன் தொடர்புகள் குறைந்த முல்லைத்தீவு முஸ்லிம்களும் உளவாளிகள் என்ற குற்றம் சுமத்தியே வெளியேற்றப்பட்டனர். கடைசியாக ஒக்டோபர் 30 ஆம் திகதி யாழ்ப்பாண முஸ்லிம்களை விரட்டுவதற்காக ஜின்னா மைதானத்தில் முஸ்லிம்கள் அனைவரையும் திரட்டி ஆஞ்சநேயர் எனும் இளம்பரிதியினால் ஒரு குற்றப் பத்திரமே வாசிக்கப்பட்டது. கிழக்கிலே நாளாந்தம் 30 தமிழ்ப் பெண்கள் முஸ்லிம்களால் வல்லுறவுக்குட்படுத்தப்படுகிறார்கள். 20 இலிருந்து 30 வரையான தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். அதே அளவானவர்கள் காயமடைந்தும் வருகிறார்கள். இதனால் வடக்கிலே தமிழ் மக்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். முஸ்லிம்களை அழிப்பதற்காக அவர்கள் காத்திருக்கின்றனர். எனவே அடுத்த இரண்டு மணி நேரத்துக்குள் யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கள் வெளியேற வேண்டும். தமிழீழத்தில் உழைத்தவை எல்லாம் தமிழீழத்துக்கே சொந்தம். உங்கள் சொத்துக்களை எல்லாம் அப்படியே வைத்துவிட்டுச் செல்லுங்கள் என்று அந்தக் குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது வெளியேற்றுவதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் சொல்லப்பட்டுள்ளன. இவை எல்லாம் வெறுமனே சோடித்தவைகள் என்பது தெள்ளத் தெளிவாக இருந்த போதிலும் கூட தமது பாசிஸ முகத்தை மறைப்பதற்காக முஸ்லிம்கள் மீது புலிகள் வீணான பழிகளைச் சுமத்தினர். இந்த அப்பட்டமான இனவாதத்தின் காரணமாக இன்றுவரை முஸ்லிம்கள் தாங்கவொண்ணாத் துயரங்களை

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL

49, S Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## ...28....?

வரலாற்றில் பதியப்பெற்ற கறுப்புப் புள்ளி. இந்த மாதத்துடன் 28 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. வடக்கிலிருந்த முஸ்லிம்கள் ஏன் எதற்கு என்ற காரணம் இன்றியே துரத்தியடிக்கப்பட்ட சோகமான வரலாற்றின் வடுக்கள் இன்னும் ஆறவில்லை. ஒன்றாய்க் கூடி வாழ்ந்தவர்கள் தமக்கு இவ்வளவு பெரிய அநியாயத்தைச் செய்வார்களா என்பதை நினைத்தும் பார்த்திராத நிலையில் தான் இந்தப் பேரவலம் நிகழ்ந்தது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை வடக்கிலே அவர்களுடன் வாழ்ந்த முஸ்லிம் சமூகம் மறுதலிக்கவில்லை. ஒத்துழைப்பு வழங்கினார்கள். ஆனாலும் புலிகளின் மண் உரிமைப் போராட்டம் முஸ்லிம் மக்களை தமது சொந்த மண்ணிலிருந்து வெளியேறச் செய்தது. அவர்களின் நிலங்களைக் காவு கொண்டது. அவர்களின் பூர்வீகத்தைப் பறித்தது. அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட்டு உழைத்தவையெல்லாம் பறித்தெடுக்கப்பட்டன. அசையாச் சொத்துக்களில் அடங்கிய வீடுகள் கட்டடங்களில் இருந்த செங்கற்கல் கூட பிடுங்கப்பட்டன. இவ்வளவு அநியாயம் நடந்த பின்னும் ஒரு துன்பியல் நிகழ்வாக இதனை ஏற்றுக் கொண்டு புலிகள் தமது பாசிஸ வெறியை உமிழ்ந்தார்கள்.

தற்பொழுது முஸ்லிம்களை வெளியேற்றிய புலிகளை அரசாங்கம் அழித்து விட்டது. ஆனாலும் இவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்ச்சிகள் வட மாகாணத்தில் மிகவும் உணர்வுபூர்வமாக உரிமையுடன் நடத்தப்பட்டு வருகின்றன. தற்பொழுது வடமாகாணத்தை ஆளுகின்றவர்கள் தமது பிரதேசத்தில் வாழ்ந்து நிலங்களைப் பறிகொடுத்த மக்களை தமது பூர்வீக இடங்களில் மீள்குடியேற்றுவதற்கு அக்கறை காட்டவில்லை. சொல்லப் போனால் போரில் கொல்லப்பட்டவர்களை நினைவுபடுத்துகின்ற அளவுக்கு தாயகத்தை இழந்த முஸ்லிம் மக்களின் விடயத்தில் வடமாகாண அரசு கவனம் செலுத்தவில்லை. இழந்த காணிகளை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கும் விடயத்தில் வடமாகாண சபை நீதியாக நடந்து கொள்ளவில்லை என்றே மக்கள் தெரிவிக்கின்றனர். புலிகள் விட்டுச் சென்ற இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் விதமாகவே இந்தச் செயற்பாடுகள் அமைந்திருப்பதாக மக்கள் கருதுகின்றனர்.

மறுபுறத்தில் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த தமிழ் மக்களும் ஆரம்பத்தில் இந்த வெளியேற்றம் தொடர்பில் கவலை தெரிவித்தாலும் தற்போது இனத்துவ உணர்வுகள் மேலோங்கியதொரு சூழலையே அங்கு காண முடிகிறது. மீள் குடியேறுவதற்காக முல்லைத்தீவுப் பிரதேசத்தில் அரச காணி பகிர்ந்தளிக்கப்பட எத்தனிக்கப்பட்டபோது அதற்கெதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். முஸ்லிம்கள் குடியிருந்த நிலங்களுக்கு மேலதிகமாக அவர்களுக்கு காணி வழங்கப்படவிருப்பதாக கூப்பாடு போட்டனர். 28 வருடங்களில் இன்னொரு தலைமுறை வளர்ந்திருப்பதையும் அவர்களுக்கும் குடியிருப்புக் காணிகள் வழங்கப்பட வேண்டும் என்ற நியாயங்களையும் தாண்டி அங்குள்ள மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

28 வருடங்களுக்கு முன்னர் பாசிஸப் புலிகள் மேற்கொண்ட அநியாயத்துக்கு பிராயச்சித்தம் கோரும் நிலைக்குப் பதிலாக அந்த அநியாயங்களுக்குத் துணை போகும் நிலையே இன்று வடமாகாணத்தில் காணப்படுகிறது. வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் கால் நூற்றாண்டுகளாகியும் சொந்த இடங்களுக்கு மீள முடியாமல் அகதி வாழ்க்கை வாழுகின்ற நிலையை மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு இனத்துவச் சாயம் பூசுவது தவிர்க்கப்பட வேண்டும்.

வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு தமது பூர்வீகக் காணிகளை மீளப் பெற்றுக் கொடுப்பதிலும், அவர்களது குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதிலும் வடமாகாண சபைக்கு தவிர்க்க முடியாத பொறுப்பு இருக்கிறது. இதனை அவசரமாக நிறைவேற்றுவதனூடாக வடமாகாண சபை ஏனைய சமூகங்களுடனான தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு,
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srpckwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# ரணில் யாருக்கு எதிரி?

• நிலன்த இளங்கமுவ

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்துக்கள் அதிகம் பிரசித்தமானவை. ரணிலை 'ஒரு நரி' என்று பாலசிங்கம் வர்ணித்திருந்தார். குறிப்பாக நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின் போது புலிகள் இயக்கத்தின் தலைமைப் பீடத்திற்கும் அதன் கிழக்குப் பிரிவுத் தலைமைக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கு ரணிலை ஒரு காரணமாகக் காட்டுவோரும் உண்டு. அப்படிக் காட்டுவோர் பாலசிங்கம் கூறிய 'ரணில் ஒரு நரி' என்ற வாசகத்தையே மேற்கோள் காட்டுவதுண்டு.

2005 இல் ரணில் பதவிக்கு வருவதை புலிகள் தடுத்து நிறுத்திய பொழுதும் மேற்படி வாசகம் மேற்கோள் காட்டப்பட்டது. நோர்வே செய்த சமாதானத்தை ஒரு தர்மர் பொறி என்று வர்ணித்த தமிழ்த் தரப்பைச் சேர்ந்த பலரும் அச்சமாதானத்தின் ஒரு தரப்பாகிய ரணிலை நம்பத் தயாராக இருக்கவில்லை. ரணில் ஒரு தந்திரமான ஆள் என்ற படிமம் பெரும்பாலானவர்கள் மத்தியில் ஆழப்பதிந்து விட்டது. அவர் அரசியலில் குள்ளநரி என்று வர்ணிக்கப்பட்ட ஜெயவர்த்தனாவின் மரு மகன் என்பதும் அவரை அப்படிப் பார்க்க ஒரு காரணம். ஆனால் ரணிலோடு பல்கலைக்கழகத்தில் கூடப் படித்தவர்கள் அவரை மென்மையானவர் என்றும் நெகிழ்ச்சியானவர் என்றும் வர்ணிக்கிறார்கள். அந்நாட்களில் அவர் ஒரு மோசமான இனவாதி அல்லவென்றும் அவர்கள் கூறுவதுண்டு.

அதே சமயம் சிங்கள மக்களைப் பொறுத்தவரை குறிப்பாக கிராமப் புற சிங்கள மக்கள் மற்றும் கடும்போக்குவாதிகளைப் பொறுத்தவரை ரணில் ஒரு தண்டு சமத்தான மிடுக்கான தலைவர் அல்ல. மீசையில்லாத மேற்கத்தயமயப்பட்ட முகம், தோற்றம், நடை, உடை பாவனை வாழ்க்கை முறை என்பவற்றைக் கொண்ட ரணிலை அவர்கள் சிங்கள - பௌத்த தேசியவாதத்திற்கு தலைமை தாங்கக் கூடிய ஒருவராகக் கருதவில்லை. நகர்ப்புற படித்த நடுத்தர வர்க்கச் சிங்கள மக்கள் மத்தியில் ரணிலுக்கு அதிகளவு ஆதரவாளர்கள் உண்டு. ஆனால் விருந்துபசாரங்களில் கைகளில் மதுக் கிண்ணத்தை ஏந்தியபடி கோட்டும், சூட்டுமாக முதுகைக் கோணி நடனமாடும் ஒருவரை சிங்களக் கடும்போக்குவாதிகள் அதிகம் நம்பிக்கையோடு பார்க்கவில்லை. குறிப்பாக யுத்த வெற்றி நாயகனாக காட்சியளிக்கும் மஹிந்தவோடு ஒப்பிடுகையில் சிங்கள - பௌத்த கடுந்தேசியவாதத்திற்கு தலைமை தாங்கும் தகுதி ரணிலுக்கோ, மைத்திரிக்கோ இல்லையென்று சிங்கள - பௌத்த கடும்போக்குவாதிகள் நம்புகிறார்கள்.

இந்த நம்பிக்கைகளைத்தான் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன. ரணிலின் தலைமையின் கீழ் அவரது கட்சிக்குக் கிடைத்த முப்பதாவது தோல்வி கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவு எனக் கூறப்படுகிறது. முன்னைய தேர்தல்களோடு ஒப்பிடுகையில் மஹிந்த பெற்ற வாக்குகளின் அளவு இம்முறை குறைவுதான் என்றாலும் ஒட்டுமொத்த விளைவைக் கருதிக் கூறின் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் மீண்டும் ஒரு தடவை ரணிலின் தலைமைத்துவத்தை ஆட்டம் காணச் செய்துள்ளன.

தேர்தல் முடிவுகளின்படி பெரும்பாலான கிராமப் புறங்கள் மஹிந்தவின் கைக்குள் சென்றுவிட்டன. அதே சமயம் நாடாளுமன்றம் தொடர்ந்தும் ரணிலின் கைக்குள்தான் இருக்கிறது. அதே சமயம் மைத்திரி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகக் காணப்படுகிறார். அவர் தனது கட்சிக்கும், கூட்டரசாங்கத்திற்குமிடையே கிழிபடும் ஒருவராகக் காணப்படுகிறார். இது ஏறக்குறைய சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்தில் ரணில் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றிய பொழுது காணப்பட்ட 'இரட்டை ஆட்சியை' ஒத்த ஒரு நிலமைதானா? என்ற கேள்வி எழுகிறது.

இப்படி ஒரு நிலமை வரலாம் என்பதனை ரணில் ஏற்கெனவே முன்னுணர்ந்திருந்தார். இது விடயத்தில் அவர் தன் மாமனார் ஜெயவர்த்தனாவைப் போலவே தன்னுடைய நோக்கு நிலையிலிருந்து முற்காப்பு நடவடிக்கைகளை முன்னெச்சரிக்கையோடு மேற்கொண்டிருந்தார். தான் இம்முறையும் நிச்சயமின்மைகளின் மத்தியில்தான் ஆட்சியைக் கொண்டு நடத்த வேண்டியிருக்கும் என்பதனை ரணில் நன்கு முன்னுணர்ந்திருந்தார். இனப்பிரச்சினைக்கு ஏதோ ஒரு தீர்வைக் கொண்டு வரவேண்டுமென்று மேற்கு வற்புறுத்தும் என்பது அவருக்குத் தெரியும். அவ்வாறு ஒரு தீர்வை கொண்டுவர முற்பட்டால் அது கடும்போக்குச் சிங்கள பௌத்தர்களைத் தனக்கெதிராகத் திருப்பும் என்பதும் அவருக்குத் தெரியும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு பிடிப்பது தனது தலையைப் பதம் பார்க்கக் கூடும் என்பதனை அவர் சந்திரிகாவின் காலத் [illegible] அப்படியொரு

நிலமை இம்முறையும் வரக்கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கையோடு அவர் பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரத்தை அது ஏதோ ஒரு விதத்தில் கட்டுப்படுத்துகிறது. அதன்படி ஒரு நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டு நாலரை ஆண்டுகளின் பின்னரே அதற்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரலாம். இரட்டைப் பிரஜா உரிமையைப் பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற ஏற்பாடும் மேற்படி பத்தொன்பதாவது திருத்தத்திலேயே உண்டு. மஹிந்தவின் சகோதரர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தடுப்பதே ரணிலின் நோக்கம். இப்பொழுது ரணிலை பிரதானமாகப் பாதுகாப்பது இந்த ஏற்பாடுதான்.

இரண்டாவதாக அவரைப் பாதுகாப்பது நாடாளுமன்றத்தில் யு.என்.பி. இற்கு இருக்கும் 106 ஆசனங்கள். மூன்றாவது, அவருக்கும் - மைத்திரிக்கும் இடையிலான பிரிந்து போக முடியாத தங்கு நிலை உறவாகும். 29 தடவைகள் தோல்வியுற்ற ரணிலுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது மைத்திரியுடனான சேர்க்கைதான். மஹிந்தவால் புறக்கணிக்கப்பட்டு அவமதிக்கப்பட்ட மைத்திரிக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் புகழையும் ராஜபோகத்தையும் பெற்றுக் கொடுத்தது ரணிலுடனான சேர்க்கைதான். எஸ்.எல்.எப்.பி.யை பிளவுண்ட நிலையில் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு ரணி



லும் மைத்திரியும் சேர்ந்திருக்க வேண்டும். இந்த இரண்டு பேருக்குமிடையிலான தங்கு நிலை உறவைப் பாதுகாப்பதற்கு மேற்கு நாடுகளும், இந்தியாவும் தயாராகக் காணப்படுகின்றன. அது இப்பொழுது மைத்திரிக்குத் தேவைப்படாவிட்டாலும் மேற்கு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் தேவை.

ரணில் - மைத்திரி கூட்டு எனப்படுவது ஓர் உள்நாட்டுத் தேவை மட்டுமல்ல. அதற்கொரு அனைத்துலகத் தேவையும் பிராந்தியத் தேவையுமுண்டு. இந்தக் கூட்டு மேற்கினதும் இந்தியாவினதும் செல்லக் குழந்தை. இக்குழந்தையை கத்தியின்றி ரத்தமின்றி மேற்படி நாடுகள் பெற்றெடுத்தன. இக்குழந்தை பிறந்ததிலிருந்து இச்சிறிய தீவில் மேற்கிற்கும், இந்தியாவிற்கும் ஒப்பீட்டளவில் சாதகமான ஒரு வலுச்சம நிலை உருவாக்கப்பட்டது. எனவே அக்குழந்தையை சாகவிட மேற்படி நாடுகள் தயாரில்லை. இக்குழந்தையானது இப்பொழுது அடுத்தடுத்து இரண்டு கண்டங்களைக் கடந்திருக்கிறது. முதலாவது பிணைமுறி விவகாரம். இரண்டாவது உள்ளூராட்சி சபைத் தேர்தல். தேர்தல் முடிவுகளை வைத்துச் சொன்னால் எதிர்காலத்தில் இக்குழந்தைக்கு மேலும் பல கண்டங்கள் உண்டு.

அதே சமயம் இக்குழந்தையை மேற்கு நாடுகள் மட்டும்தான் பாதுகாக்கின்றன என்பதல்ல. இதைப் பாதுகாக்க வேண்டிய ஒரு தேவை மஹிந்தவிற்கும் உண்டு என்று சில விமர்சகர்கள் கூறுகிறார்கள். ஏனெனில் இலங்கை அரசை போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து பாதுகாத்தது இக்குழந்தைதான். இக்குழந்தை பிறந்ததால் ஏற்பட்ட நற்பலன்களே இலங்கை அரசை அனைத்துலகத்தால் தனிமைப்படுத்தப்படும் ஓர் ஆபத்திலிருந்து காப்பாற்றின. அதை ஒரு சாதனையாக மைத்திரி அடிக்கடி கூறி வருகிறார். ராஜபக்ஷாக்களை மின்சாரக் கதிரையிலிருந்து பாதுகாத்தது இந்த அரசாங்கமே என்று அவர் கூறுவதுண்டு. இப்படிப் பார்த்தால் இனப்படுகொலைக்கு வெள்ளையடிக்கும் வேலையை ரணில் - மைத்திரி கூட்டே செய்து வருகிறது. எனவே அனைத்துலக அளவில் தனக்கேற்பட்ட அபகீர்த்தியையும், சட்டச் சிக்கல்களையும் மேவிக் கடப்பதற்கு ராஜபக்ஷவிற்கு ரணில் தேவை என்று மு. திருநாவுக்கரசு கூறுகிறார்.

ஆனால் இதற்கு முன்னரும் மஹிந்த ரணிலைப் பாதுகாத்திருக்கிறார். ரணிலுக்கு எதிராக அவருடைய சொந்தக்கட்சிக்குள் முன்னெடுக்கப்பட்ட சதி முயற்சிகளைப் பற்றி புலனாய்வு அறிக்கைகள் மூலம் அறிந்து ரணிலை மஹிந்த எச்சரித்த தருணங்களும் உண்டு. ரணிலைப் போன்ற தொடர்ந்து தோல்வியைத் தழுவும் ஒருவரை யு.என்.பியின் தலைவராக வைத்திருப்பதற்கு மஹிந்த விரும்பக்கூடும். ஏனெனில் ரணில் தலைமை தாங்கும் வரையிலும் யு.என்.பி.யானது எஸ்.எல்.எவ்.பி.யிற்கு ஒரு பெரிய சவாலாக எழ முடியாது என்று மஹிந்த நம்பக்கூடும். எனவே ரணிலைப் போன்ற ஒருவரை தொடர்ந்தும் யு.என்.பிக்குத் தலைவராக வைத்திருக்க மஹிந்த விரும்புவார்.

இப்படி ஆபத்தான தருணங்களில் ரணிலை மஹிந்த பாதுகாத்த காரணத்தால் இருவருக்குமிடையே தங்குநிலை நட்பொன்று நிலவுவதாக எடுத்துக் கொள்ளலாம். இது காரணமாகவே ஆட்சி மாற்றத்திற்கான கூட்டு உருவாக்கப்பட்ட பொழுது சில சமயம் அது பிழைத்தால் சந்திரிக்காவும், மைத்திரியும்தான் அதிகம் ஆபத்துக்குள்ளாவார்கள் என்றும் கூறப்பட்டது. ரணில் அவர்களளவிற்கு பயப்படத் தேவையில்லையென்றும் கூறப்பட்டது.

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரச்சாரக் களத்திலும் ரணில் மஹிந்தவை தனிப்பட்ட முறையில் தாக்கியது குறைவு என்று கூறப்படுகிறது. அது போலவே தன்னைப் போர்க் குற்றச் சாட்டுக்களிலிருந்தும் அனைத்துலக அளவில் அபகீர்த்திக்குள்ளாவதிலிருந்தும் ரணில்தான் காப்பாற்றினார் என்று மஹிந்த நம்புவதாகவும் தெரிகிறது. கூட இருந்து தன்னைக் கவிழ்த்த மைத்திரியை அவர் எதிரியாகப் பார்க்கும் அளவிற்கு ரணிலைப் பார்க்கவில்லையென்றும் தெரிகிறது.

கட்சிக்குள் தன்னால் பின்தள்ளப்பட்ட சந்திரிக்காவை விடவும் அவர் ரணிலைக் குறைந்தளவே வெறுக்கிறார். அது மட்டுமல்ல ஆட்சி மாற்றத்திற்கான ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு மஹிந்த பதவியைக் கைவிட மாட்டார் என்றவாறாக ஊகங்கள் எழுந்தன. ஆனால் அப்பொழுது ரணில் மஹிந்தவைத் தேடிச் சென்று சந்தித்தார். அச்சந்திப்பின் பின்னர் ஆட்சி மாற்றம் சுமுகமாக நிகழ்ந்தது. இப்படிப் பார்த்தால் அச்சந்திப்பிற்கு ஏதோ ஒரு முக்கியத்துவம் உண்டு.

எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் ரணில் மேற்கு நாடுகளிற்கும் மிகவும் விருப்பத்திற்குரிய ஒரு தலைவர். அதே சமயம் சிங்கள பௌத்த கடும்போக்கு வாதத்தின் தலைவராகக் காணப்படும் மஹிந்தவிற்கும் நண்பர். அதே சமயம் மஹிந்தவிற்கு எதிரான மைத்திரிக்கும், சந்திரிக்காவிற்கும் அவர் நண்பர். அதை விட அரசாங்கத்திற்கு வெளியில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு அவருக்கு நற்சான்றுப் பத்திரங்களை வழங்கும் சம்பந்தரும் அவருக்கு நண்பர். வடமராட்சி கிழக்கிற்கு அவரை அழைத்துச் சென்று நுங்கு வெட்டிக் கொடுக்கும் சுமந்திரனும் அவருக்கு நண்பர். இப்படிப் பார்த்தால் ரணில் யாருக்கு எதிரி?

இதுதான் ரணிலின் பலம். இத்தகைய அர்த்தத்தில் கூறின் அவர் மாமனார் ஜெயவர்த்தனாவின் அசலான வாரிசு எனலாம். மஹிந்தவைப் போல மீசையும், மிடுக்குமாக நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நிற்கும் ஒரு தலைவர் அவரல்ல. ஆனால் எல்லாத் தோல்விகளுக்குப் பின்னரும் தனது கட்சிக்குள் தனக்கெதிராக தலையெடுத்த எல்லாச் சதி முயற்சிகளுக்குப் பின்னரும் உயிர் பிழைத்திருக்க வல்ல ஒரு வலிய சீவன் அவர். இப் பிராந்தியத்திலேயே முப்பது தடவைகள் தோற்ற பின்னும் எதுவிதத்திலோ தன்னை தக்க வைத்துக் கொள்ள அவரால் முடிகிறது.

உள்நாட்டில் அவர் நிச்சயமின்மைகளின் மத்தியில் நிம்மதியிழந்து தவிப்பவராக இருக்கலாம். ஆனால் அனைத்துலக அளவிலும், பிராந்திய அளவிலும் அவருக்கு கவர்ச்சி மிக அதிகம். உள்நாட்டில் ஒப்பீட்டளவில் பலவீனமாகக் காணப்படும் அதே சமயம், அனைத்துலக அரங்கில் மிகப் பலமாகக் காணப்படுகின்ற தலைவர் அவர். வெட்ட வெட்டத் தழைக் கும் ஒரு நூதனமான அரசியல் செடி அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிந்து செல்லும் முஸ்லிம் பொருளாதாரம்

# வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் தொகை அதிகரிக்கின்றதா?



• றவூப் ஸெய்ன்

ஒரு சமூகத்தின் எழுச்சியிலும் கௌரவமான மேலான்மையிலும் பொருளாதாரம், ஆன்மீகம், சிறந்த சமூகக் கட்டமைப்பு, கல்வி ஆகிய நான்கும் தவிர்க்க இயலாத கூறுகளாகும். பொருளாதாரப் பின்னடைவுள்ள சமூக அமைப்பில் கலாசாரம், ஆன்மீகம் கூட பின்னடைவதற்கான வாய்ப்புள்ளது.

இலங்கை முஸ்லிம் சமூகம் அறேபிய வர்த்தகர்கள் மூலம் உருவாகியது. இடைக்காலத்தில் தென்னிந்திய வணிகர்களும் அதில் இணைந்தனர். வணிகமே அறேபியர் வருகைக்கான மூல காரணம். தொடக்கத்திலிருந்து இன்று வரை வணிகத்தோடு முஸ்லிம்கள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். இதனால்தான் இலங்கை முஸ்லிம்கள் ஒரு வணிக சமூகம் (Business Community) என்று அழைக்கப்பட்டு வருகின்றனர்.

அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களாக பெரும்பான்மை முஸ்லிம்கள் இருப்பதற்கும் அவர்களின் வணிக ஈடுபாட்டுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளது. ஐ.தே.க.வின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் அறிமுகம் முஸ்லிம்களின் வணிகத்திற்கு இடைஞ்சலற்ற பாதையை திறந்து விட்டதாக முஸ்லிம்கள் எண்ணுகின்றனர். அதனால்தான் இன்னும் பலரின் உடம்பில் பச்சை இரத்தம் ஓடுகின்றது.

வியாபாரச் செழிப்பினால் முஸ்லிம் சமூகம் ஆடம்பரமாகவும் படாடோபமாகவும் வாழ்ந்து வந்தார்கள். தற்போதும் அந்நிலை நீடிக்கின்றதா என்பது விவாதத்திற்குரியதாயினும், கடந்த கால உண்மை அதுவாகவே இருந்தது.

இந்தியாவின் பிரபல எழுத்தாளர் வசுந்தரா மோகன், தனது நூலொன்றில் இலங்கை முஸ்லிம்கள் குறித்து குறிப்பிடும்போது, ''இலங்கை முஸ்லிம்கள் புரியாணி உண்பதிலும் ஐ.தே.க.வுக்கு வாக்களிப்பதிலும் நன்கு அறியப்பட்டவர்கள்'' (Sri Lankan Muslims are well known for eating Buriyani and voting UNP) பார்க்க வசுந்தரா மோகன், அடையாள நெருக்கடியும் இலங்கை முஸ்லிம்களும்) என்கிறார். வணிகப் பகட்டையும் ஐ.தே.க.வுடனான உறவையும் அவர் இவ்வாறு இணைத்துப் பேசுகிறார்.

இலங்கை முஸ்லிம்களின் பொருளாதாரத்தை இரண்டு வகையில் பிரித்து நோக்கலாம். முஸ்லிம்கள் செறிவாக வாழும் வடக்குக் கிழக்கில் விவசாயம், மீன்பிடி ஆகியனவே பொருளாதார மூலமாகக் காணப்படுகின்றது. இதனை விவசாயப் பொருளாதாரம் எனலாம். 60% முஸ்லிம்கள் வாழும் தெற்கில் பெரும்பாலும் வர்த்தகப் பொருளாதாரமே நிலைபெற்றுள்ளது.

வரலாற்று ரீதியில் இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தில் முஸ்லிம்களே முன்னணியில் இருந்துள்ளனர். கலாநிதி அமீர் அலி குறிப்பிடுவது போன்று 19 ஆம் நூற்றாண்டின் அரை இறுதிப் பகுதி வரை இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் முஸ்லிம்கள் 50% இற்கும் அதிகமான பங்கினை வகித்துள்ளனர். பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை உள்ளிட்டு, மாணிக்கம், வாசனைத் திரவியங்கள், தைத்த ஆடைகள், யானைத் தந்தங்கள் என்பவற்றை ஏற்றுமதி செய்வதிலும், இரும்பு, இறப்பர் உற்பத்திகளை இறக்குமதி செய்வதிலும் தொடக்க கால முஸ்லிம் கள் முக்கிய பங்கு வகித்தனர். சர்வதேச வணிகத்தில் மட்டுமன்றி, உள்ளூர் வணிகத்திலும் முஸ்லிம்களே பிரகாசித்தனர்.

இந்தப் பின்புலத்திலேயே இலங்கை முஸ்லிம்கள் வணிகச் சமூகம் எனவும் செல்வம் கொழிக்கின்ற, செல்வாக்குள்ள சமூகம் என்றும் அறியப்பட்டனர்.

ஆனால், இன்றைய இலங்கைச் சூழலில் இந்த வரலாற்றுப் பெருமைகளை மாத்திரம் பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

மார்கா நிறுவனம் 1986 இல் வெளியிட்ட இலங்கை முஸ்லிம் கள் குறித்த ஆவணம் மற்றும் இலங்கை முஸ்லிம்கள் என்ற வரலாற்று நூலில், இலங்கை முஸ்லிம்களின் ஏற்றுமதிப் பங்கு எனும் தலைமைப்பிலான கட்டுரை என்பவற்றோடு இன்றைய நிலமைகளை ஒப்பிட்டால், நிலைமை கவலைக்கிடமாக உள்ளதை உணரலாம்.

முஸ்லிம்களிடையே நகர வறுமை (Urban Poverty) முன்பை விட கடந்த பத்தாண்டு இடைவெளியில் அதிகரித்துள்ளது. ஸகாத் நிறுவனங்களின் அறிக்கைகளை நோக்கும்போது ஸகாத் பெறுவோரின் எண்ணிக்கை பன்மடங்கு பெருகியுள்ளது. கடும் வறுமையினால் வெளிநாடு செல்லும் பெண்களின் எண்ணிக்கையில் பெரு வெடிப்பு ஏற்பட்டுள்ளது. குடும்பங்களில் தங்கி வாழ்வோரின் சராசரி எண்ணிக்கையிலும் மாற்றம் நிகழ்ந்துள்ளது. யாசகர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகின்றது.

இத்தனைக்கும் மத்தியிலேயே அவ்வப்போது திட்டமிட்டு நடத்தப்படுகின்ற இனக் கலவரங்களில் முஸ்லிம்களின் சொத்துக்கள் அழிக்கப்படுகிறன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக மாவனல்லையில் இடம்பெற்ற இனக் கலவரத்தில் சுமார் 500 கோடிப் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. சமீபத்திய பேருவளை, தர்காநகர் தாக்குதல்களில் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் இலக்கு வைத்து தாக்கப்பட்டதில் சுமார் 300 கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இந்நிலையில் இலங்கை முஸ்லிம்களின் விவசாய, வர்த்தக பொருளாதாரத்தின் இன்றைய நிலைமைகள் நாட்டின் பொருளா தாரத்தோடு ஒப்பிடும்போது எந்த இடத்தில் உள்ளது, மொத்த தேசிய வருமானத்தில் முஸ்லிம்களின் பங்கேற்பு வீதம் என்ன என்பது குறித்தெல்லாம் ஆராய வேண்டியுள்ளது.

2014 இல் இலங்கை அரசாங்கம் கடந்த கால் நூற்றாண்டு கால இடைவெளியில் இலங்கையில் வறுமை நிலை தணித்துள்ளதா என்பது குறித்து உத்தியோகபூர்வ ஆய்வொன்றை மேற்கொண்டது. இந்த ஆய்வின் முடிவுகள் முஸ்லிம் சமூகத்தின் கவனத்தைப் பெரிதாக ஈர்க்கவில்லை. ஆனால், முஸ்லிம்கள் கூர்ந்து கவனிக்க வேண்டிய சில முக்கிய உண்மைகளை இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது.

மாறி மாறி வரும் அரசாங்கங்கள் அவ்வப்போது தமது பொருளாதாரக் கொள்கைகளையும் மாற்றிக் கொள்கின்றன. எந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தாலும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லக் கூடிய தூரநோக்குள்ள நிலையான பொருளாதாரக் கொள்கையொன்று இலங்கைக்கு இல்லை என்பதை இந்நாட்டின் பொருளியல் நிபுணர்கள் பலபோது சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விமர்சனங்களுக்கு மத்தியிலேயே முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆய்வை மேற்கொண்டது.

கடந்த கால் நூற்றாண்டில் இலங்கையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் வீதாசாரம் குறைந்துள்ளதா என்பதே ஆய்வின் தொனிப்பொருளாகும். அல்லது ஆய்வுப் பிரச்சினையாகும். இதன் மிக முக்கிய முடிவுகளில் ஒன்று கடந்த 25 ஆண்டுகளில் 34 வீதமாகக் காணப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் தொகை 8 வீதமாகக் குறைந்துள்ளது என்பதுதான். இது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் தொகை கணிசமாகக் குறைந்துள்ளது என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளது. இதே ஆய்வு முன்வைக்கும் இன்னொரு முடிவு கவலைக்கிடமானது. அதாவது இதே காலப் பகுதிக்குள் இலங்கையில் வாழும் பல்வேறு சமூகங்கள் மத்தியல் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் வீதாசாரம் எவ்வாறு மாற்றமடைந்து வந்துள்ளது என்பதை இவ்வாய்வு குவிமையப்படுத்தியுள்ளது.

அதன்படி தேசிய ரீதியில் நம்பிக்கைக்குரிய மாற்றமொன்று நிகழ்ந்துள்ள போதும் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் வீதாசாரம் 25% என இவ்வாய்வு கூறுகின்றது. அதாவது 2 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட முஸ்லிம் சமூகத்தில் சுமார் 5 இலட்சம் பேர் பக்கீர்களாகவும் மிஸ்கீன்களாகவும் வாழ்கின்றனர் என்பதே இதன் அர்த்தமாகும். இதன் பிரத்தியட்சமான பல வெளிப்பாடுகளை இன்று முஸ்லிம் சமூகத்தில் பார்க்கின்றோம்.

குறிப்பாக ரமழான் மாதத்தை இந்நாட்டிலு சிங்கள வணிகர்களும் நகர்ப் புறங்களில் வாழ்கின்ற சிங்கள மக்களும் எவ்வாறு புரிந்து வைத்துள்ளனர் என்பது ஒரு புறம் வேடிக்கையானது. இன்னொரு புறம் வேதனை மிக்கது. பெரும்பாலும் அவர் இம் மாதத்தை முஸ்லிம் பிச்சைக்காரர்களின் மாதம் என்றே கூறி வருகின்றனர்.

நகர்ப் புறங்களிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வருமானமீட்டும் நோக்கில் வறுமைப்பட்ட சில முஸ்லிம் பெண்கள் விபச்சாரம் போன்ற பாவ காரியங்களிலும் ஈடுபட்டு வருவதாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உறுதி செய்யப்படாத சில தகவல்கள் காட்டுகின்றன. இதேவேளை, வெளிநாட்டுப் பணிப் பெண்களாக செல்வோர் தொகையில் எந்த வீழ்ச்சியும் ஏற்படவில்லை என்பதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இந்நிலைமைகள் ஆரோக்கியமானவை அல்ல. வறுமை இறை நிராகரிப்பைக் கொண்டு வரும் என்று இறைதூதர் (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

மிகக் குறைவாக அல்லது பேசப்படாமலேயே விடுபட்டுப் போன ஒரு பகுதியாக எமது பொருளாதாரம் உள்ளது. இப் பின்னணியில் இலங்கை முஸ்லிம்களின் பொருளாதாரம் குறித்த ஒரு ஆழமான ஆய்வு இன்றைய உடனடித் தேவையாகும்.

சுதந்திரத்திற்கு முன்னரும் பிந்திய தசாப்தங்களிலும் இலங்கை முஸ்லிம்களின் வணிகம் கடந்து வந்த பாதைகளின் ஏற்ற இறக்கங்களையும் வளைவு சுழிவுகளையும் கடந்த பக்கங்களில் விரிவாக ஆராய்ந்தோம். கடந்த ஒரு நூற்றாண்டில் முஸ்லிம் வணிகத்தின் போக்கினை அவதானிக்கும்போது படிமுறையான ஒரு பின்னடைவு தொடர்வதை உணரலாம். இதற்கான காரணங் களை ஆராய்வது அவசியம்.

இலங்கை முஸ்லிம் வணிகர்கள் தமது வணிக எதிர்காலம் குறித்து எவ்விதமான எதிர்கால நோக்கையும் கொண்டிருக்கவில்லை. அதனடிப்படையிலான திட்டமிடலை மேற்கொள்ளவில்லை. ஒரு சமூகத்தின் இருப்பிலும் ஆரோக்கியமான வளர்ச்சியிலும் எதிர்கால நோக்கும் திட்டமிடலும் தவிர்க்க முடியாதவை.

பாரம்பரிய வியாபார நடைமுறைகளைக் கையாண்டு வந்த இலங்கை முஸ்லிம்கள் அதனை அடுத்த கட்டம் முன்னோக்கி நகர்த்துவதற்கான பொறிமுறைகளைக் கையாளவில்லை. சந்தை நிலைமைகள், மூலதனம், முதலீட்டுத் திட்டங்கள், பிராந்திய அரசியல் பொருளாதார மாற்றங்கள் என்பவற்றை அடியொற்றி, வர்த்தகத்தில் முன்னுரிமைக்குரிய விடயங்கள் பற்றிய போதுமான பிரக்ஞை அவர்களிடம் இருக்கவில்லை.

வேறு வகையில் குறிப்பிடுவதாயின், அறிவுப் பொருளாதாரம் (Knowledge Economy) கருத்திற் கொள்ளப்படவில்லை. 1970 களிலும் 1980 களிலும் முஸ்லிம் வணிகர்களிடம் பெருமளவு முதலீடு குவிந்திருந்தன. ஆனால், எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு மக்கள் வரையறுக்கப்பட்ட கம்பனிகளையோ தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனிகளையோ உருவாக்குவதில் முஸ்லிம் வணிகப் பாரம்பரியம் கரிசனை கொள்ளவில்லை. இதற்குப் புறம்பாக டாம்பீகமும் பகட்டும் நிறைந்த முஸ்லிம் சமூகத்தின் பாரம்பரியங்களே வணிகக் குடும்பங்களிலும் வெளித் தெரியத் தொடங்கின. கோடி பரூாய் பெறுமதியான வீடுகளை நிர்மாணித்தல், அவற்றை அலங்கரித்தல், குளிரூட்டப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தல், திருமண வைபவங் களுக்கு எக்கச் சக்கமான பணத்தை அள்ளி இறைத்தல் என்பவற்றோடு வணிகர்கள் தமது செயற்பாடுகளை சுருக்கிக் கொண்டனர். பெரும்பாலும் தனியுடமை வியாபாரத்திலேயே அவர்களது நாட்டம் குவிந்திருந்தது.

முஸ்லிம் சமூகத்தில் ஏற்பட்ட புலமைப் பின்னடைவும் இதற்கு மற்றொரு காரணமாகும். பொருளாதாரத்தையோ வணிகத்தையோ வழிநடாத்தும் நிலையில் இன்று எமது அறிவுஜீவிகள் இல்லை என்பது போல் அன்றும் இருக்கவில்லை. இப்பாரிய பின்னடைவுக்குச் சமாந்திரமாக பெரும்பான்மை இன வணிகர்கள் அறிவுப் பொருளாதாரம் நோக்கி வேகமாக நகரத் தொடங்கினர்.

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை உள்நாட்டிலும் மலை நாட்டை அண்டியுள்ள பிரதேசங்களிலும் மாடுகளையும் கலப்பை களையும் வைத்து சாகுபடியில் ஈடுபட்டிருந்த சிங்கள மக்கள் 20 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து வணிகத் துறையில் மிக வேகமாக முன்னேறிச் சென்றனர்.

எதிர்கால நோக்கும் திட்டமிடலும் இல்லாததன் மற்றொரு விளைவே, முஸ்லிம் வணிகத் துறையில் முறையான வியாபார முகாமையோ, தொழில்நுட்பமோ வளர்ச்சியடையாமையாகும். மூலதனம், முதலீடு, நிகர இலாபம், சந்தை வருமானம் என்பவை பற்றிய மிகத் தெளிவான ஒரு கொள்கையுடன் முஸ்லிம் வணிகம் பயணிக்கவில்லை. தமது மூதாதையர்கள் விட்டுச் சென்ற கடைகளையும் கம்பனிகளையும் அப்படியே தக்க வைத்துக் கொள்வதே புதிய தலைமுறையினரின் கரிசனையாக இருந்தது.

காலத்திற்கு ஏற்ற புத்தாக்கங்களை ஏற்படுத்தவோ முதலீடுகளைப் பெருக்கவோ, சந்தைக்கேற்ற தொழிற்துறைகளை மாற் றவோ அவர்கள் முன்வரவில்லை. கடந்த அரை நூற்றாண்டில் முஸ்லிம் வணிகத்தை ஆராய்ந்தால் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

நம்பிக்கை, நாணயம், நேர்மை போன்ற வணிக விழுமியங்களைப் படிப்படியாகப் புறக்கணித்தமையும் முஸ்லிம் வணிகத் தின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாகும். முஸ்லிம் என்றால் நம்பிக்கையாளன், வாக்கு மீறாதவன், மோசடி செய்யாதவன், கொள்ளை இலாபம் அடிக்காதவன் என்றெல்லாம் ஒரு காலத்தில் சக சமூகங்களின் உள்ளங்களில் வேரூன்றியிருந்த நம்பிக்கை களையும் எண்ணங்களையும் புதிய முஸ்லிம் வணிகத் தலைமுறையினர் தகர்த்தெறிந்தனர்.

முஸ்லிம் வணிகர்கள் இழைத்த இந்தத் தவறுகளால் முஸ்லிம் என்றாலே நம்பிக்கை, நாணயம் இல்லாத ஏமாற்றுப் பேர்வழி என்ற கருத்து இன்றுவரை பெரும்பான்மையினரிடையே நிலவுகின்றமை துரதிஷ்டமானது.

இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு செயல்படும் அரசாங்கங்கள் அவ்வப்போது கடைப்பிடித்து வரும் இறுக்கமான கொள்கைகளும் பாரபட்சமான அணுகுமுறைகளும் கூட முஸ்லிம் வணிக வளர்ச்சிக்கு பெருந் தடையாகவும் இடையூறாகவும் இருந்து வருகின்றன. சமகால முஸ்லிம் வணிகப் பின்னடைவில் இது தவிர்க்க முடியாத ஒரு காரணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதியதோர் அரசியல் கலாசாரம் மலரட்டும்

இன்று எமது நாட்டில் அறிவும் ஆற்றலும் உள்ள இளைஞர்கள் அரசியலிலிருந்து விலகிச் செல்வதை நாம் பார்க்கின்றோம். நாட் டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் மிக முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்ளும் இடங்களிலிருந்து அறிவும் ஆற்றலும் படைத்த இளைஞர்கள் தூர விலகிச் செல்லல் என்பது பாரியதொரு பிரச்சி னையாகும். அறிவு படைத்த இவ் இளைஞர்கள் இத்துறையிலிருந்து விலகிச் சென்றால் அவர்களின் இடைவெளியை யார் நிரப்பு வார்கள்?

80 ஆம் தசாப்தத்தில் நாடு எதிர்நோக்கிய வன்முறையினைத் தொடர்ந்து நாம் வாழும் இந்த யுகத்தில் அறிவும் ஆற்றலும் படைத்த இளைஞர்கள் தூர விலகிச் செல்வதனை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இதன் போது அவர்களினால் ஏற்பட்ட இடைவெளி பொருத்தமற்றவர்களினால் நிரப்பப்படுகிறது. அது நாட்டின் எதிர்காலத்திற்குப் பாதகமாக அமைகிறது.

நல்ல கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளே இன்று நாட்டுக்குத் தேவையாக உள்ளது. சம்பிரதாய அரசியலுக்கு இரையாவதா? கூப்பாடு போடுபவர்களாக இருப்பதா? ஆமாசாமி போடுபவர் களாக வாழ்வதா? இல்லாவிட்டால் விரிந்த பார்வையுடன் உலகி னைப் புரிந்துகொண்டு புதியதோர் அரசியலை நாட்டில் கட்டி யெழுப்புவதா? இதுவே எம் தலைமுறையினர் முன்னிலையில் உள்ள சவால் ஆகும்.

அறிவு சார்ந்த எத்தனை இளைஞர்கள் தீவிர அரசியல் உரை யாடலில் தம்மை ஈடுபடுத்தியுள்ளார்கள்? அவர்களுள் எத்தனை பேர் எதிர்கால அபிவிருத்திக்குத் தேவையான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி தர்க்கம் புரிகின்றார்கள்? எத்தனை பேர் தாம் ஆதரிக்கும் அரசியல் கட்சி அல்லது அமைப் பின் தொலை நோக்கினை விரிவுபடுத்துவதற்கு அல்லது மாற்றி யமைப்பதற்கு உள்ளக ரீதியான உரையாடல்களை மேற்கொள்கின்றார்கள்? எத்தனை பேர் விடயங்களைக் கண்டறிந்து அதனடிப் படையில் வாதங்களை முன்வைத்து தனது கருத்துக்களுக்காக நீண்டகால அரசியல் ரீதியான வாதங்களை முன்வைப்பதற்கு பாடுபடுகின் றார்கள்? அதில் எத்தனை பேர் அறிவு ரீதியாக அவற்றுக்கான பதில்களைத் தெரிவிக்கின்றார்கள்?

இந்தத் தன்னடக்கத்தை எமது வாழ்க்கையில் கொண்டு வருவ தற்கு அறிவும் கல்வியும் உதவும் என்பதே எனது விசுவாசம். விமர் சனம் என்பது மற்றுமொரு கருத்துரை மாத்திரம் எனக் கருதி செயற் படல் ஜனநாயக அரசியலில் மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். இவ்வாறான தன்னடக்கமே இன்று எமது அரசியலுக்குத் தேவையாக உள்ளது. எமக்கு காபட் இடப்பட்ட ஒரு பாதையை அமைக்க முடியாது. ஆனாலும் செல்ல வேண்டிய திசையினைக் கண்டறிந்து காட்டு மரம் செடி கொடிகளைப் பிடுங்கி எறிந்து விச ஜந்துக்களைக் கண்டுபிடித்து சற்று தூரம் எம்மால் பிரயாணம் செய்ய முடியும். எஞ்சிய பகுதியை துப்பரவு செய்து அழகாக செப்பனிட்டுப் பாதைக்கு காபட் இடுவது பின்னால் வரக்கூடியவர்களின் பணி ஆகும்.

மறுபுறத்தில் எமது நாட்டின் பொறுப்பு வாய்ந்த மூத்த தலைவர்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு யதார்த்தம் உள்ளது. அதாவது, பயனுள்ள ஓர் அரசியல் தலைமீட்டுக்காக எமது நாட்டு இளைஞர்களின் ஆர்வத்தினை வீணடிப்பதற்கு இடமளிக்காத ஒரு பின்னணியை உருவாக்குவது. அவ்வாறில்லாத போது எமது நாட்டி னதும் சமூகத்தினதும் எதிர்காலம் பற்றி கவலைப்பட வேண்டி ஏற்படும்.

இன்றைய இலங்கையானது மூன்று தசாப்த கால கொடிய யுத்தத்தின் பின்னர் சமாதானம், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத் தியை வேண்டி நிற்கின்றது. இந்த இலக்கினை ஏன் இதுவரை எம்மால் அடைய முடியாதுள்ளது? இலங்கையில் வேற்றுமையில் ஒற்றுமை யினை ஏற்படுத்துவது இன்னமும் ஒரு சவாலாக காணப்படுவதற் கான காரணம் என்ன? எமது தாய்நாட்டின் எதிர்காலத்திற்காக இந்த விடயம் பற்றி குறுகியதொரு வட்டத்தில் சிந்திக்காது ஆழமாக ஆராய்வது இன்றைய தலைமுறையைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் ஒரு பொறுப்பாக உள்ளது.

இலங்கை புதியதோர் அரசியலை வேண்டி நிற்கின்றது என்ற விடயம் பற்றி நாம் அனைவரும் நன்றாக சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். நாம் எவ்வாறான ஓர் அரசியல் முகாமில் இருந்தபோதும் எந்த பாதையில் சென்ற போதும் நாடு என்ற வகையில் நம் அனை வரது நோக்கமும் கனவும் ஒன்று என்பதே எனது நம்பிக்கை ஆகும்.

அந்நியர்களின் ஆட்சியிலிருந்து சுதந்திரத்தினைப் பெற்றுக் கொள்ளும் சவாலுக்கு அன்று நாடு என்ற வகையில் எமது சமூகம் முகம் கொடுத்த போது அன்று வாழ்ந்த சிங்களம், முஸ்லிம், பரங்கியர், மலாயர் ஆகிய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத் திய அனைத்துத் தலைவர்களும் சுதந்திரத்தினை நோக்கமாகக் கொண்டே ஒரே பாச றையின் கீழ் ஒன்றிணைந்தார்கள். அன்று அவர்கள் தமது நோக்க மாகக் கொண்ட சுதந்திரம் வருமாறு, முதலாவது - அரசியல் சுதந் திரம். இரண்டாவது - அறியாமை யிலிருந்து விடுதலை. மூன்றாவது - வறுமையிலிருந்து விடுதலை. நான்காவது - நோயிலிருந்து விடுதலை. ஐந்தாவது வேலைவாய்பு இன்மையிலிருந்து விடுதலை.

இந்த நோக்கங்கள் இற்றைக்கும் பொருந்தும் என நான் நம்புகின்றேன். இந்த நோக்கங்கள் தொடர்பில் நம் மத்தியில் கருத்து முரண்பாடுகள் இருக்க முடியாது. இந்த நோக்கங்களை அடைந்து கொள்ளும் வழிமுறைகள் தொடர்பில் எம்மிடம் மாற் றுச் சிந்தனைகள் காணப்பட்ட போதும் நாடு என்ற ரீதியில் நாம் ஒரேயொரு நோக்கத்தில் பயணிக்க வேண்டியுள்ளது. நாடு என்ற வகையில் இந்த இலக்கு நோக்கிய பயணத்தை குறுகிய நோக்கங்களுக்காக உடைத்தெறிய இடமளிக்க கூடாது. சுதந்திரத்திற்குப் பின்னுள்ள ஆசிய பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நோக்கங்களை அடை வதில் உறுதியாக நின்று புரிந்துணர்வுடன் எமது பயணத்தை தொடர்ந்தால் மாத்திரமே நாம் இன்று அடைந்துள்ள பின்னடை விலிருந்து மீள முடியும்.

# நாட்டின் நல்லிணக்கத்துக்கு வித்திடும் அஹன்ன 'கேளுங்கள்'

- எம்.ஏ.எம். பவாஸ்

30 வருடகால யுத்தம் முடிவடைந்த நிலையில், இலங்கை மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நாடாக சமாதானம், சமரசம் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகிய வற்றை வருகின்ற ஆட்சியாளர்கள் உறுதிப் படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஒரு தசாப்தம் கழிந்த போதிலும், தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியமைப்பதற் கான சரியான ஒரு வழிமுறை அல்லது நிகழ்ச்சி நிரல் இன்னும் இல்லை.

இதன் விளைவாக, அண்மையில் நம்பிக்கை மற்றும் மத நல்லிணக்கம் சீர்குலையும் வகையில் பல்வேறு பிரச்சினை கள் ஏற்பட்டன. இப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய மற்றும் மீள் நிகழாமைக்கான உத்தர வாதங்களை உறுதி செய்வதற்காக, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு ஒரு தேசமாக அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்க 'அஹன்ன' (கேளுங்கள்) என்ற ஒரு திட் டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

பிரதமர் அலுவலகத்தின் மூலம் உருவாக் கப்பட்டுள்ள நல்லிணக்க பொறிமுறைகளை மேற்பார்வை செய்யும் அலுவலகமானது நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் ஒத்துழைப் புடன் நாட்டின் பல பாகங்களையும் உள்ளடக் கும் வகையில் முன்னெடுத்துச் செல்கின்ற 'கேளுங்கள்' எனும் தேசிய நல்லிணக்கும் நடமாடும் வேலைத் திட்டத்தில் தற்போது இலங்கை பொலிசின் பிரஜைகள் பிரிவு தமது ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி ஒரு குழுவினர் தெஹிவளை நகரத்திலிருந்தும், மேலும் ஒரு குழுவினர் கடவத்தை நகரத்திலி ருந்தும் தமது பயணத்தினை ஆரம்பித்து முதல் கட்டத்தினை மிகவும் சிறப்பான முறையில் பூர்த்தி செய்திருந்தனர். அதன் இரண்டாம் கட் டமே இம்மாதம் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க தொனிப்பொருளாகக் கொண்ட 'கேளுங்கள்' கீதமானது விசாலமான டிஜிட்டல் திரையில் காட்சிப்படுத்தப்படுவ துடன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் இளைஞர் யுவதிகள், குறித்த தொனிப் பொருளை மையமாகக் கொண்ட வீதி நாடகங் களை நடித்து வருகை தருவோரினை தலைப் பினுள் அழைத்துச் செல்வது அவதானிக்கும் விடயமாக உள்ளது. பின்னர் சுதந்திர அரங்கின் உறுப்பினர்களான சிவில் சமூக உறுப்பினர் கள் மூலம் நல்லிணக்கம் தொடர்பான கருத் துக்கள் பரிமாறப்படும். பின்னர் கலந்துகொள் வோரின் மூலம் எழுப்பப்படுகின்ற கேள்வி களின் அடிப்படையில் திறந்த அரங்கொன்று உருவாகின்றது. இது இந்நிகழ்ச்சியின் சாதா ரண வடிவமைப்பாகும்.

இந்நாட்டினுள் நல்லிணக்கம் ஏற்படுவ தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ப தில் இரு வேறுபட்ட கருத்துக்களுக்கு இட மில்லை என்பதுடன், தற்போதைய ஆட்சியின் கீழ் அதற்காக பல முன்னெடுப்புக்கள் மேற் கொள்ளப்பட்டு வருவதையும் யாராலும் மறுக்க முடியாது. எனினும் அது தொடர்பில் நாட்டு மக்களுக்கு இடையில் போதுமானளவு கலந்துரையாடல்கள் இடம்பெறவில்லை என்பது உண்மையே.

இன்னும் மக்கள் மத்தியில் ஏற்பட்டு வருகின்ற சிற்சிறு கருத்து முரண்பாடுகள் மற்றும் கசப்பான சம்பவங்களின் வாயிலாக அவர்கள் மத்தியில் காணப்படுகின்ற எண்ணங் களில் இதுவரை எவ்வித மாற்றமும் ஏற்பட வில்லை என்பது தெளிவாகின்றது. அவ்வா றான பின்னணியில் 'கேளுங்கள்' போன்ற நிகழ்ச்சிகள் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள் ளப்படுவது போற்றத்தக்கது. இவ்வாறான நிகழ்ச்சிகளை திட்டமிட்டு செயற்படுத்தும் போது எண்ணிலடங்காத பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி இருக்கின்றது. தொட ராக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடங்க ளில் இவ்வாறான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது என்பது சவாலிலும் சவாலாகவே எண்ணத் தோன்றுகின்றது. இந்த சவாலினை மிகவும் துல்லியமாக ஏற்பாட்டுக் குழுவினர் முறியடித்துள்ளனர்.

இந்நிகழ்ச்சித் தொடர் தொடர்பில் விஷேடமாகக் குறிப்பிடப்பட வேண்டிய மற்றுமொரு அம்சம் தான் இந்நிகழ்ச்சியின் வளவாளர்களாக சிவில் சமூக செயற்பாட்டா ளர்கள் கலந்துகொள்வதாகும். உண்மை யாகவே நாட்டின் சமாதானத்திற்கும் நல்லி ணக்கத்திற்குமாக மிகவும் ஆபத்தான மற்றும் கடுமையான நிலைமைகளில் கூட தமக்கு ஏற்படும் என எதிர்பார்க்கின்ற பெரும் கஷ்டங்கள் மற்றும் துன்பங்களை பொருட் படுத்தாத அனுபவம் நிறைந்த சில சிவில் சமூக செயற்பாட்டாளர்களே இந்நிகழ்ச்சியின் வளவாளர்களாகக் கலந்து கொள்கின்றனர். அவர்களை இவ்வாறான நிகழ்ச்சிகளில் பங்கு பெறச் செய்வது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானமானது போற்றத்தக்க அம்சமாகும்.

அவர்களின் அனுபவங்களை அவர்களி டமே இலைமறை காய்களாக வைத்துக் கொள்வதற்கு அவகாசம் அளிக்காது இவ்வாறு சமூகத்தின் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்து வது பாராட்டத்தக்க விடயமாகும். எனினும் இவ்வளவாளர்களை இந்நிகழ்ச்சிக்காக இதற்கு மேலாக பயனுள்ள விதத்தில் பயன் படுத்துவதற்கு முறையான திட்டமொன்று இருப்பின் அது மேலும் பயனுள்ளதாக இருக் கும். இது சிவில் சமூகத்தின் பக்கம் காணப் படுகின்ற சிறியதொரு குறைபாடாகும் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

மேலும் குறித்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன்பெறுவதற்கு வருகை தந்தவர் களுக்கும் வளவாளர்களுக்கும் இடையில் இடைவெளியொன்று காணப்பட்டமை யினால் வளவாளர்களின் அனுபவங்களை முழுமையாகப் பெற்றுக் கொள்வதற்கான அவகாசம் பொதுமக்களுக்குக் கிடைக்க வில்லை. இது தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் தமது கவனத்தினை செலுத்த வேண்டியுள்ள துடன், எதிர்வருகின்ற காலத்தில் பொதுமக்க ளுக்கு பயனுள்ள விதத்தில் குறித்த நிகழ்ச்சி யினை ஒழுங்கு செய்ய முன்வர வேண்டும்.

மேலும் மட்டுப்படுத்தப்பட்ட பொதுமக் களே பார்வையாளர்களாக வருகை தருவதால் குறித்த நிகழ்ச்சியின் பயனை அதிகரித்துக் கொள்வதற்காக ஊடகங்களின் வாயிலாக குறித்த நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டு ஒளி/ ஒலிபரப்பப்பட வேண்டும். மேலும் தமிழ் மொழியில் குறித்த நிகழ்ச்சிகள் மொழிபெயர் க்கப்பட்டு தமிழ் பேசும் மக்களிடத்தில் கொண்டு சேர்க்கப்பட வேண்டும்.




அத்தோடு குறித்த நிகழ்ச்சிகள் பெரும் பாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் நாட்டின் மலையக பிரதேசத்தினை மையமா கக் கொண்டும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இன்று சமூக வலையத்தளங்களில் பெரும் பேசுபொருளாகக் காணப்படுவது வடக்கில் காணப்படுகின்ற பெயர் பலகைகளில் சிங்கள மொழி பிழையாக பொறிக்கப்பட்டுள்ளமை யாகும். இதனை பெரிதுபடுத்தி சமூக வலைத் தளங்களை பயன்படுத்தும் பெரும்பான்மை யினத்தவர்கள் இனவாதம் தூண்டும் அள விற்கு தமது பதிவுகளை இட்டு வந்தனர். குறித்த பிழைகளை சுட்டிக்காட்டி அதனை திருத்திக் கொள்வதற்கு யாரும் முன்வருவ தாகத் தெரியவில்லை. மேலும், அவர்கள் தெற்கில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படு வதை கண்டுகொள்வதாகவும் தெரியவில்லை. இவ்விடயத்தில் சுமுகமான முடிவொன்றை எடுக்கும் பொறுப்பு அமைச்சர் மனோ கணே ஷனின் அமைச்சுக்கு உள்ளன. குறித்த பெயர் பலகைகள் காணப்படுகின்ற இடங்களை இனங்கண்டு அவற்றுக்கு உடனடியாக தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மேலும், இப்பெயர் பலகைகளில் சிங்கள மொழியில் ஏற்பட்ட தவறுகளுக்கு பிரதான மான காரணமாக இணையத்தினூடாக சிங்கள மொழி பெயர்ப்பினை மேற்கொண்டமையே காரணம் என வட மாகாண சபை நிர்வாகப் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்திருந்தார். ஆக, இதனை மையமாகக் கொண்டு இனவாத சொற்பிரயோகங்களைப் பிரயோகிப்பது எவ்விதத்திலும் நியாயமன்று. மாறாக குறித்த விடயங்கள் இடம்பெறாது தவிர்ப்பதற்கு ஏற்ற தீர்மானங்களை எடுக்க வேண்டும். மக்கள் மத்தியில் குறித்த விடயம் குறித்து தெளி வினை ஏற்படுத்த வேண்டும்.

மறுபுறம் 'கேளுங்கள்' நிகழ்ச்சிகளை முறையாக முன்னெடுப்பதன் மூலம் எழுத்துப் பிழைகள் எல்லாம் இனவாதத்தினை ஏற் படுத்தும் கருவிகளல்ல என்பதை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல முடியும். குறித்த நிகழ்ச்சிகள் நல்லிணக்க அமைச்சுக்கு பெரிதும் பக்கபலமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

நிகழ்ச்சியானது தொடர்ந்து செயற்படுத்தப் படுவதால் சுட்டிக்காட்டப்படுகின்ற குறை களை நிவர்த்தி செய்து கொண்டு முன்னோக் கிச் செல்வதன் மூலம் சிறந்த பலனை அடைந்துகொள்வதற்கு ஏதுவாக அமையும். அவ்வாறு இன்றேல் இதற்காக அர்ப்பணிக் கின்ற கணிசமானோரின் முயற்சி, பணம் மற்றும் ஏனைய வளங்களின் மூலம் இறுதி யில் கிடைக்கும் பலன்கள் வெறும் பூச்சிய மாகவே காணப்படும் என்பதில் ஐயமில்லை.

மேலும், தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வினை கிராமிய மட்டத்தில் விருத்தி செய்வதற்காக இலங்கை பொலிஸ் திணைக்களம் பிரதமர் அலுவலகத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள நல்லிணக்க பொறி முறைகளை மேற்பார்வை செய்யும் அலுவல கத்துடன் இணைந்து தமது பணியினை ஆரம்பித்துள்ளது. ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி நல்லிணக்க பொறிமுறைகளை மேற்பார்வை செய்யும் அலுவலகமும் இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கும் இடையில் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வினை கிராமிய மட்டத்தில் விருத்தி செய்வதற்காக பிரஜைகள் பொலிஸ் சேவையினை மறுசீரமைப்பு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கைசாத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதிய 11 ஆம் இலக்க அரச பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின் அடிப் படையில் தேசிய பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளுக்காக ஒத்துழைப்பு வழங்கு வதற்கு மேலதிகமாக தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வினை கிராமிய மட்டத்தில் விருத்தி செய்து பலமான தொடர் பாடல் வலையமைப்பொன்றினை உருவாக்கு வதே பிரஜைகள் பொலிஸ் சேவைக்கு வழங்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாகும்.

அரசாங்கத்தின் நல்லிணக்க நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதற்காக அனைத்து விதமான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டு, கீழ் மட்டத்தில் இருந்து ஒத்து ழைப்பு வழங்குதல் மற்றும் தகவல்களை பெற்றுக் கொடுத்தல், அரசாங்கத்தினால் சட்ட மாக்கப்பட்ட மற்றும் சட்டமாக்குவதற்கு எதிர்பார்க்கின்ற கொள்கைகள் தொடர்பில் கீழ் மட்ட யோசனைகள் மற்றும் கருத்துக் களை பெற்றுக் கொள்ளல், பிழையான தகவல்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டு இனவாத கருத்துக்கள் பகிரப்படுவதை தடுத்தல் மற்றும் அதன் மூலம் ஏற்படும் என் எதிர்பார்க்கின்ற வன்முறைகள் தொடர்பில் முன்கூட்டியே இனங்கண்டு அதற்கு முன்னர் கிராமிய மட்டத்தில் தீர்வினை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தினை உறுதி செய்தல் என்ப னவே பிரஜைகள் பொலிஸ் சேவையின் பிரதான பணிகளாக வரையறுக்கப்படு கின்றன.

இந்நோக்கங்களை அடைந்துகொள்வதற் காக பிரஜைகள் பொலிஸ் பிரிவினர் 'கேளுங் கள்' நிகழ்ச்சியுடன் இணைந்து தமது பணி யினை முன்னெடுத்து வருகின்றனர். இது, குறித்த நிகழ்ச்சி வெற்றி பெறுவதற்கு பெரிதும் உந்து சக்தியாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அதனடிப்படையில் குறித்த நிகழ்ச்சித் தொகுப்பின் இரண்டாம் கட்டத்தின் கீழ் பாடசாலை மட்டத்தில் மாணவர்களை அறி வுறுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படு கின்றன. ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி முதல் இவ்வாறு பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

நல்லிணக்க செயற்பாடுகள் வளர்ந்து வரும் மாணவர்களுக்கு மத்தியில் வதைப்பது தான் எதிர்கால நலனுக்கு முக்கியமானதாகும். அந்த வகையில் முஸ்லிம் பாடசாலைகளும் முஸ்லிம் சமூகமும் இந்த 'அஹன்ன' வேலைத் திட்டத்தில் பங்கெடுப்பது ஆரோக்கியமானதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "இணக்கம் காணமுடியாத இடைவெளியொன்று ஆரம்பத்தில் இருந்தே நிலவியது."

## முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூப்

தலைவர், முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்களை முன்மொழிவதற்கான குழு

- **முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த அறிக்கை தாமதமானமைக்குரிய காரணங்கள் என்ன?**

அறிக்கை தாமதமானமைக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பல்வேறு தரப்புக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக முன்னாள் நீதியமைச்சர் மிலிந்த மொரகொடவினால் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தக் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவிற்கான நியமனக் கடிதம் எனது முகவரிக்கு 2009 ஜூலை 30 ஆம் திகதியே அனுப்பிவைக்கப்பட்டது. இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி என்னையும் சேர்த்து 17 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்தப் பதினேழு பேர்களில் எஸ்.எம்.ஏ. ஜப்பார் என்பவர் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்போது உயிருடன் இல்லை.

2009 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட குழுவில் முஸ்லிம் சட்டங்கள் தொடர்பில் பல்வேறு புத்தகங்களை எழுதிய ஏ.எச். கௌசுல் அமீன் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குரிய காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆனால் 'உங்களையும் இந்தக் குழுவில் நியமித்துள்ளோம்' என்பதாக ஒரு கடிதம் பின்னர் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் என்னிடம் இல்லை. ஆனால் நாம் நடாத்திய எல்லாக் கூட்டங்களிலும் அவர் பங்குபற்றியுள்ளார். ஒருவரும் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. அவருக்கான நியமனக் கடிதம் அமைச்சின் கோப்பில் இருக்கலாம் என்று நினைக்கின்றேன்.

இதுவல்லாமல் அமைச்சின் கோப்பில் மற்றுமொரு கடிதமும் உள்ளது. அந்தக் கடிதம் தில்ஹாரா அமரசிங்கவுக்கும் அரந்தர என்பவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அவர்களை இந்தக் குழுவிற்கான செயலாளர்களாக நியமிக்கப்பட்டு அந்தக் கடிதம் அனுப்பட்டிருந்தது. இதில் அரந்தர என்பவர் முதல் இரு கூட்டங்களுக்கு மாத்திரமே சமுகமளித்தார். அதன் பிறகு அவர் வரவில்லை. ஆனால் தில்ஹாரா அமரசிங்க சகல கூட்டங்களிலும் பங்குபற்றினார். இறுதி வரையிலும் அவர் இவ்விடயத்தில் தன்னை முழு மூச்சாக ஈடுபடுத்தி வந்தார்.

எமது குழுவில் அங்கம் வகித்த 17 உறுப்பினர்களுள் இருவர் ஆரம்பத்திலிருந்தே கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் பங்குபற்றவில்லை. ஒருவர் நீதியரசர் சலாம், மற்றயவர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி. இந்தக் குழுவிற்கு இருவரையும் நானே சிபாரிசு செய்தேன். எமது கூட்டங்களில் பல்வேறு விடயங்களை அவதானித்தோம். சமுதாயத்தில் நடைபெறுகின்ற விடயங்களை, காதிநீதிமன்ற நடைமுறைகளை அறிந்து கொள்ளாத உலமாக்களும் இங்கு இருந்தார்கள். இதே போன்று ஷரீஅத் சட்டம் தெரியாதவர்களும் உலமாக்கள் அல்லாதவர்களும் இருந்தார்கள். இதனால் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தியையும், செயலாளர் முபாரக் மௌலவியையும் இவர்கள் எமது குழுவிற்கு முன்மாதிரியாய் இருந்து வழிகாட்டுவார்கள் என்ற எதிர்பார்ப்பில் சிபாரிசு செய்து நியமித்தேன்.

உலமா சபையின் தலைவர் இடைக்கிடையே கூட்டங்களில் கலந்து கொண்டார். இவர் சமுகமளிக்காத கூட்டங்களில் முற்போக்கான கருத்துக்களை முன்வைப்பவராக அஷ்ஷெய்க் முபாரக் மௌலவி காணப்பட்டாலும் பொதுவாக இவர் கூட்டங்களில் கதைப்பதில்லை. இவர்களுடைய கருத்துக்களை ஒரு சாரார் ஏற்றுக்கொள்வதில்லை. மற்றயவர்களது கருத்துக்களை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. கருத்து முரண்பாடுகள் காணப்பட்டமையினால் கூட்டங்களில் சில அங்கத்தவர்கள் சரியாகக் கலந்துகொள்ளவில்லை.

இந்த நிலையில் சட்டங்களின் ஷரீஆத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நான் பல உலமாக்களை அணுகினேன். நளீமியா இஸ்லாமிய அறிஞர்களையும் அணுகினேன். இந்த விடயத்தில் கருத்துச் சொல்வதற்குப் பலரும் பின்வாங்கினார்கள். ஷரீஆத் துறையில் நீங்கள் எங்களை வழிகாட்டாவிட்டால், அல்லாஹ்விடம் நீங்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்று நான் அவர்களிடம் சொல்ல வேண்டிய நிலை கூட ஏற்பட்டது.

பல்வேறு கூட்டங்கள் நடந்ததன் பின்னர் ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் ஒரு கூட்டத்தினை ஏற்பாடு செய்தோம். இந்தக் கூட்டத்தை அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத் வழிநடாத்தினார். இங்கு பல நல்ல கருத்துக்கள் பகிரப்பட்டன. முஸ்லிம் தனியார் சட்டத்தில் இடம்பெறவேண்டிய மாற்றங்களை ஷரீஆ சட்டத்திற்கு முரணில்லாதவாறு திருத்தலாம் என்கின்ற கருத்து இங்கு இன்னும் வலுப்பெற்றது.

எனினும் இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டங்களில் அக்கருத்துக்கள் பெரிதாக எடுபடவில்லை. நாம் பல்வேறு கூட்டங்களை நடாத்தினாலும் அவற்றில் கருத்துக்களை தெரிவிக்காமல் சிலர் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் தங்களது கருத்துக்களை this is our view என்று குறிப்பிட்டு அனுப்பிவைப்பார்கள். இந்த நிலைமையே தொடர்ந்து நீடித்தது. இதனால் இறுதிக் கட்டத்தில் மற்றுமொரு குழு நியமிக்கப்பட்டது.

இவ்வாறான கட்டத்திலேயே முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஒரு குழுவை நியமித்தார். இந்தக் குழு நியமிக்கப்பட்ட போது ஒளிந்து நின்று கருத்துச் சொல்லி வந்தவர்கள் எல்லோரும் இந்தக் குழுவின் பக்கம் வந்திணைந்து கொண்டார்கள். அதன் பிறகு பெரும்பான்மை பலத்தைக் காண்பிக்க முற்பட்டார்கள். அவர்களது கருத்துக்கு எதிராக நிற்க வேண்டாம் என்றும் கூறினார்கள்.

ஆனால் எம்மிடம் பெரும்பான்மை என்ற சிந்தனை காணப்படவில்லை. எமக்கு மத்தியில் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் எங்களுடைய கருத்தை நாங்கள் தெரிவிக்க வேண்டும். அவர்களுடைய கருத்தை அவர்கள் தெரிவிக்க வேண்டும். இப்படி கருத்துக்கள் வெளியே வர வேண்டும். அதன் பிற்பாடு ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்ற அடிப்படையிலேயே நாங்கள் எமது பணியைச் செய்து வந்தோம். இவ்வாறிருக்கையில், கடந்த 2017.11.27 ஆம் திகதி நீதியமைச்சில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இதிலும் பெரும்பாலானவர்கள் கலந்துகொள்ளவில்லை. இந்தக் கூட்டத்திற்கு முன்பு அதாவது 26ஆம் திகதியிடப்பட்டு பின்வருமாறு ஒரு கடிதம் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

Respected sir, we attached here with for your kind consideration and the views of the some of members of the committee. The members who have subscribe to report attached are of the view that the view expressed there in are open to discussion if it canot be accepted as the unanimous use of the committee.

அதாவது இதிலுள்ள கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அதை இன்னும் கலந்துரையாடலுக்கு உட்படுத்த முடியும் எனக் குறிப்பிட்டு 8 பேர் அவ்வறிக்கையில் கையொப்பமிட்டிருந்தனர். நத்வி பஹாவுதீன், பஸ்லத் சஹாப்தீன், அஷ்ஷெய்க் அஹமத் முபாரக், அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். ரிஸ்வி, டொக்டர் சுக்ரி, நீதியரசர் சலாம், பாயிஸ் முஸ்தபா ஆகியோர் கையொப்பமிட்டிருந்தார்கள். ஷிப்லி அஸீஸின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் அவர் கையொப்பமிட்டிருக்கவில்லை. இப்படி இவர்கள் 26 ஆம் திகதியிட்ட அறிக்கையை எனக்கு ஈமெயிலில் அனுப்பியிருந்தார்கள். மறுநாள் காலையிலேயே நான் இதனை பார்வையிட்டேன்.

27ஆம் திகதி கூட்டத்திற்கு முபாரக் மௌலவியும் ரிஸ்வி முப்தியும் வந்திருந்தார்கள். இவர்கள் இருவரையும் தவிர வேறு எவரும் அந்தக் கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கவில்லை. இதுபோன்றே தொடர்ந்து இடம்பெற்று வந்தது. 27 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நாம் இந்த அறிக்கை தொடர்பாக கலந்துரையாடினோம். ஆனால் சமுகளித்திருந்த ஒருவரும் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் அவர்களது அறிக்கையை தந்தது போல் நாங்களும் எமது அறிக்கையை தயாரிப்போம். இரண்டு பரிந்துரைகளையும் ஒரு அறிக்கையாக ஒப்படைப்போம் என்றும் முடிவானது. அடுத்த கூட்டம் 2017-12-20 ஆம் திகதி இடம்பெறும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வகையில் எமது அறிக்கையும் தயார் செய்யப்பட்டது. இரண்டு அறிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்து கைச்சாத்திடும் வகையில் 20 ஆம் திகதி கூட்டம் நடைபெறும் என்று கூறப்பட்டது. டிசம்பர் 13 ஆம் திகதி ரிஸ்வி முப்திக்கும், ஷிப்லி அஸீஸுக்கும் நான் ஒரு கடிதம் எழுதினேன். அதில் உங்களது கருத்துக்களும் எங்களது கருத்துக்களும் உள்ளடங்கியுள்ள இரு அறிக்கைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு அறிக்கையாக வழங்குவோம் என்றும் ஷிப்லி அஸீஸ் கையொப்பமிடாமல் அந்த அறிக்கையை எப்படி வழங்குவது என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் இந்தக் கடிதத்திற்கான பதில் எதனையும் அவர்கள் அனுப்பியிருக்கவில்லை. ஆனால் 19ஆம் திகதியன்று அவர்கள் ஈமெயில் மூலம் எனக்கொரு கடிதத்தை அனுப்பி, அதில் பெரும்பாலானவர்களுக்கு நாளைய தினம் அதாவது 20ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு சமுகமளிக்க முடியவில்லை என்று தெரிவித்திருந்தனர். எல்லோருக்கும் வருகை தர முடியுமான விதத்திலேயே 20ஆம் திகதி குறிக்கப்பட்டிருந்த போதிலும் மறுநாள் கூட்டத்திற்கு ஷிப்லி அஸீஸும் அவரோடு சேர்த்து நீதியரசர் மக்கியும் மட்டுமே வந்திருந்தனர். நீதியரசர் மக்கி இரு குழுக்களையும் சாராமல் தனியாக ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பதாவும் அதை தயாரித்துக் கொண்டிருப்பதாகவும் முன்னர் தெரிவித்த போதிலும் அவர் மற்றைய குழுவின் அறிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார்.

டிசம்பர் 20ஆம் திகதி எமது குழுவினதும் 21ஆம் திகதி அவர்களது குழுவினதும் அறிக்கையே இறுதி அறிக்கையாக வரவிருந்தது. எமது குழுவில் அங்கம் வகித்த ஷாமிலா ரசூல் 21ஆம் திகதி வெளியிடவுள்ள அவர்களது அறிக்கையை வாசிக்க முன்பு இந்த அறிக்கையில் கைச்சாத்திட முடியாது என்ற கருத்தை முன்வைக்கவே, நானும் தில்ஹாரா அமரசிங்கவும் 20ஆம் திகதி அறிக்கையில் கைச்சாத்திடாமல் இருந்தோம்.

ஏனைய உறுப்பினர்கள் கைச்சாத்திட்டிருந்தார்கள். பிரிக்கப்பட்ட (Divided) அறிக்கைகள் எதிலும் தான் கைச்சாத்திடப் போவதில்லை என ஷிப்லி அஸீஸ் குறிப்பிட்டிருந்தார். ஆனால் 21ஆம் திகதி அறிக்கையில் அவர் கைச்சாத்திட்டிருந்தார். 21ஆம் திகதி கைச்சாத்திட்டு வெளியிடப்பட்ட அறிக்கை ஒரு நீளமான அறிக்கையாக இல்லாவிட்டாலும் அதிலுள்ள கருத்துக்களை பார்க்கும் போது இதற்கு முன்பு தடையாக இருந்த சில விடயங்களில் உடன்பாடு காணப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிந்தது. முதலாவது, எமது அறிக்கையின் கருத்துக்களில் அவர்கள் குறிப்பிடும் பிரச்சினைகள் அல்லாத ஏனைய விடயங்களை ஏற்றுக்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

அதாவது நிலையான சட்டங்களை (Substantive Law) நீக்குதல், பதிவுகள் தொடர்பான சில விடயங்கள், திருமண வயது போன்ற விடயங்கள் அல்லாமல் மற்ற விடயங்களில் எமது அறிக்கையில் உள்ள நிர்வாக விடயங்களில் உடன்பட்டுள்ளார்கள். நிர்வாக ரீதியான விடயங்கள் அல்லாமல் ஏனைய விடயங்கள் தொடர்பில் விருப்பமோ விருப்பமின்மையோ தெரிவிக்கிறார்கள் இல்லை. இதன் மூலம் விளங்குவது என்னவெனில் எமது அறிக்கையின் சகல விடயங்களையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் administrative விடயங்களை மாத்திரமே ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதாகும். குறிப்பாக விவாதிக்கப்படுகின்ற கருத்துக்களை தவிர ஏனைய கருத்துக்களுக்கு அவர்கள் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை.

எமது அறிக்கையில் நாம் பெண் காதிமார், பெண் பதிவாளர்கள் என்கின்ற விடயங்களை பரிந்துரை செய்துள்ளோம். இவர்கள் தமது அறிக்கையில் பெண் பதிவாளர்களுக்கு விருப்பம் என்றும் பெண் காதிமார்களுக்கு விருப்பமில்லை என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

இதற்கு முன்னர் இவர்கள் பெண் பதிவாளர்களுக்கு விருப்பம் என்பதாக தெரிவிக்கவில்லை. இந்த முறை அந்தக் கருத்தில் மாற்றம் இருந்தது. பிளவுபட்ட (Divided) அறிக்கையில் கைச்சாத்திடுவதில்லை என ஷிப்லி அஸீஸ் குறிப்பிட்டாலும் இரு அறிக்கைகளை வைத்துப் பார்க்கும் போது (Divided) இல்லை என்பது விளங்குகிறது.

அவர் கைச்சாத்திட்டதற்கு நான் எவ்வித குறைகளும் சொல்ல மாட்டேன். ஏனெனில் அவர் குறிப்பிட்டது போன்று (Divided) ஆக இருந்தால் மாத்திரமே பிரச்சினை. (பக்.14)



# எழுவாய், பயமிலை

அபூ ஷாமில்

## அறிவு மையங்களை உயிரூட்டும் மாதம்

இவ்வாண்டு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்வி மாநாடு ஒன்றை நடத்தியது. அதில் ஆரம்ப நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கிய ஆலிம் ஒருவர், கல்வி மாநாட்டுக்கு வந்து இறுக்குகின்ற அனைவரையும் ஆலிங்கணம் செய்தார். பொதுவாக பெரும்பாலான மௌலவி ஆலிம்கள் இந்த இறுக்குகின்ற பணியை தொடர்ந்து செய்து கொண்டுதானிருக்கிறார்கள் என்பதால் இந்த ஆலிமை இங்கு குறிப்பாகச் சுட்டிக் காட்ட வேண்டியதில்லை.

ஆனாலும் மௌலவிமார்களுடைய பயான்களிலும் குத்பாக்களிலும் மிகவும் சரளமாக இந்த இறுக்குகின்ற வேலை நடந்தேறி வருவது சர்வ சாதாரணம். பள்ளிவாசலுக்கு வந்திருக்குகின்ற நல்லடியார்கள், வீட்டிலே இறுக்குகின்ற தாய்மார்கள் என மொத்த சமூகமும் இறுக்குகின்றதொரு சமூகமாகவே இவர்களால் கூறப்படுகின்றது. அதனால் தான் ஓர் இறுக்கமான சமூகமாக முஸ்லிம் சமூகம் ஆகிவிட்டிருக்கிறதோ தெரியவில்லை. அனைத்தையும் மீறி அல்லாஹ்தஆலாவையும் இறுக்குகின்ற விடயத்தில் அவர்கள் விட்டு வைக்கவில்லை. அல்லாஹ் கடுமையாக இறுக்குகின்றான், அல்லாஹ் மென்மையாக இறுக்குகின்றான், அல்லாஹ் பார்த்துக் கொண்டு இறுக்குகின்றான், அல்லாஹ் கோபமாக இறுக்குகின்றான் என இறுக்குவது தான் அல்லாஹ்வின் பணியாக இருக்குமோ என்று யோசிக்க வைக்கின்ற அளவுக்கு அல்லாஹ் இறுக்குகின்றதை இவர்கள் எடுத்துச் சொல்வார்கள்.

மக்களுக்கு சிறந்த கருத்துக்களை முன்வைப்பதற்கு மொழி அறிவு மிக முக்கியமானது. மொழி அறிவு வாசித்தலின் ஊடாகவே வளம் பெற முடியும். அதிகமதிகம் வாசிக்கின்ற பொழுது தான் தீட்டப்படுகின்ற வாளைப் போல மொழி அறிவும் கூர்மையடைகிறது. இந்த வகையில் ஒருவரின் உரையை அல்லது உரையாடலைச் செவிமடுக்கின்ற பொழுது அவர் வாசிப்பதன் ஊடாக எவ்வளவு தூரம் தன்னை வளர்த்துக் கொண்டுள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அதேபோல ஒருவரிடம் வாசிப்புப் பழக்கமே இல்லை என்பதையும் அவர்களுடைய வாசகங்களில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

இருக்கின்றான் என்ற மொழிப் பிரயோகத்துக்குப் பதிலாக இறுக்குகின்றான் என்ற சொல் பிரதியீடு செய்யப்படுவதும் வாசிப்பின்மையின் வெளிப்பாடாகவே தெரிகிறது. ஏனெனில் எழுத்து வடிவத்தில் எங்கேனும் தவறியேனும் இருக்கின்றான் என்ற இடத்தில் இறுக்குகின்றான் என்று பாவிக்கப்படுவது கிடையாது. வாசிப்புக்கான எந்தச் சாதனத்திலும் இந்தச் சொல் பயன்படுத்தப்படுவதும் கிடையாது. வெறும் கேள்வி ஞானத்தில் மட்டுமே இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களைக் காண முடியும். குறித்த இந்த வார்த்தைப் பிரயோகத்தை நமக்கு மத்தியில் பாவிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மௌலவிமார்களாகவே இருக்கின்றார்கள் என்பது இவர்களின் வாசிப்பு அறிவைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

உலகத்துக்கே வழிகாட்டியாக இஸ்லாம் எனும் தீனை அல்லாஹுத்தஆலா தருகின்ற பொழுது முதலாவதாக ஏவிய வாசகம் வாசி என்பது தான். அல்குர்ஆனின் இந்த முதல் சொல்லை பிரச்சாரம் செய்வதற்காக, நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் ஒரு மாதத்தை ஒதுக்கித் தந்திருக்கிறது. ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாக இலங்கையில் எல்லோராலும் அறியப்பட்டிருக்கிறது. இக்ரஃ என்ற இந்த வசனத்தை இலங்கையில் பரப்புவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் நாங்கள் என்ன செய்திருக்கின்றோம் ? இந்த மாதத்தில் இதுவரை எத்தனை குத்பாக்கள் இது தொடர்பில் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன? எத்தனை பயான்கள் இது வரை ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன? எந்தப் பள்ளிவாசல் அல்குர்ஆனின் முதல் வசனமாகிய வாசிப்பைத் தூண்டுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டன ?

பள்ளிவாசல் மிம்பர்கள் வாசிப்புப் பழக்கம் இல்லாதவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வரை அல்லாஹ்வுடைய முதல் கட்டளை இந்தப் பூமியில் அமுலாகுவது சாத்தியமில்லை. குர்பானின் முக்கியத்துவம் பற்றி, அதனை விட்டுக் கொடுக்க முடியாது என்கின்ற உரிமையைப் பற்றி வாய்கிழிய மிம்பர்களில் பேருரை நிகழ்த்தியவர்கள் எவருமே இந்த விடயத்தில் வாயைத் திறந்ததாக அறிய முடியவில்லை. உம்ரா ட்ரவல்ஸுக்காக மிம்பர் மேடைகளில் முழங்கியவர்கள் எவரையும் அல்குர்ஆனின் முதல் வசனம் தொடர்பில் உரையாற்றுவதைக் காணக் கிடைக்கவில்லை. வாசிக்காத சமூகம் வாசிக்காக மட்டுமே வாய்திறக்கும் அவலம் தான் இந்த வாசிப்பின் சமூகத்தில் தெரிகிறது.

மிம்பர்களின் நிலை இது தான் என்றால் சமூகத்தின் நிலையைப் பற்றி வேறு கேட்க வேண்டியதில்லை. வாசிப்பின் சமூகம் வாசிக்காத ஒரு கூட்டத்தினால் மிம்பர்களுக்கூடாக வழிநடத்தப்படும் துர்ப்பாக்கிய நிலையில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

சில நிர்வாகங்கள் தமது பள்ளிவாசலை நோக்கி இபாதத்தாளிகளைத் தவிர்ந்த பொதுமக்களை வரவழைப்பதற்கான வழிகள் தெரியாமல் இருக்கின்றன. இவர்கள் பள்ளிவாசலுக்கூடாக வாசிப்புப் போட்டிகளையும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளையும் நடத்த முடியும். பள்ளிவாசலில் வாசிகசாலை ஒன்றை நிறுவுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த நிகழ்வில் முஸ்லிம் அல்லாதவர்களையும் இணைத்துக் கொள்ள முடியும். அது தமது பள்ளிவாசலை, பள்ளிவாசலின் பணியை அடுத்தவர்களுக்கும் எடுத்துக் காட்டுகின்ற ஓப்பன் மஸ்ஜித் ஆகவும் அமைய முடியும்.

அல்லாஹ்வுடைய கட்டளையை பூரா உம்மத்துக்கு மத்தியிலும் கொண்டு வர நினைப்பவர்கள் வாசி என்கின்ற அல்லாஹ்வுடைய முதல் கட்டளைக்கு மாறு செய்பவர்களாக இருக்க முடியாது. வாசிப்பதையே வெறுக்கின்ற ஒரு கூட்டத்தினால், வாசிப்பைத் தடை செய்கின்ற ஒரு கூட்டத்தினால் அல்லாஹ்வின் கட்டளையை சமூகத்தில் நடைமுறைப்படுத்த முடியாது.

அடுத்த வாசிப்பு மாதத்திலாவது அறிவு மையங்களை ரூஹானியத்தாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் முஸ்லிம்களை கைது செய்ய இரகசிய இராணுவ முகாம்



சீனாவின் கிழக்கு துர்கிஸ்தான் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களைக் கைதுசெய்தவற்காக இரகசிய இராணுவ முகாம்கள் இயங்குவதை சீனா ஏற்றுக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் இக்குற்றச்சாட்டை மறுத்து வந்து சீனா அரசசார் பற்ற நிறுவனங்கள் பலவும் ஆதாரங்களை வெளியிட்டதைத் தொடர்ந்து அங்கு இரகசிய இராணுவ முகாம் இருப்பதை ஏற்றுக் கொண்டுள்ளது.

சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான உய்கூர் இன முஸ்லிம்களை சட்ட ரீதியற்ற முறையில் கைது செய்து சீனா தடுத்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. துருக்கியப் பூர்வீகத்தைக் கொண்ட உய்கூர் இன முஸ்லிம்கள் வாழும் பகுதிகளை 1949 முதல் சீனா ஆக்கிரமிப்பு செய்து வருகிறது.

உத்தியோகபூர்வ கணக்கெடுப்பின் படி சீனாவில் மொத்தம் 30 மில்லியன் முஸ்லிம்கள் வாழ்வதுடன் அவர்களில் 23 மில்லியன் முஸ்லிம்கள் உய்கூர் இனத்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. ஆனால் உத்தியோகபூர்வமற்ற அறிக்கைகளின் படி சீனாவின் முஸ்லிம்கள் 100 மில்லியன்கள் என தெரிவிக்கிறது. அதாவது சீனாவின் மொத்த சனத்தொகையில் 9.5 வீதமாகும்.

## தேசப் பார்வை



# ஜமால் காஷுகியின் மரணம் திட்டமிடப்பட்ட அரசியல் படுகொலை



துருக்கிய ஜனாதிபதி ரஜப் தய்யிப் அர்துகான்

சவூதி அரேபிய ஊடகவியலாளர் ஜமால் கஷூகி ஸ்தான்பூலிலுள்ள சவூதி அரேபிய துணைத் தூதரகத்தினுள் கொலை செய்யப்பட்டமை ஒரு திட்டமிடப்பட்ட அரசியல் படுகொலை என துருக்கிய ஜனாதிபதி ரஜப் தய்யிப் அர்துகான் தெரிவித்துள்ளார்.

ஜமால் கஷூகி கொலை செய்யப்பட்டமை மிகுந்த கவலையளிக்கின்றது. சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சின்படி இவற்றை விசாரணை செய்யும் பொறுப்பை துருக்கி ஏற்றுக் கொள்கிறது. ஸ்தான்பூலில் இடம்பெற்றிருக்கும் இக்கொலையில் நாம் பொறுப்பற்ற விதத்தில் நடந்த கொள்ள முடியாது. இக்கொலைக்கு பின்னணியில் இருந்த கீழ் மட்ட குற்றவாளிகள் தொடக்கம் உயர் மட்ட அதிகாரிகள் வரை அனைவரையும் விசாரணை செய்ய வேண்டும். இவ்விடயத்தில் சவூதி அரேபியாவுடன் ஒத்துழைப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம். வேறு யாருடனுமல்ல என கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்தியில் ஆற்றிய உரையில் அர்தூகான் குறிப்பிட்டுள்ளார்.

சவூதி அரேபியா இக்கொலையின் பின்னணியில் இருந்தார்கள் எனக் குற்றம் சாட்டி 18 பேரைக் கைது செய்திருக்கிறது. அவர்கள் அனைவரையும் துருக்கியில் வைத்து விசாரணை செய்ய வேண்டும் என சவூதி அரேபிய மன்னர் சல்மானிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜமால் கஷூகியை கொலை செய்தவர்கள் அவரது உடம்பை துருக்கியர் ஒருவரிடம் வழங்கியதாகத் தெரிவித்துள்ளனர். அவர் யார் என்பதை எமக்குத் தெரியப்படுத்த வேண்டும். துணைத் தூதரகத்தை விசாரணை செய்யக் கோரிய போது உடனடியாகத் திறந்து தராமல் தாமதித்ததற்கான காரணத்தை எமக்குச் சொல்ல வேண்டும் எனவும் துருக்கிய ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.


ஜமால் கஷூகி கொலை தொடர்பாக சவூதி அரேபியா முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் கஷூகி வெளியேறிவிட்டதாக முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் தெரிவித்திருந்தார். ஆனால் கஷூகி காணாமல் போய் சுமார் இரு வாரங்களின் பின்னர் கஷூகி துணைத் தூதரகத்தினுள் இருந்த சிலரோடு ஏற்பட்ட கைகலப்பின் போது இறந்ததாக சவூதி அரேபியா ஏற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்நிலையிலே அது வொரு அரசியல் படுகொலை எனவும் அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் துருக்கிய ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈராக்கின் புதிய பிரதமராக ஆதில்



ஈராக்கில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பர்ஹம் ஸாலிஹ் வெற்றிபெற்றுளளதைத் தொடர்ந்து அங்கு புதிய அரசாங்கம் அமைக்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. முன்னாள் பெற்றோலிய வள அமைச்சரான ஆதில் அப்துல் மஹ்தியை புதிய அரசாங்கத்தை அமைக்கும் படி ஜனாதிபதி பணித்துள்ளார். முதலாளித்துவ குடும்பத்தை பின்னணியைக் கொண்ட ஆதில் பரவலாக அரசியல் செல்வாக்கை பெற்றவராகக் கருதப்படுகிறார்.

# சூடான் முன்னாள் ஜனாதிபதி சிவாருஸ்-ஸஹப் மரணம்



சூடானின் முன்னை நாள் ஜனாதிபதி பீஃல்ட் மார்ஷல் அப்துர் ரஹ்மான் சுவார் அஸ்-ஸஹப் கடந்த ஒக்டோபர் 18 ஆம் திகதி சவூதி அரேபியாவின் றியாத் நகரில் வபாத்தானார்.

1934 ஆம் ஆண்டு சூடானின் உம்திர்மான் பகுதியில் பிறந்த சிவாருஸ் ஸகப் சூடான் இராணுவத்தில் முக்கிய பதவிகள் பலதை வகித்திருக்கிறார். சூடானின் இராணுவத் தளபதியாகவும், 1985 இல் பாதுகாப்பு அமைச்சராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

1985 ஆம் ஆண்டு சூடானில் இடம்பெற்ற நிமைரிக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியை அடுத்து இராணுவ சபை ஊடாக நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். ஆனால் ஒரு வருடம் மாத்திரமே ஆட்சியில் இருந்த அவர் பின்னர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். இதன் மூலம் அறபுலக ஆட்சியாளர்களிலே சுயவிருப்பின் பேரில் அதிகாரத்தை விட்டுக் கொடுத்த ஒரேயொரு தலைவராக அவர் மதிக்கப்படுகிறார்.

அரசியலிலிருந்து ஒதுங்கிய அவர் இஸ்லாமிய தஃவா அமைப்பு என்ற நிறுவனத்தின் நிறைவேற்று சபை தலைமையை பொறுப்பேற்றதுடன் பல சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார். நூற்றுக்கணக்கான பாடசாலைகள், வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள், குழந்தை பராமரிப்பு நிலையங்கள், அநாதை நிலையங்கள், பள்ளிவாயல்களை நிறுவியதுடன் மக்களுக்கான பல அடிப்படை வசதிகளை உருவாக்கிக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டு வந்தார். அவரின் மறைவு குறித்து சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் தமது அனுதாபங்களை தெரிவித்துள்ளனர்.

'நிமைரியின் சர்வாதிகாரத்திலிருந்து மக்களை விடுவித்தவர் சுவாரி அஸ்-ஸஹப். அதிகாரத்தையும் அதன் பகட்டையும் துறந்ததுடன், இராணுவத்தையும் அதன் உயர் பதவிகளையும் விட்டுக் கொடுத்தவர். இஸ்லாத்தின் தூதை சுமந்திருந்த அவர் உலகப் பற்றற்றவராகவும், மிகுந்த பணிவுள்ளவராகவும் வாழ்ந்து காட்டினார். சூடானின் இராணுவ ஆட்சியார்களும் அறபுலக ஆட்சியாளர்களும் அவரிடமிருந்து அரசியல் விழுமியங்களை கற்பார்களானால் எவ்வளவு சிறப்புக்குரியது!' என பிரபல இஸ்லாமிய சிந்தனையாளர் முஃக்தார் ஷன்கீதி தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# 14 மில்லியன் யெமனியர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர்



2014 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட உள்நாட்டு போரைத் தொடர்ந்து மிகப் பெரும் மனிதாபிமான நெருக்கடி நிகழும் நாடாக யெமன் மாறியிருக்கிறது. கடந்த நூறு ஆண்டுகளில் உலகில் மிகப் பெரும் பட்டினிச் சாவு நிகழும் நாடாக யெமன் கருதப்படுகிறது.

29 மில்லியன் மக்கள் சனத்தொகையைக் கொண்ட யெமனில் 22 மில்லியன் மக்கள் அடுத்தவர்களின் உதவியை எதிர்பார்த்திருப்பதாகவும், 14 மில்லியன் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியிருப்பதாகவும் அனாதூல் செய்திஸ்தாபனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

யெமனின் சனத்தொகையில் 75 வீதமானவர்களுக்கு பாதுகாப்பும் உதவியும் தேவைப்படுவதாகவும், 18 மில்லியன் பேர் தமக்கான உணவுகள் எப்படிப் பெற்றுக் கொள்வதென்பதை அறியாதிருக்கிறார்கள் எனவும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

அறபு கூட்டணிப் படைகளுக்கும் ஹூதீக்களுக்கும் இடையிலான யுத்தத்தின் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தின் வீழ்ச்சியும் நாளுக்கு நாள் மனிதாபிமான நெருக்கடியை அதிகரித்து வருகிறது. 2017 முதல் கொலரா நோயினால் 2510 யெமனியர்கள் மரணித்துள்ளனர். 3 மில்லியன் பேர் நாட்டை விட்டு புலம்பெயர்ந்துள்ளனர். 2015 மார்ச் மாதத்திற்கும் 2018 ஆகஸ்ட் மாதங்களுக்கு இடையே கொல்லப்பட்டவர்களில் 2503 குழந்தைகள் உள்ளடங்குகின்றனர்.

## ஜோர்தான் இஸ்ரேலிடமிருந்து நிலங்களை மீட்கிறது



ஜோர்தானுக்குச் சொந்தமான இரு பிரதேசங்களை இஸ்ரேலுக்கு குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கையை மீளப் புதிப்பிக்கப் பேவாதில்லை என ஜோர்தான் அறிவித்துள்ளது. இவ்விரு பிரதேசங்களும் 25 வருட குத்தகைக் காக இஸ்ரேலுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தீர்மானத்தை மீள்பரிசீலிக்மாறு இஸ்ரேல் கோரியுள்ளது. இல்லாதபட்சத்தில் இஸ்ரேலிடமிருந்து நீரைப் பெற்றுவரும் அம்மான் வாரத்தில் 4 நாட்களுக்கு பதிலாக 2 நாட்களுக்கே நீரைப் பெற்றுக் [illegible] விவசாய அமைச்சர் எச்சரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜமால் கஷூகி துலங்கும் மர்மங்கள்



• றவூப் ஸெய்ன்

"உனது கருத்தில் எனக்கு அணுவளவும் உடன்பாடில்லை. ஆனால், அக்கருத்தைச் சொல்வதற்கு உனக்குள்ள உரிமையைப் பாதுகாக்க கடைசி வரை நான் போராடுவேன்."

இது ரூஸோவுடன் கருத்து முரண்பாடு கொண்ட வோல்ட்டேயர் கூறிய அற்புதமான வார்த்தைகள்.

சமீபத்தில் துருக்கியின் ஸ்தன்பூல் நகரிலுள்ள சவூதி தூதரகத்தின் உள்ளே வைத்து கொல்லப்பட்டதாகக் கூறப்படும் ஜமால் கஷூகியை நினைக்கும் போது இந்த வார்த்தைகளே நினைவை அவாவுகின்றன.

ஒக்டோபர் 02 இல் சவூதி பத்திரிகையாளர் ஜமால் கஷூகி ஸ்தன்பூலிலுள்ள தூதரகத்தில் நுழைகிறார். நுழையும் போது நேரம் பி.ப. 1.14. வொஷிங்டன் போஸ்ட் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. பி.ப. 1.14 இற்குப் பின்னர் கஷூகியை காணவில்லை. மாயமாக மறைந்த கஷூகி குறித்து பல மர்மமான பக்கங்கள் உலக ஊடகங்களை ஆக்கிரமித்தவண்ணமுள்ளன.

உலகின் சுதந்திர ஊடகவியலாளர்களை இந்தச் சம்பவம் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. மனச்சாட்சியுள்ள பத்திரிகையாளர்களைப் பயமுறுத்தும் இந்த நிகழ்வு உலகிற்குச் சொல்லும் செய்தி என்ன?

பெரும்பாலும் ஜமால் கஷூகி கொல்லப்பட்டு விட்டார் என்றே நம்பப்படுகின்றது. அவரது மரணம் குறித்து மிகத் துல்லியமானதும் உத்தியோகபூர்வமானதுமான எந்த அறிக்கையும் துருக்கியிடமிருந்தோ சவூதியிடமிருந்தோ வெளிவராத நிலையிலேயே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

ஒக்டோபர் 15 இல் ஸ்தன்பூலில் உள்ள சவூதி தூதரகத்தில் நுழைந்த துருக்கியின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 9 மணித்தியால தீவிர தேடுதலின் பின்னர் அங்கிருந்து வெளியேறினர். தூதுவராலயத்தின் பல்வேறு பகுதியையும் துருவி ஆராய்ந்த அவர்கள் சில மாதிரிகள் (Samples) கிடைத்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

சேகரிக்கப்பட்ட இரத்தத் துளிகள் DNA பரி சோதனைக்கு உட்படுத்தப்படும் எனவும், அது காணாமல் போன ஜமால் கஷூகியின் நிலை குறித்த உண்மைகளை வெளிப்படுத்தும் எனவும் ஸ்தன்பூலில் உள்ள அல்ஜஸீராவின் செய்தியாளர் என்ட்ரோ சிமன்ஸ் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுக் குழுவில் இடம்பெற்ற சட்ட மருத்துவர்களும் தூதுவராலயத்தை மட்டுமன்றி வாகனத் தரிப்பிடம், சுற்று வட்டாரத்தையும் துருவி ஆராய்ந்துள்ளனர். கஷூகி காணாமல் போன தினம் சவூதி தூதரகத்திலிருந்து தூதுவரின் வாசஸ்தலத்திற்கு கார் ஒன்று ஓட்டிச் செல்லப்பட்டதற்கான வீடியோ ஆதார மொன்று கிடைத் துள்ளது. அதே வேளை, இத்தினம் எதிர்பாராத வாறு திடீரென தூதுவர் முஹம்மத் அல் உதைபியும் அவரது குடும்பமும் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளது.

துருக்கியின் உள்விவகார அமைச்சர் கிடைக்கப் பெற்றுள்ள ஆதாரங்கள் குறித்து புலனாய்வு விசாரணைகள் நடாத்தப்படும் எனவும், முடிவுகள் சர்வதேச சமூகத்தோடு பகிரப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் துருக்கிய பத்திரிகையொன்று படுகொலைச் சம்பவம் குறித்த வரைபட மொன்றை வெளியிட்டுள்ளது. அதன்படி கொலை தூதுவரலாயத்தின் உட்பகுதிலேயே இடம்பெற்றுள்ளது. கஷூகி தூதுவரலாயத்தில் நுழைந்து ஒரு சில நிமிடங்களிலேயே கொல்லப்பட்டுள்ளார். அவரது விரல்கள் வெட்டப்பட்டுள்ளன. கடும் சித்திரவதைக்கு உள்ளாகியிருக்கிறார். பின்னர் அவரது தலை வெட்டப்பட்டு உறுப்புக்கள் துண்டு துண்டாக்கப்பட்டுள்ளன. இது குறித்த ஒலிப்பதிவொன்று கிடைக்கப் பெற்றுள்ளதாக யனீ ஸபாக் எனும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வெளியேறிச் சென்ற தூதுவர் முஹம்மத் அல் உதைபிக்கு கொலையாளிகள் கஷூகியை சித்திரவதை செய்தபோது அவர் அலறிய சத்தத்தை பதிவுசெய்து அனுப்பியுள்ளனர். இந்த ஒலிப் பதிவு உலகின் பல நாடுகளுக்கும் கசிந்துள்ளது. ஸ்தன்பூல் தூதுவராலயத்தின் உள்ளேயே கஷூகி சித்திரவதை செய்யப்பட்டு இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை அந்த ஒலிப் பதிவு துல்லியமாக வெளிப்படுத்துகின்றது. அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பேவும் கசிந்துள்ள இந்த ஒலிப்பதிவை செவிமடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. ஆனால், ராஜாங்க திணைக்களப் பேச்சாளரோ இதனை மறுத்துள்ளார்.

அசோசியேடட் பிரஸ் இந்த ஒலிப் பதிவைப் பெற்றுள்ளது. இது குறித்து சவூதி அதிகாரிகளி டம் விளக்கம் கேட்டபோது அவர்கள் எந்தப் பதிலையும் வழங்கவில்லை என்று அச்செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது பெறப்பட்ட ஆதாரங்கள் புலனாய் வுக்கு உட்பட்டுள்ளதால் மிக அவசரமாக இதன் முடிவுகள் வெளி வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இச்செய்தி எழுதப்படும் வரை துருக்கிய புலனாய்வுப் பிரிவு கஷூகியின் கொலை குறித்து புலனாய்வு முடிவு எதனையும் வெளியிடவில்லை.

## பிரபல அரசியல் சிந்தனையாளர் கலாநிதி அஸாம் தமீமி



படுகொலை செய்யப்பட்ட ஜமால் கசூகியின் நெருங்கிய நண்பரும் அரசியல் ஆய்வாளருமான அஸாம் தமீமி, துருக்கிய அதிகாரிகளை குற்றம் சாட்டியுள்ளார். துருக்கிய ஜனாதிபதி அர்தூகான் கசூகியின் மறைவு குறித்து உடனடியான விசாரணைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். அதற்கென அவரது உளவுப் பிரிவை பயன்படுத்தியிருக்க வேண்டும். துருக்கிய அதிகாரிகள் சிலர் உத்தியோகப்பற்றற்ற வகையில் கசியவைத்த சில செய்திகளே கஷூகி படுகொலை செய்யப்பட்டார் என்பதை உலகத்திற்கு வெளிப்படுத்தின. உத்தியோகபூர்வமாக துருக்கிய அரசாங் கம் சம்பவம் குறித்து இதுவரை அறிக்கையொன்றை வெளியிடவில்லை. இது அர்தூகானின் நம்பகத் தன்மை குறித்த சந்தேகத்தை எழுப்புவதாக தமீமி தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 15 இல், அதாவது கஷூகி காணாமல் போய் 13 ஆவது நாளே துருக்கிய அதி காரிகள் ஸ்தன்பூலிலுள்ள சவூதி தூதுவரலாயத்தில் நுழைந்தனர். அவர்கள் கஷூகி சவூதி தூதுவராலயத்தின் உள்ளே வைத்து கொல்லப்பட்டுள்ளார் என்ற ஆதாரங்கள் கிடைத்துள்ள தாகத் தெரிவித்துள்ளனர். ஆனால், விசாரணைக் குழுவில் இடம்பெற்ற பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவரே அல் ஜஸீராவுக்கு இக்கருத்தினை தெரிவித்தார் என பிரபல அரசியல் சிந்தனையாளர் அஸாம் தமீமி துருக்கி அரசாங்கத்தைச் சாடியுள்ளார்.

## துருக்கிய புலனாய்வு அதிகாரிகள் கூறுவதென்ன?

ஜமால் கஷூகி ஸ்தன்பூலிலுள்ள சவூதி தூதரகத்தில் கொன்ஸுலர் ஜெனரலின் அறையிலிருந்து இழுத்துச் செல்லப்பட்டு மிக மோசமாக சித்திரவதை செய்யப்பட்டு 2 நபர்களால் கொல்லப்பட்டார். அவரது உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டது என துருக்கிய விசாரணைக் குழுவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் Middleast Eye பத்திரிகையிடம் தெரிவித்துள்ளது.

எப்போது, எங்கே, எந்தக் கட்டடத்தில் கஷூகி கொல்லப்பட்டார் என்பதை தாம் நன்கு அறிவதாக துருக்கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கொன்ஸுலர் ஜெனரலின் தோட்டத்தில் கொல்லப்பட்ட அவரது உடல் புதைக்கப்பட்டிருக்கலாம் என துருக்கிய அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

Middleast Eye பத்திரிகைக்கு துருக்கியின் புலனாய்வுக்கு குழுவினர் இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளனர். "ஜமால் கஷூகி எப்போது கொல்லப்பட்டார் என்பதை நாம் அறிவோம். அவர் எந்த அறையில் கொல்லப்பட்டார் என்பதையும், உடல் எவ்வாறு கண்டம் துண்டமாக வெட்டப்பட்டது என்பதையும் நாம் அறிவோம். சட்ட மருத்துவக் குழுவினர் இது தொடர்பாக விசாரிக்க அனுமதிக்கப்பட்டால் மிகத் துல்லியமான தகவல்களை நாம் அறிந்து கொள்ளலாம் என பெயர் குறிப்பிட விரும்பாத புலனாய்வுக் குழுவின் உறுப்பினர் ஒருவர் மேற்படி பத்திரிகைக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

கஷூகி முதன் முறையாக செப்டம்பர் 28 இல் சவூதி தூதரகத்திற்குச் சென்றுள்ளார். அதன்போது ஒரு சவூதி ராஜதந்திரியையும் சந்தித்து தனக்கு சில ஆவணங்கள் வேண்டும் எனக் கோரியுள்ளார். அவ்வேளை, அந்த ராஜதந்திரி சவூதி புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவரின் தொலைபேசி இலக்கத்தை அவரிடம் வழங்கியுள்ளார். கஷூகியை தொலைபேசியில் தொடர்புகொண்ட அப்புலனாய்வு அதிகாரி, தாம் வேண்டும் ஆவணத்தை வழங்குவதற்கு தற்போதைக்கு குறிப்பிட்ட ராஜதந்திரியினால் முடியாது எனவும், அடுத்த வாரங்களில் மீளவும் தூதரகத்திற்கு வருகை தருமாறும் வேண்டியுள்ளார்.


குறிப்பிட்ட புலனாய்வு அதிகாரியின் தொலை பேசி இலக்கத்தைப் பெற்றுக் கொண்டு கஷூகி செப்டம்பர் 28 இல் வெளியேறிவிட்டார். செவ்வாய் (20-10-2018) காலையில் கஷூகி தொலைபேசியில் தொடர்பு கொண்டு தூதரகத்திற்கு வருகை தந்தால் தனது ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாமா எனக் கேட்டுள்ளார். அப்போது ஆவணங்கள் தயார் என்று கூறப்பட்டுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு தூரகத்திற்கு வருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

பி.ப. 1.00 மணிக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பாக அன்றைய தினம் தூதரக உத்தியோகத்தர்களில் உள்ளூரைச் சேர்ந்தவர்கள் தமது பகலுணவுக்காக வழமை போன்று வெளியே சென் றுள்ளனர். அவர்கள் வெளியே சென்றதன் பின்னர் மீண்டும் திரும்பி வர வேண்டியதில்லை. மாலை வேளையை விடுமுறையாக எடுத்துக் கொள்ளுமாறும் உயர் மட்ட ராஜதந்திரக் கூட்டமொன்று நடைபெறவுள்ளதாகவும் ஸ்தன்பூல் சவூதித் தூதரகத்தில் பணியாற்றும் துருக்கிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நேரத்தில் கஷூகி தூதரகத்திற்குள் சென்றார். வொஷிங்டன் போஸ்ட் அவர் நுழையும் படத்தை வெளியிட்டுள்ளது. அவர் செல்லும் பொழுது நேரம் பி.ப. 1.14 நிமிடமாகும். அவரை ஒரு அதிகாரி வரவேற்று கொன்ஸுலர் ஜெனரலின் அறைக்கு அழைத்துச் சென்றார். சிறிது நேரத்திற்குப் பின்னர் அவ்வறையில் இருவர் சடுதியாக நுழைந்தனர். கொன்ஸுலரின் அறையிலிருந்து இன்னொரு அறைக்கு அவரை அழைத்துச் சென்றனர் எனத் தெரிவித்த துருக்கிய புலனாய்வு அதிகாரிகள் அவர் எவ்வாறு கொல்லப்பட்டார் என்று குறிப்பிடவில்லை.

பின்னர், கஷூகியின் உடல் மூன்றாவது அறைக்கு இழுத்துச் செல்லப்பட்டது. அங்கு கண்டம் துண்டமாக வெட்டப்பட்டது என்று அப்புலனாய்வு அதிகாரி தெரிவித்தார்.

இதற்கிடையில் அல்ஜஸீராவுக்கு வாக்குமூல மளித்துள்ள சவூதி தூதரகத்திற்கு சமீபமாக வசிக்கும் துருக்கிய பிரஜை ஒருவர், "தூதரகத்தில் ஒரு வர் வேதனையால் அலறும் சத்தத்தைக் கேட்ட தாகவும் ஒரு சில நிமிடங்களில் அது அடங்கிப் போனதாகவும் தெரிவித்துள்ளார். துப்பாக்கிச் சத்தம் கேட்கும் எனக் கருதிய கொலைகாரர்கள் கஷூகியை வாளால் வெட்டியே கொலை செய்துள்ளதாக நம்பப்படுகின்றது.



கஷூகியின் கொலையால் சவூதி அறேபியா பல்வேறு பின்விளைவுகளைச் சந்தித்து வருகின்றது. சர்வதேச ஊடகங்கள் சவூதி அரசாங்கமே கொலைக்குக் காரணம் என்பதை நிறுவி வருகின்றது. இதற்கிடையில் சவூதியின் பங்குச் சந்தை 7 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

சவூதியில் செப்டம்பர் 28 இல் நடைபெற விருந்த சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டை பல முதலீட்டாளர்களும் தனிப்பட்ட கம்பனிகளும் பகிஷ்கரித்துள்ளன. கூகுல் நிறுவனம் இம்மாநாட்டைப் பகிஷ்கரித்துள்ளதோடு, மேலும் பல சர்வதேச முதலீட்டாளர் நிறுவனங்கள் மாநாட்டை பகிஷ்கரித்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா என்பன சுதந்திரமான ஒரு விசாரணை வேண்டும் என்று கோரியுள்ளதோடு, விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கு வதாகவும் தெரிவித்துள்ளன.

ஒக்டோபர் 02 இல் காணாமல் போன (துருக் கிய அதிகாரிகளின் கருத்தில் படுமோசமாகக் கொலைசெய்யப்பட்ட) கஷூகி, ஏன் கொல்லப்பட்டார்? சவூதி அறெபியா ஏன் அவரை இலக்கு வைத்தது? கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நெரிப்பதும் ஜனநாயகக் குரலை மௌனமாக்குவதுமே கொலையாளிகளின் நோக்கமா? சர்வதேச நாடுகள் குறிப்பாக ஊடக சுதந்திரம் குறித்துப் பேசும் நாடுகள் இது குறித்து என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றன?

சர்வதேசப் புகழ்வாய்ந்த, 30 ஆண்டுகள் ஊடக அனுபவம் பெற்ற ஒரு மூத்த பத்திரிகையாளர் குரூரமாகக் கொல்லப்பட்டிருப்பது ஊடகத் துறை சார்ந்த அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. மயிர்க் கூச்செறியச் செய்யும் இப்படுகொலை நாகரிகமடைந்த மனித குலத்திற்குச் சொல்லும் அடிப்படைச் செய்தி என்ன? சர்வதேச அளவில் சவூதி மீது மலை போல் குவியும் விமர்சனக் கணைகளையும் கண்டன அலைகளையும் சமாளிப்பதற்கு சவூதி திடீரென்று ஒரு சதிக் கோட்பாட்டைக் கண்டுபிடித்துள்ளது. கொடூரக் கொலையாளிகள் கோட்பாடு (Rough Killers Thoery) என வொஷிங்டன் போஸ்ட் இதனை கண்டித்துள்ளது. அதாவது எய்தியவன் இருக்க அம்பைக் குறை சொல்வது போல் தமக்கும் இப்படுகொலைக்கும் இடையில் எவ்வித தொடர்புமில்லை என திரும்பத் திரும்பக் கூறிவரும் மன்னர் சல்மானும் அவரது மகனும் கண்டுபிடித்துள்ள கபட நாடகமே கொடூரக் கொலையாளிக் கோட்பாடாகும்.

தமது அதிரடி சீர்திருத்தங்களையும் இஸ்ரேலுடனான கள்ள உறவுகளையும் கடுமையாக விமர்சித்து வந்த ஜமால் கஷூகியை முன்னரே திட்டமிட்டு படுகொலை செய்துள்ள சவூதி உலக வரலாற்றிலேயே ஒரு புதிய உலக சாதனையைப் படைத்துள்ளது. அதுதான் மாற்றுக் கருத்துள்ள ஒருவரை தூதரகமொன்றில் கொடூரமாகக் கொன்றமையாகும்.

உத்தியோகபூர்வமாக ஒரு இராஜதந்திர அலு வலகமான தூதரகமொன்றில் வைத்து மாற்றுக் கருத்துள்ள ஒருவரை கண்டம் துண்டமாக வெட்டிக் கொன்றமை இதுவே உலக வரலாற்றில் முதன் முறையாகும். இந்த மகா தவறை இழைத்த மன்னரும் மகனும் யாரோ ஒரு குழு கஷூகியை கொன்றுதான் விட்டது. அவர்கள் படுபாவிகள். சுதந்திர விசாரணை மூலம் அவர்களைக் கண்டு பிடித்து தகுந்த தண்டனை வழங்கப் போவதாக கதை அளப்பது எவ்வளவு பெரிய வேடிக்கை. இன்னொரு புறம் மிகப் பெரிய துரோகம்.

அரசியல் எதிரிகளை அதிலும் வெறுமனே விமர்சனக் கட்டுரை எழுதுகின்றவர்களைக் கூட சகித்துக் கொள்ள முடியாத தீவிர மன்னராட்சி எவ்வளவு ஆபத்தானது என்பதை ஜமால் கஷூகியின் கொலை உணர்த்துகின்றது.

70 வயதான அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் புத்தி பேதலித்தவர். அமெரிக்காவை ஆளும் உளப் பலம் இல்லாதவர் என்று அவருக்கு சமீபமாக இருந்தவர் ஒரு நூலையே எழுதினார். ட்ரம்ப் அவரை கொலை செய்யவில்லை. சித்தரவதை செய்யவுமில்லை. குறைந்த பட்சம் ஒரு வழக்கை யேனும் தாக்கல் செய்யவில்லை. ஆனால், இதே ட்ரம்பின் ரிமோட் கொன்ரோலின் கீழ் இயங்கும் மத்திய கிழக்கு மன்னர்கள் கருத்துச் சுதந்திரத்தை எதிர்கொள்வதில் எவ்வளவு குரூரமானவர்கள் என்பதை ட்ரம்ப் உணர வாய்ப்பில்லை.

அவரது சகிப்புக்கு செஞ்சோற்றுக் கடனாக வழங்கப்படும் சவூதியின் எண்ணெய் வளம் ஆட்சியாளர்களின் அத்தனை குற்றங்களையும் மறைப்பதற்குப் போதுமானது. கருத்துச் சுதந்திரத்தின் மீது நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் -ஏன் மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு மனிதனும் கஷூகியின் இந்தப் படுகொலையை நிச்சயம் கண்டிப்பான் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைக்கு பலியாகும் புத்தளம் மக்கள்

அப்துல்லாஹ் மர்லின்

**'எதிர்காலத்தில் சுத்தமான காற்றை சுவாசிக்கவும் சுத்தமான சூழலில் வாழவும் கூடிய வசதியை எங்களுக்கு ஏற்படுத்தி தாருங்கள்'**

இது புத்தளம் பிரதேச செயலகத்திற்கு முன்பாக கூடிய பாடசாலை மாணவர்கள் விடுத்த கோரிக்கை.



கொழும்பிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் சேர்கின்ற திண்மக் கழிவுகளை வட மேல் மாகாணத்திலுள்ள புத்தளம் பிரதேசத்திற்குக் கொண்டு வரவென முன்னெடுக்கப்படும் திட்டத்திற்கு ஆட்சேபனை தெரிவித்தே புத்தளம் பிரதேச பாடசாலை மாணவர்கள் அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றனர். இக்கோரிக்கையை அவர்கள் மகஜராகவும் கையளித்துள்ளனர்.

கொழும்பில் சேர்கின்ற திண்மக் கழிவுப் பொருட்களை புத்தளம் சேரக்குளி பிரதேசத்தில் கொட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆரம்ப கட்ட வேலைகளும் தற்போது தொடங்கியுள்ளன.

என்றாலும் கொழும்பில் சேர்கின்ற குப்பைகளை கொழும்பிலிருந்து சுமார் 170 கிலோ மீற்றர்கள் தூரத்திலுள்ள புத்தளம் சேரக்குளிக்குத்தான் கொண்டு வர வேண்டுமா? இதனை விடவும் கொழும்புக்கு அண்மையில் இடங்கள் கிடையாதா? இன்றைய நவீன யுகத்தில் குப்பைகளை மீள்சுழற்சி செய்து பெறுமதி சேர்த்த பொருட்களாகப் பயன்படுத்தும் முறைமைகள் காணப்படும் போது அவற்றைப் புத்தளம் பிரதேசத்திற்குக் கொண்டு வந்து புதைக்கத்தான் வேண்டுமா? இந்தத் திண்மக் கழிவுகளைப் பணம் கொடுத்து கொள்வனவு செய்யவென எத்தனையோ நிறுவனங்கள் இருந்த போதிலும் அவற்றை விற்பனை செய்து பணமாக்காததன் நோக்கம் என்ன? வெளியிடக் குப்பைகளைப் புத்தளம் பிரதேசத்திற்குக் கொண்டு வரவேண்டாமென கோரி புத்தளம் கொழும்புத் திடலில் மூன்று வாரங்களுக்கும் மேலாக பொதுமக்கள் சத்தியாக்கிரகம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை அரசாங்கம் கண்டு கொள்ளாதிருப்பதன் மர்மம் என்ன? என்றவாறான கேள்விகளும் புத்தளம் பிரதேச மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்றன.

இவ்வினாக்களின் பின்புலத்தில்தான் புத்தளம் பிரதேச மக்கள் இந்த திண்மக் கழிவகற்றல் திட்டத்திற்கு ஆட்சேபனை தெரிவித்து வருகின்றனர். இத்திட்டம் தொடர்பிலான ஐயங்களும் சந்தேகங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. ஏனெனில், புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை, நுரைச்சோலை அனல் மின்நிலையம் என்பன அமைக்கப்பட முன்னர் பிரதேச மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அதனால் தோற்றம் பெற்றுள்ள சுற்றுச் சூழல் தாக்கங்களையும், பாதிப்புக்களையும் புத்தளம் பிரதேச மக்கள் தான் அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் வெளியிடக் கழிவுப் பொருட்களையும் இங்கு கொண்டு வந்து திண்மக் கழிவகற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுமாயின் அதனால் மிக மோசமான பாதிப்புக்களுக்கும் தாக்கங்களுக்கும் முகம்கொடுக்க நேரிடும் என பிரதேச மக்கள் அஞ்சுகின்றனர்.

இத்திட்டம் பிரதேச மக்களுக்கோ சுற்றுச் சூழலுக்கோ பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் சர்வதேச தரத்தில் முன்னெடுக்கப்படும் என்று அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் மக்கள் மத்தியில் காணப்படும் சந்தேகங்களுக்கும் ஐயங்களுக்கும் இற்றைவரையும் தெளிவாகப் பதிலளிக்கப்படாத நிலைமையே நீடிக்கின்றது.

இப்பின்னணியில் புத்தளம் கொழும்புத் திடலில் மூன்று வாரங்களுக்கு மேலாகவும், அதற்கு ஆதரவு நல்கும் வகையில் கற்பிட்டி நகரில் சுமார் இரு வாரங்களாகவும் இத்திட்டத்திற்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இச்சத்தியாக்கிரகப் போராட்டங்களில் இன, மத, கட்சி, பால், வயது பேதங்கள் பாராது எல்லா மட்டத்தினரும் ஆதரவு நல்கி பங்குபற்றி வருகின்றனர்.

குறிப்பாக தற்போதைய அரசாங்கத்தின் பங்காளர்களாக இருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மாத்திரமல்லாமல் பிரதியமைச்சர்கள் அமீர் அலி, காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த, தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பிரதேச மட்ட அரசியல்வாதிகளும் ஆதரவு நல்கியுள்ளனர்.

இந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரிஷார்ட் பத்தியுத்தீன் ஆகியோர் இச்சத்தியாக்கிரக மைதானத்திலிருந்தே இத்திட்டத்தை மீள் பரிசீலனை செய்யுமாறும், கைவிடுமாறும் பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்தனர்.

நீர்ப்பாசனம், நீர்வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார 'இத்திட்டத்தைக் கைவிடுமாறும் வெளியிடக் குப்பைகள் புத்தளம் பிரதேசத்திற்குக் கொண்டு வரப்படுமாயின் போராட்டம் வெடிக்கும்' என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதேவேளை சர்வ மதத் தலைவர்கள் தலைமையில் கொழும்பு முகத்திடலில் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி சர்வ மதப் பிரார்த்தனை நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சர்வமதத் தலைவர்கள் தலைமையில் பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று புத்தளம் பிரதேச செயலகம் வரை நடாத்தப்பட்டு, வெளியிடக் குப்பைகளை புத்தளம் பிரதேசத்திற்கு கொண்டு வரவேண்டாமெனக் கோரும் மகஜரும் மாவட்ட மேலதிக செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, புத்தளம் நகர சபை, கற்பிட்டி பிரதேச சபை, புத்தளம் பிரதேச சபை, வன்னி மாவட்டத்தின் முசலி பிரதேச சபை மற்றும் வட மாகாண சபை என்பனவும் கூட வெளியிடக் குப்பைகளை புத்தளம் பிரதேசத்திற்குக் கொண்டு வரும் இத்திட்டத்திற்கு எதிராகத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

இவ்வாறு வெளிடக் குப்பைகளை புத்தளம் பிரதேசத்திற்குக் கொண்டு வரப்படுவதற்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அரசாங்கம் இந்நடவடிக்கைகளையோ மக்களின் ஆட்சேபனைகளையோ கடந்த மூன்று வாரங்களாகக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் இத்திட்டத்திற்கான நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றது. இது புத்தளப் பிரதேச மக்கள் மத்தியில் கவலையையும் வேதனையையும் மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இந்தப் பின்புலத்தில்தான் புத்தளம் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் மாணவர்கள் வீதியில் இறங்கி தங்களது எதிர்கால ஆரோக்கிய இருப்பை உறுதிப்படுத்துமாறு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இம்மாணவர்கள் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி வெள்ளியன்று காலையிலேயே கொழும்புத் திடலில் கூடினர். அத்தோடு புத்தளம் பிரதேச செயலகம் வரை ஊர்வலமாகச் சென்ற இம்மாணவர்கள் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு முன்பாக எதிர்காலத்தில் தாம் சுத்தமான காற்றை சுவாசிக்கவும், பாதுகாப்பான சுற்றுச் சூழலில் வாழவும் வசதி ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்து மகஜரொன்றையும் கையளித்தனர்.

இந்த கழிவகற்றல் திட்டம் புத்தளம் சேரக்குளி பிரதேசத்தில் 64 ஏக்கர் நிலப் பரப்பில் செயற்படுத்தப்பட உள்ளது.

இது ஒரு மீன்பிடிக் கிராமமாக இருக்கின்ற அதேநேரம், இத்திட்டம் முன்னெடுக்கப்படும் இடத்திற்கு அருகில் மக்கள் குடியிருப்புக்களும் காணப்படுகின்றன. அத்தோடு புத்தளம் களப்புக்கு 150 - 200 மீற்றர்களுக்கு அருகில் தான் இத்திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது.

மேலும் இத்திட்டம் முன்னெடுக்கப்படும் இடத்திலிருந்து சில கிலோ மீற்றர்கள் தூரத்தில் வில்பத்து சரணாலயம் காணப்படுகின்றது. அதனால் யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகளின் நடமாட்டம் இப்பிரதேசத்தில் மேலும் அதிகரிப்பதோடு யானை - மனிதன் மோதல் நிலை மேலும் தீவிரமடையும் என்பதே வனவிலங்குகள் தொடர்பான நிபுணர்களின் கருத்தாக உள்ளது.



இந்தத் திண்மக் கழிவகற்றல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் பிரதேசம் சுண்ணாம்புக் கற்பாறைகள் நிரம்பப் பெற்ற பகுதியாக உள்ளது. அதனால் இப்பிரதேசத்தில் சுத்தமான குடிநீர் காணப்படும் என்பதே நீர்வள ஆய்வாளர்களின் கருத்து.

அந்த வகையில் பானபொக்கே, சி.ஆர். பெரேரா, ஏ.பி.ஆர்.ஜி.எல். ஆகியோரது ஆய்வுக் கட்டுரையொன்றில் 'நிலக்கீழ் நீரூற்றுக்கள்' என்ற தலைப்பின் கீழ் இலங்கையின் நிலக்கீழ் தூய நீரூற்றுக்களுள் (Water Aquifers) ஒன்று இத்திட்டம் முன்னெடுக்கப்படும் பிரதேசத்திலேயே அமைந்துள்ளது. இந் நிலக்கீழ் நீரூற்றுகள் பாரியளவில் மாசடையாத நீரினைத் தேக்கி வைத்துள்ளன. இப்பகுதிக்கு மிக அண்மையிலேயே இலங்கையில் பரப்பளவு கூடிய ஆழ் நிலக்கீழ் நீரூற்று (Deep Confined Water Aquifer) காணப்படுகின்றது. இந்நீரூற்றுக்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவையும் அல்ல. அவை மாசடைந்தால் அதனை மீளமைக்கவோ முடியாதவை' என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் நீர்வளம் மிகவும் தட்டுப்பாடாகக் காணப்படுகின்ற காலகட்டத்தில் நீர் வளங்களைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியது காலத்தின் அவசியத் தேவையாகும். இதனை விடுத்து நிலக்கீழ் நீரூற்றுக்களைப் பாதிக்கக் கூடிய எந்தவொரு திட்டத்திற்கும் துணை போகக் கூடாது. அது இன்றைய மக்களுக்கு மாத்திரமல்லாமல் எதிர்கால சந்ததியினருக்கும் செய்கின்ற பெரும் சேவையாக அமையும்.

இந்த திண்மக் கழிவகற்றல் திட்டம் ஆரம்பமானதும் பறவைகள் இங்கு இரை தேட ஆரம்பிக்கும். இதன் விளைவாக இத்திண்மக் கழிவுகள் பிரதேச பறவைகளின் அழிவுக்கும் இடப்பெயர்வுக்கும் வழிவகுக்கும். அத்தோடு இத்திட்டத்திற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கும் பகுதி ஏற்கனவே புலம்பெயர் பறவைகளின் வருகை மிக்க பகுதியாகவும் விளங்குகின்றது. இவ்வாறான பிரதேசத்தில் இத்திட்டத்தை முன்னெடுக்கும் போது புலம்பெயர் பறவைகள் பலவித அசௌகரியங்களை எதிர்கொள்ளும். குறிப்பாக இப்பறவைகள் இப்பிரதேசத்திற்கான வருகையை இடைநிறுத்திக்கொள்ளும் அல்லது வேறு இடங்களுக்கு செல்லும் என்பதாக பறவைகளை அவதானிக்கும் பணியில் நீண்டகாலமாக ஈடுபட்டுவரும் நிபுணர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

இக்கழிவுப் பொருட்களில் இரை தேடும் பறவைகள் களப்புக்கு மேலாகவும், அப்பிரதேசங்களிலுள்ள இறால் பண்ணைகளின் மேலாகவும் பறக்கும் போது அவற்றின் கால்களில் ஒட்டிக் கொள்ளும் கழிவுகளும், கிருமிகளும் களப்பிலும், இறால் பண்ணைகளிலும் சேர முடியும். இதன் விளைவாக இறால் பண்ணைகளில் அடிக்கடி நோய்கள் ஏற்படலாம். அதனால் இப்பிரதேசத்தில் இத்தொழில் துறை பெரும் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய அபாயமும் நிலவுகின்றது. இது இத்தொழில் துறையைக் கைவிடும் நிலைக்குக் கூட இட்டுச் செல்லலாம்.

மேலும் இக்கழிவுப் பொருட்களிலிருந்து ஒரு வகை நச்சுத் திரவம் முக்கியமாக வெளியாகும். அதுவே லீச்செட். அத்திரவம் நிலக்கீழ் நீரில் சேருமாயின் இப்பிரதேச நீர் அசுத்தமடையும். அதன் விளைவாக பிரதேச மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும். இவ்வாறு லீச்செட்டினால் மாசடையும் நீர் களப்பிலும், அருகிலுள்ள நீர்நிலைகளிலும் சேரக்கூடிய அச்சுறுத்தலும் உள்ளன. அத்தோடு இக்கழிவுப் பொருட்கள் தரம் பிரிக்காது கொண்டு வரப்படவிருப்பதாகவே தெரிவிக்கப்படுகின்றது. அதனால் இப்பிரதேசம் பலவித இரசாயனத் தாக்கங்களையும் எதிர்கொள்ளும் என்பதே சுற்றுச் சூழல் ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.

அந்த வகையில் ஒரு சொட்டு பாதரசம் நீரில் சேருமாயின் பெருந்தொகை லீற்றர்கள் நீரை நச்சுத் தன்மை மிக்கதாக அசுத்தமடையச் செய்யும். இதன் விளைவாக இப்பிரதேசத்திலுள்ள வனவிலங்குகளும், பறவைகளும் நீரின்றி பெரும் அவஸ்தைக்கு உள்ளாகக்கூடிய நிலைமை கூட ஏற்படலாம். இந்நச்சுத் தன்மை கலந்த நீரை அவை பருகுமாயின் அவை ஒன்றில் செத்து மடியும் அல்லது பலவித அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்கும் என சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மேலும் இப்பகுதி மக்கள் நிலக்கீழ் நீரையே விவசாயத்திற்காகப் பாவித்து வருகின்றனர். இவ்வாறான நிலையில் லீச்செட் நிலக்கீழ் நீரில் கலக்குமாயின் விவசாயப் பயிர்களும் அழிவடையக் கூடிய ஆபத்தும் உள்ளன.

இப்பகுதியில் இறால்களும் நண்டுகளும் பாதுகாப்பாகக் குழுமியிருக்கும் கண்டல் தாவரங்களும், கடற் புற்களும் பரவலாகக் காணப்படுகின்றன. இக்களப்பு நீரில் இந்த லீச்செட் கலக்குமாயின் மீன்களும் பாதிப்படையும். சில சமயம் மீன் முட்டைகள் பாதிப்படைந்து மீனினங்கள் கூட அருகிவிடக் கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாக நீரியல் வாழ் உயிரின ஆய்வாளர் ஒருவர் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

இப்பிரதேசக் களப்பு நீரில் இந்த லீச்செட் சேருமாயின் அதன் விளைவாக இப்பிரதேச உப்பு உற்பத்தியும் பாதிக்கப்படும் என்பதே உப்பு செய்கையாளர்களின் கருத்தாக உள்ளது.

இந்த திண்மக் கழிவகற்றல் திட்டம் நடைமுறைக்கு வருமாயின் புத்தளம் களப்பை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றுவரும் மீன்பிடித்தொழில், உப்பு உற்பத்தி, இறால் வளர்ப்பு என்பன மாத்திரமல்லாமல் இப்பிரதேச விவசாயத் துறையும் கூட பாதிப்படையக் கூடிய ஆபத்துள்ளன. இதன் காரணத்தினால் புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்து பொருளாதார ரீதியில் நெருக்கடிகளுக்கு உள்ளாகக் கூடிய அச்சுறுத்தல்களும் நிலவவே செய்கின்றன.

மேலும் இத்திண்மக் கழிவுப் பொருட்களில் இருந்து மீதைய்ன் வாயு வெளிப்படும். இதனால் அடிக்கடி தீ விபத்து ஏற்படும். இது வில்பத்து சரணாலயத்திற்குக் கூட அச்சுறுத்தலாக அமையலாம் என்பதே சூழலியல் நிபுணர்களின் அபிப்பிராயமாகும்.

இவை இவ்வாறிருக்க, இலங்கையின் தனித்துவம் மிக்க மயோசின் பாறைப் பகுதிக்கு உரித்தான ஒரு பிரதேசமாக இந்த அறுவைக் காட்டுப் பகுதி காணப்படுகின்றது. இப்பிரதேசமானது கிட்டத்தட்ட 15-20 மில்லியன் பழமை வாய்ந்த யாழ்ப்பாண சுண்ணாம்புக்கல் காலத்துக்குரியது என சிலோன் ஜேர்னல் ஒப் சயன்ஸ் - 2011 (Ceylon journal of Science: 2011) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரதேசம் தொல்லியல் ரீதியாக (Archeological) முக்கியத்துவம் வாய்ந்ததாக அவுஸ்திரேலியாவின் இலுக்கா (Iluka) எனும் நிறுவனம் தெரிவித்துள்ளது. அத்தோடு இந்நிறுவனம் இங்கு பல ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு முக்கியத்தும் பெற்று விளங்கும் பிரதேசத்திலேயே இந்த திண்மக் கழிவகற்றல் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டுள்ளன. ஆனால் இத்திட்டத்தின் பாதிப்புக்கள், தாக்கங்கள் குறித்து மக்கள் தெரிவிக்கும் ஐயங்களை கருத்தில் கொள்ளாது இத்திட்டத்தை முன்னெடுப்பதில் மாத்திரம் கவனம் செலுத்துவது ஆரோக்கியமானதல்ல. அது இப்பிரதேச மனித சமூகத்திற்கு பெரும் பாதிப்பாகவே அமையும்.

ஆகவே இத்திட்டம் தொடர்பில் மக்கள் மத்தியில் நிலவும் ஐயங்களையும் கோரிக்கைகளையும் மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு அணுக வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போது தான் இத்திட்டம் எவருக்கும் பாதிப்பு இல்லாத வகையில் இருக்கும். இல்லாவிட்டால் ஒரு பகுதி மக்களுக்கு ஆரோக்கியமான சுற்றுச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இன்னொரு பகுதி மக்களின் சுற்றுச் சூழலையும் இருப்பையும் சீரழித்ததாக இத்திட்டம் அமைந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தீர்வுகளுடன் புல் வெட்டும் இயந்திரம் தரும் இல்ஹாம்

• அனஸ் அப்பாஸ்

நூருல் ஹனான் - பரீத் ஹாஜத் தம்பதிகளின் மூத்த புதல்வர் M.S.M. இல்ஹாம் றம்புக்கனை, ஹுரிமலுவையைச் சேர்ந்தவர். கே/மாவ/ தாருல் உலூம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம்-08 இல் கல்வி பயிலும் இவர் சூழலுக்கு நேயமான, மலிவான, இலகுவான புல் வெட்டும் இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார்.

13 வயதேயான இல்ஹாம் சிறுவயது முதலே ஒரு விஞ்ஞானியாக வேண்டும் என்ற கனவுடன் செயற்பட்டு வந்துள்ளார். மின் சாதன பொருளொன்றைக் கண்டால் அதன் உட்புறக் கட்டமைப்பை ஆராய்ந்து பார்க்கும் ஆர்வம் தனக்கு இயல்பிலேயே காணப்படுவதாக இவர் குறிப்பிடுகின்றார்.

பாடசாலைக்கு அருகேயுள்ள Hardware கடையில் இருந்து அகற்றப்படும் பொருட்களைச் சேகரித்து வீட்டிற்கு எடுத்துச் சென்று சிறு சிறு கண்டுபிடிப்புக்களை செய்து, அவற்றை இயக்கி, நண்பர்களிடமும், ஆசிரியர்களிடமும் காட்டி உவகை கொள்வார். ''வீட்டில் தாய் சிறு சிறு பொருட்களை அடிக்கடி கேட்பார். இதற்காக சிறு உபகரணமொன்றைச் செய்து, அதில் பொருட்களை ஏற்றி தாய்க்கு அனுப்பி வைப்பேன்'' என்று தனது புத்தாக்கத் திறன் குறித்தும் குறிப்பிடுகின்றார்.

மின்சாரத்தால் இயங்கும் அரைப்பான் (Grinder), ஒலிபெருக்கி (Speaker), ரெஜிபோம் வெட்டும் இயந்திரம் போன்ற பல உபகரணங்களை இவர் செய்தும் உள்ளார்.

பாடசாலையில் இடம்பெற்ற "Chemical Magic Show and Science Exhibition'' விஞ்ஞான கண்காட்சியில் சான்றிதழ் வென்ற இல்ஹாம், ''ஆயிரம் கண்டுபிடிப்புக்கள் - சஹஸக் நிமவும்'' எனும் புத்தாக்க கண்காட்சியின் மாகாண மட்ட போட்டித் தொடர்பில் விஞ்ஞான பாட ஆசிரியர் மூலம் அறிந்து மிகவும் மகிழ்ந்தார்.

மிக எளிமையான புல் வெட்டும் இயந்திரம் ஒன்றையும், குளிரேற்றி (Air Conditioner) ஒன்றையும் குறுகிய காலத்தில் கண்டுபிடித்து, ஆர்வத்துடன் 2018.05.03 அன்று இரத்தினபுரியில் அமைந்துள்ள College of Technology யில் நடைபெற்ற மாகாண மட்ட போட்டிகளில் கலந்து கொண்டார். இதில் இவரது புல் வெட்டும் இயந்திரம் தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவானது.



விஞ்ஞான ஆசிரியைகளின் முயற்சியால் இலங்கை புத்தாக்குனர் ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்ட கோரிக்கைக்கு அமைய புத்தாக்கம் தொடர்பாக விரிவுரை விளக்கம் ஒன்றை இளம் மருத்துவ கண்டுபிடிப்பாளர் ஸகி லத்தீப் பாடசாலையில் மேற்கொண்டமையால் தன்னுள் புது உற்சாகம் பிறந்ததாக இல்ஹாம் குறிப்பிடுகின்றார்.

தற்போது பாவனையிலுள்ள புல் வெட்டும் இயந்திரங்கள் பெற்றோலையும், டீசலையும் எரிபொருளாகக் கொண்டு இயங்குகின்றன. இதற்கு மாற்றீடாக மின்கலத்தையும் (Battery), மோட்டாரையும் கொண்டு இயங்கும் உபகரணத்தை இல்ஹாம் அறிமுகம் செய்திருக்கின்றார். எரிபொருள் பாவனை மூலமான சூழல் மாசு, பண விரயம் ஆகியன இதன் மூலம் தவிர்க்கப்படுகின்றது. மேலும், இதில் 'சூரியப் படல்' பொருத்தப்பட்டுள்ளமையால் சூரிய சக்தி மின்சக்தியாக மாற்றி பயன்படுத்தப்படுகின்றது. மின் விரயம் தவிர்க்கப்படுகின்றது. மேலும், இருளான நேரத்திலும் பயன்படுத்தும் வகையில் ஒளி இதிலிருந்து வெளியாகின்றது.

விசேடமாக, இதில் பயன்படுத்தப்பட்டுள்ள உணரி (Censor), முன்னால் உள்ள தடைகளை முற்கூட்டியே ஒலிச் சமிக்ஞை மூலம் உணர்த்துகின்றது.

இதன்மூலம், உபகரணத்துடன், பாவிப்பவரும் பாதுகாக்கப்படுகின்றார். பாரமற்றதாகவும், பாவனைக்கு இலகுவாகவும் (User Friendly), வேலை அலுப்பு ஏற்படாமலிருப்பதற்கான இசை வெளிப்பாடும் இதன் மேலதிக அனுகூலங்கள் என்றும் குறிப்பிடுகின்றார்.

மேலும், இயந்திரத்தின் விஷேட தன்மையாக LED மின்குமிழ், உணரி (Censor) தவிர ஏனையவை கழிவுப் பொருட்கள் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன. புல் வெட்டும் போது உடலுக்கு தெறிக்கும் புற்களை நீக்க விஷேட அம்சமும் இதில் காணப்படுவதுடன், புல் வெட்டும் blade இன் வேகத்தை தேவைக்கேற்ப கூட்டிக், குறைக்க முடிவதோடு, இலகுவாகவும், செலவின்றியும் மாற்றிக்கொள்ளவும் முடிகின்றது.

2018 செப்டெம்பர் 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் இடம்பெற்ற தேசிய மட்ட கண்காட்சியில் சான்றிதழ் வென்ற இவரது கண்டுபிடிப்பு, 2018.10.26 இல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் ''சஹஸக் நிமவும் - 2018'' புத்தாக்குனர் கண்காட்சியின் விருது வழங்கலுக்கு காத்திருக்கின்றது. அண்மையில் கொழும்பு ரோயல் கல்லூரியில் இடம்பெற்ற 'Spark-2018' கண்காட்சியில் பங்குபற்றி சான்றிதழ், பணப் பரிசில், நினைவுச் சின்னம் ஆகியவற்றையும் வென்றிருக்கின்றார் இல்ஹாம்.

தனக்கு முன்மாதிரியாக இருந்தவர் தனது மாமனார் என்றும், அவர் ஒரு Mechanic என்பதால் அவரைப் பார்த்து தனக்குள் ஆர்வத்தை வளர்த்ததாகவும் குறிப்பிடும் இல்ஹாம், ''பிரச்சினைகளைக் காணும்போது அவற்றை நிவர்த்திக்கும் நோக்கில் ஒவ்வொரு கண்டுபிடிப்புக்களும் பிறக்கின்றன'' என்று குறிப்பிடுகின்றார்.



இறைவனுக்கு முதல் நன்றிகளையும், தேவையான பொருட்களை உடனுக்குடன் பெற்றுத்தந்த தந்தை, தொடர் ஊக்கம் தந்த தாய், பாடசாலை அதிபர் உட்பட பாடசாலை சமூகம், குறிப்பாக ஆசிரியர்களான கன்சுல், அஸீஸா, அஹ்சன், சுக்ரி, பாஹிரா, பதூரியா, அஸீஸா ஆசிரியையின் கணவர் ஷஹ்மி, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு உறுப்பினர் ஸகி லத்தீப், மாவனெல்லை வலய புத்தாக்கத்துக்கு பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் ஜயதிலக்க, வகுப்பு நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் தனது அன்பான நன்றிகளையும் தெரிவிக்கின்றார் இல்ஹாம்.

கண்டுபிடிப்பொன்றை மேற்கொள்ள வயது ஒரு தடையல்ல. விடாமுயற்சியும், ஊக்கமும் இருந்தால் இலகுவில் சாதிக்கலாம். எதிர்காலத்தில் விவசாயத் துறைக்கு இலகுவான கண்டுபிடிப்புக்களையும், சமையலறைக்குத் தேவையான கண்டுபிடிப்புக்களையும் மேற்கொள்ள இவர் எண்ணியுள்ளார்.

வரலாற்றில் மிக மோசமான இலங்கையின் நாணயப் பெறுமதியின் அண்மைய வீழ்ச்சி குறித்து ஜனாதிபதியிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு ''வெளிநாட்டு உற்பத்தி இறக்குமதிகளை உடன் நிறுத்துவதே தீர்வாக அமையும். உள்நாட்டு உற்பத்திகளை, கண்டுபிடிப்புக்களை ஊக்குவிப்பது காலத்தின் கட்டாயம். அண்மையில் 20 கிலோமீட்டர் தூரம் பயணிக்கும் ஒரு ரொக்கட்டை இலங்கையில் கண்டுபிடித்திருக்கின்றார் ஒருவர். அவருக்கு எந்தவொரு நிறுவனமும் ஆதரவு கொடுக்கவில்லை என்பதனை அறிந்து பெருந்துயர் அடைந்தேன். யார் வராவிட்டாலும் நான் வருகின்றேன் நீ அதை ஒரு நாள் ஏவு என்று குறிப்பிட்டிருக்கின்றேன்'' என்றார்.

உள்நாட்டு கண்டுபிடிப்புக்களை/ உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டிய இக்கட்டான காலகட்டத்தில் வாழ்கின்றோம் என்ற கருத்தை ஜனாதிபதியின் இந்த கருத்துக்கள் மிகவும் வலுவாக கூறுகின்றன. இதற்கான வித்து பாடசாலைகள்தோறும் இன்றே விதைக்கப்பட வேண்டும்.

# கத்தார் பொலிசுக்கு பாராட்டு. இலங்கைத் தூதுவருக்கு குற்றச்சாட்டு

கத்தாரிலுள்ள இலங்கைப் பாடசாலையான ஸ்டபோட் தோஹா பாடசாலையின் ஆசிரியர்கள் மூவர் பொலிஸ் பாதுகாப்பில் இருந்தபோது தங்களை சிறப்பான முறையில் நடத்தியமைக்காக கத்தார் பொலிசாருக்குக் கடிதம் மூலம் நன்றி தெரிவித்துள்ளனர்.

அல்ஸஅத் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஹமத் அல் மன்சூரிக்கு அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் எங்களது சொந்த நாட்டுத் தூதுவரும் இலங்கைப் பாடசாலையும் எம்மை அவமானப்படுத்தி தொல்லை கொடுத்த போது தமக்குச் செய்த உதவிகளுக்காக அவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

இந்த மூன்று ஆசிரியைகளும் தலைமறைவாகியுள்ளதாக கத்தாருக்கான இலங்கைத் தூதுவர் ஏ.எஸ்.பி. லியனகேயின் ஆலோசனையின் பேரில் இலங்கைப் பாடசாலை நிர்வாகம் கத்தார் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்ததனால் கத்தார் பொலிசார் இவர்களைத் தடுப்புக் காவலில் வைத்திருந்தனர். அவர்களுடைய நிலைமையை விளங்கிக் கொண்ட பொலிசார் அவர்களை கூண்டில் அடைக்காமல் பொலிஸ் அலுவலகத்தை அவர்கள் தங்குவதற்காக ஒதுக்கிக் கொடுத்துள்ளனர். அத்தோடு இலங்கையர்கள் அவர்களுக்கு உணவு கொண்டு வந்து கொடுப்பதற்கும் வழியமைத்துள்ளனர்.

தற்பொழுது அவர்கள் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தவறான வார்த்தைகளால் தம்மைக் காயப்படுத்தியதாகவும் ஏனையவர்களுக்கு முன்னால் தம்மை அவமானப்படுத்தியதாகவும் பாடசாலை நிர்வாகம் தம்மை முறைகேடான முறையில் பாடசாலையில் இருந்து நீக்கியதாகவும் கூறி தூதுவர் ஏ.எஸ்.பி.லியனகேக்கு எதிராக கத்தார் தொழில் அமைச்சில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கத்தார் சட்ட முறையில் நாங்கள் பெரிதும் நம்பிக்கையும் நல்லெண்ணமும் வைத்துள்ளோம் என்பது நாங்கள் எங்கள் சமூகத்துக்கு தெரியப்படுத்துகிறோம். சாரதியில் இருந்து உயர் அதிகாரிகள் வரை அனைவரும் எங்களை மரியாதையாக நடத்தினார்கள் என்றும் அவர்கள் குறித்த நன்றிக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

## பொருளாதாரக்... (03 ஆம் பக்கத் தொடர்)

85 வீதமானவை வெளிநாடுகளில் இருந்தே தருவிக்கப்படுவதால் இங்கிருந்து வெளிச் செல்லும் செலாவணியிலும் அது பாதிப்புச் செலுத்துகிறது. அதேபோல வெளிநாட்டு வருமானங்களில் முக்கியமானதாகக் கருதப்படுகின்ற வெளிநாட்டு வேலை வாய்ப் புகள் கூட இந்த வருடமாகும் போது குறைவடைந்துள்ளன. 2018 ஜூலை தரவுகளின்படி அது 1.6 வீதத்தால் குறைவடைந்துள்ளது. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் அதிகமானவை மத்திய கிழக்கு நாடுகளிலேயே அமைந்திருக்கின்றன. நாட்டில் தலையெடுத்திருக்கின்ற இனவாதச் சக்திகளின் பிரச்சாரம் இந்த விடயத்தில் பெரிதும் தாக்கம் செலுத்தியிருக்க முடியும். அரசாங்கம் இதனைக் கண்டும் காணாமல் இருந்தது.

இந்த வகையில் தற்போதைய ரூபா மதிப்பிறக்கத்துக்கு உடனடிக் காரணங்கள் எதனையும் சொல்வதை விட சுதந்திரத்துக்குப் பின் எந்தத் தலைவர்களிடமும் பொருளாதாரத்துக்கானதொரு கொள்கை இல்லாமல் இருந்ததன் நீட்சியாகவே இதனை நோக்க வேண்டியுள்ளது. நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான பொருளாதாரக் கொள்கையொன்று இன்றி நாட்டின் தலைவராக வருபவரின் அரசியல் கொள்கைக்கு ஏற்ற வகையிலேயே நாட்டின் பொருளாதாரம் முன்கொண்டு செல்லப்பட்டது. நாட்டின் பொருளாதாரக் கொள்கையைத் தீர்மானிப்பதற்காக பிரதமரின் தலைமையில் சிலரை வைத்து உருவாக்கப்பட்ட பொருளாதார சபை இதற்கு நல்ல உதாரணம். இந்தச் சபை பின்னர் கலைக்கப்பட்டு ஜனாதிபதி தலைமையில் தேசிய பொருளாதார சபை அமைக்கப்பட்டது. இதில் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்வாங்கப்பட்டிருந்தார்கள். ஒரு வருட காலத்தில் இந்தச் சபை என்ன செய்தது என்பது இன்று வரை யாருக்கும் தெரியாது. இந்த நிலைமையில் தான் இலங்கையின் பொருளாதாரக் கொள்கை வகுப்பு இருக்கிறது.

நாட்டுக்கு வெளியில் இருந்து முதலீடுகள் வருவதற்கு நாட்டிலே உறுதியான பொருளாதார நிலைமைகள் அத்தியாவசியமானது. நாட்டில் உறுதியான பொருளாதாரம் இருப்பதற்கு ஸ்திரமான அரசியல் நிலைப்பாடு தேவைப்படுகிறது. நாட்டில் இந்த நிலைமை தற்போது இல்லை என்பதனை இந்த ரூபா மதிப்பிறக்கம் சுட்டிக் காட்டினாலும் அதனை மறைப்பதற்கு அரசாங்கம் கடும் பிரயத்தனங்களை மேற்கொள்கிறது. பிரமதர் சிங்கப்பூருடனான ஒப்பந்தமொன்றைச் செய்கின்ற பொழுது அது தொடர்பில் ஆராய்வதற்கானதொரு கமிஷன் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறது. நாட்டுக்குள் வருகின்ற முதலீடுகள் தொடர்பிலும் நல்லாட்சியின் இருதரப்புக்கும் இடையில் உடன்பாடு இல்லை. இந்த நிலைமையில் நாட்டுக்குள் அந்நியச் செலாவணியைக் கொண்டு வரக் கூடிய முதலீடுகளை எதிர்பார்க்க முடியாது.

பொருளாதாரம் இக்கட்டான நிலையில் இருக்கும் நிலையிலும் அரச செலவினங்கள் அதிகரித்துச் செல்வது நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அரசுக்கிருக்கும் அக்கறையைக் காட்டுகிறது. நாட்டின் ஒவ்வொரு தலைவரும் அடுத்தவருக்குச் சளைத்தவரல்ல என்ற பாணியில் தமது செலவுகளை ஆடம்பரமாக்கி வருகின்றனர். அண்மையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி விஜயம் செய்தபோது அவருடன் 63 பேர் பயணித்ததாக ஊடகங்கள் வெளியிட்ட தகவல் இதற்குத் தக்க சான்று.

இந்தக் குழுவில் நான்கு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர், பௌத்த பிக்குகள் இருவர் எனப் பலர் அடங்குகின்றனர். நாட்டில் அந்நியச் செலாவணி பற்றாக்குறையாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் நாட்டின் அந்நியச் செலாவணியை தண்ணீராகச் செலவழிக்கும் பணியை ஜனாதிபதிகளே முன்னெடுப்பதாக இருந்தால் நாட்டின் நாணயம் மதிப்பிழப்பதை தவிர்க்க முடியுமா? [illegible] நிலைமை தான் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அனைவரிலும் காணப்படுகிறது. இந்த அரசியல் வாதிகளின் சொகுசுகளுக்காக வாரி இறைக்கப்படும் வெளிநாட்டுச் செலாவணிகள் கணக்கிலடங்காதவை.

அதேபோல தற்பொழுது நாட்டிலே நாட்டின் சனத்தொகையை விட அல்லது பத்தூரிகையை விட அதிகமாக கையடக்கத் தொலைபேசிகள் இருக்கின்றன. இவை எதுவுமே உள்நாட்டு உற்பத்தி அல்ல. இவற்றுக்காக பல கோடிக்கணக்கில் வெளிநாட்டுச் செலாவணி நாட்டை விட்டுச் செல்கிறது. தற்பொழுது ஆசியாவின் போதைப் பொருள் மையமாக இலங்கை மாறி வரும் சூழலில் இறக்குமதி செய்யப்படுகின்ற போதைப் பொருள் அனைத்துக்குமே நாட்டிலுள்ள அந்நியச் செலாவணியே பயன்படுத்தப்படுகிறது. அண்மைக்காலமாக அரச தனியார் நிறுவனங்களின் வெளிநாட்டுப் பயணங்களும் அதிகரித்திருக்கின்றன. தனியார் நிறுவனங்கள் தமது நிறுவனத்தின் விளம்பரத்துக்காக வெளிநாட்டுப் பயணங்களை தொகையானவர்களைக் கொண்டு ஏற்பாடு செய்கிறார்கள். புனிதப் பயணங்கள் கூட ஒன்றுக்குப் பலதடவைகள் மேற்கொள்கின்ற நிலை மக்களிடத்திலே காணப்படுகிறது. இவைகள் எல்லாம், பற்றாக் குறையாக இருக்கின்ற வெளிநாட்டுச் செலாவணியை நாட்டை விட்டு வெளியேற்றுகின்ற நடவடிக்கைகளாக இருந்தாலும் இவை தொடர்பில் முறையான கொள்கைகள் ஏதும் அரசாங்கத்திடம் இல்லை.

இறுதியாக, இலங்கையின் நாணயம் மதிப்பிழக்காமல் இருக்க வேண்டுமானால் இலங்கையிடம் போதுமான அந்நியச் செலாவணி கையிருப்பில் இருக்க வேண்டும். அந்நியச் செலாவணி கையிருப்புக்காக ஏற்றுமதி அதிகரிக்க வேண்டும், இறக்குமதிச் செலவுகள் குறைய வேண்டும், வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்க வேண்டும். இவை எதற்குமான எந்தக் கொள்கைகளும் சுதந்திரமாக இயங்குவதற்கு விடப்பட்ட எழுபது ஆண்டுகளிலும் இந்த நாட்டினால் வகுத்துக் கொள்ளப்படவில்லை. அதைவிட ஆச்சரியமான விடயம் என்னவெனில் பொருளாதாரக் கொள்கை வகுப்பதற்கான பொருளியல் வல்லுனர்கள் இந்த நாட்டில் உருவாக்கப்படவில்லை. நிதிசார் நிபுணர்களே இது வரை இந்த இடத்தை நிரப்பி வருகிறார்கள்.

இலங்கை: ஆசியா இழந்து விட்ட ஆச்சரியம் என்ற நூலை எழுதிய பேராசிரியர் மில்டன் ராஜரத்ன நாட்டில் பொருளாதார வல்லுனர்கள் இல்லாத குறையை அறிந்து தனது மகளிடம் பொருளியல் துறையில் உயர்கல்வியைத் தொடருமாறு கேட்டதற்கு, பிரயோசனமில்லை, பொருளியல் வல்லுனர்களின் பேச்சையெல்லாம் இங்கே யார் கேட்கிறார்கள் என்று அவர் பதிலளித்தாராம். நாட்டின் நிலைமை இப்படித் தான் இருக்கிறது. அரசியல் தலைவர்கள் விடுகின்ற தவறுகளையெல்லாம் மறைப்பதற்கு மக்கள் காட்டும் ஆர்வம் குன்றாதவரை நாடு இனிமேலும் இப்படித் தான் இருக்கப் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை இதழ் - 405

வை.எல்.எஸ். ஹமீட்

# உரிமை அரசியலும் அபிவிருத்தி அரசியலும்

## ஒன்றா, வேறு வேறா?

நாம் அடிக்கடி நம் அரசியலில் கேட்கும் வார்த்தைகள், 'எங்களுக்கு அபிவிருத்தி முக்கியம் இல்லை; உரிமையே முக்கியம்', 'உரிமையில்லாத அபிவிருத்தியால் பயன் இல்லை', 'அபிவிருத்திக்காகச் சோரம் போக முடியாது', 'இரண்டும் தேவை', 'அபிவிருத்தி தேவைதான் அதற்காக உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது'. போன்றவையாகும்.

அவ்வாறு உரிமை வேறு, அபிவிருத்தி வேறு என்றால், உரிமை என்றால் என்ன? அதிகமானவர்களிடத்தில் பதில் இல்லை. எங்களுக்கு அபிவிருத்திகளை விட உரிமைதான் முக்கியம் என்று மேடைகளில் பேசுகின்ற அரசியல்வாதிகளும் இதுவரை உரிமையென்றால் என்னவென்று கூறவில்லை. அவர்களுக்கும் தெரியுமோ தெரியாது.

ஒரு பாடசாலையில் வகுப்பறைக் கட்டடம் இல்லாமல், தளபாடங்கள் இல்லாமல் மரத்தின் கீழ் நிலத்தில் அமர்ந்து படிக்கிறார்கள். அவர்கள் பாடசாலைக் கட்டிடம் பெறுவது உரிமையா அல்லது உரிமையிலிருந்து வேறுபட்ட அபிவிருத்தியா?

ஒரு ஊரில் குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள். அவர்கள் தண்ணீர் வசதி பெறுவது உரிமையா? உரிமையோடு தொடர்பில்லாத அபிவிருத்தியா? அவை உரிமை இல்லையென்றால் உரிமை என்றால் என்ன?

மறைந்த தலைவர் அபிவிருத்தி செய்ய மாட்டோம். ரோட்டுப் போட மாட்டோம், பாலம் கட்ட மாட்டோம், வீடு தரமாட்டோம், உணவு முத்திரை தரமாட்டோம், உத்தியோகம் தரமாட்டோம் என்று மேடைகளில் முழங்கினார். நாங்களும் அவருடன் சேர்ந்து பல மேடைகளில் அதனைப் பேசியிருக்கின்றோம். ஆனால் ஒரு மேடையிலாவது அபிவிருத்தி உரிமையல்ல; அல்லது அபிவிருத்தி வேறு, உரிமை வேறு அல்லது உரிமையைப் பெற்ற பின்புதான் அபிவிருத்தி செய்வோம் என்று கூறவில்லை.

அவர் இன்னும் சொன்னார், அதாவது ''எதுவும் செய்யமாட்டோம்'' என்றும் சொன்னார். 'எதுவும் செய்யமாட்டோம்' என்றால் எதற்காக அரசியல் கட்சி? ஆனாலும் சொன்னார். மக்களும் வாக்களித்தனர்.

சரி, எதுவும் செய்யமாட்டோம், என்றவர் எதுவும் செய்யாமல் இருந்தாரா? அபிவிருத்தி செய்ய மாட்டோம், என்றவர் அபிவிருத்தி செய்யாமல் இருந்தாரா? உத்தியோகம் தரமாட்டோம் என்றவர் உத்தியோகம் தராமல் இருந்தாரா? இல்லை. அவ்வாறாக இருந்தால் அவர் அவ்வாறு சொன்னதற்கு வேறு பொருள் இருந்திருக்க வேண்டும்.

அபிவிருத்தி வேறு, உரிமை வேறு என்றால் அவர் உரிமைகளையெல்லாம் பெற்றுத் தந்த பின்னா அபிவிருத்தி செய்ய ஆரம்பித்தார்? அவ்வாறு உரிமைகள் பெற்றுத் தந்ததன் பின்தான் அபிவிருத்தி செய்தார் என்றால் அவ்வாறு உரிமைகள் பெற்றாகியதன் பின் இன்னும் என்ன உரிமை பெறுவதைப் பற்றி இவர்கள் பேசுகின்றார்கள். எந்த உரிமையைப் பெறுவதற்காக அபிவிருத்தியைக் கடந்த 18 வருடமாக பின்தள்ளுகிறார்கள்?

எனவே, அபிவிருத்தி என்றால் என்ன? உரிமை என்றால் என்ன? என்பதில் நமக்குள் குழப்பமிருப்பது புரிகிறதல்லவா? இதுதான் இந்த அரசியல்வாதிகளின் பலம்.

மறைந்த தலைவர் ''எதுவும் செய்ய மாட்டோம்'' என்று சொன்னார். மக்கள் வாக்களித்தனர். எனவே, இந்த மக்களுக்கு எதுவும் செய்யத் தேவையில்லை. கரங்கா காணியை மீட்கத் தேவையில்லை, கல்முனை புதிய நகரம் கட்டத் தேவையில்லை, ஒலுவில் பிரச்சினையைத் தீர்க்கத் தேவையில்லை, ... எதுவும் செய்யத் தேவையில்லை; என்று நினைத்துக் கொண்டார்கள்.

ஒன்றும் செய்யாவிட்டால்தான் இந்த மக்கள் வாக்களிப்பார்கள் என்று எண்ணி விட்டார்கள். மக்களும் ஆம் நாங்கள் அவ்வாறுதான். எங்களுக்கு ஒன்றும் செய்யத் தேவையில்லை. நாங்கள் வாக்களிப்போம் என்று நிரூபிக்கின்றார்கள்.

பின்னால் வந்த 'சப்த வெடிலும்', 'நீங்களும் ஒன்றும் செய்யாமல்தானே வாக்குப் பெறுகிறீர்கள்; நீங்கள் அபிவிருத்தி செய்யக்கூடிய அமைச்சை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்யாமலிருக்கிறீர்கள், நான் 'யாவாரம்' தெரிந்தவன், எனவே அபிவிருத்தியே செய்ய முடியாத அமைச்சை எடுத்து யாவாரம் செய்கிறேன்.

அப்பப்ப வந்து சத்தம் போடுவேன். என்னைக் 'குட்டி அஷ்ரப்' என்று எழுதுவதற்குக் கூலியாட்கள் வைத்திருக்கிறேன்; ஏமாந்த மக்கள் உங்களுக்கு போட்டு மிகுதியை எனக்குப் போடுவார்கள்' என்று ஒரு அரசியல் யாவாரம் நடக்கிறது.

### உரிமை என்றால் என்ன?

உரிமை என்பது மிகவும் ஆழமான சொல். அது தொடர்பாக எத்தனையோ சர்வதேச உடன்படிக்கைகள் வந்துவிட்டன. சுருக்கமாக, உரிமை என்பது, "moral or legal entitlement to do or have some thing' அதாவது, ஒன்றைச் செய்வதற்கு அல்லது பெறுவதற்கு சமூகப் பெறுமானங்களின் அடிப்படையில் அல்லது சட்ட ரீதியாக உங்களுக்கு இருக்கின்ற உரித்துத்தான் 'உரிமை'யாகும்.

உரிமை பலவகைப்படும். சிவில், அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் என பல வகைகள் இருக்கின்றன. அவற்றுள் மேலும் பிரிவுகள் இருக்கின்றன. உயிர் வாழும் உரிமை, மதத்தை பின்பற்றும் உரிமை, கல்வி பெறுவதற்கான உரிமை... இவ்வாறு நீண்ட பட்டியல் இருக்கின்றன.

உதாரணமாக, உயிர் வாழ்வதற்கான உரிமை எனும்போது வெறுமனே உயிர் வாழுதல் என்பது பொருளல்ல. அதற்கு மேலதிகமாக கௌரவமாக வாழுதல் என்ற பொருளையும் அது உள்ளடக்குகின்றது. கௌரவமாக வாழுதல் என்பதை மேலும் வியாக்கியானப்படுத்தும்போது கல்வி, சுகாதாரம், வாழ்விடம், தொழில் போன்ற உரிமைகள் அதற்குள் உள்வாங்கப்படுகின்றன. சில அறிஞர்களுக்கு மத்தியில் இவற்றில் சில கருத்து வேறுபாடுகளும் இருக்கின்றன. இதனைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம்.

இவ்வாறான உரிமைகளுள் சில முன்னுரிமைக்குரியவைகளாக கொள்ளப்படுகின்றன. சிலர் அவ்வாறு வகைப்படுத்த முடியாது என்றும் வாதிடுகின்றனர். ஆனாலும் நடைமுறையில் அவ்வாறுதான் உள்ளன. அவற்றிற்கு கோட்பாட்டு ரீதியான காரணம் என்பதைவிட நடைமுறை ரீதியான காரணங்கள் இருக்கின்றன.

அதேநேரம் சில உரிமைகள் கட்டுப்படுத்த முடியாத முழுமையான உரிமைகள். சில கட்டுப்படுத்தக்கூடிய உரிமைகள். உதாரணமாக 'சித்திரவதைக்கெதிரான உரிமை முழுமையானது. அரசோ, யாரோ, யாரையும் எந்தக் காரணம் கொண்டும் சித்திரவதை செய்யமுடியாது. ஆனால் உயிர் வாழும் உரிமை முழுமையல்ல. கட்டுப்படுத்தக் கூடியது. மதத்தைப் பின்பற்றுவது முழுமையான கட்டுப்படுத்த முடியாத உரிமை. மதத்தை பிரச்சாரம் செய்வது கட்டுப்படுத்தக் கூடிய உரிமை. பேச்சுச் சுதந்திரம் கட்டுப்படுத்தக்கூடிய உரிமை.

இந்தப் பின்னணியில் நமது அரசியல் பார்வைக்கு வருவோம்.

இப்பொழுது சிந்தியுங்கள்! கல்விக்காக பாடசாலைக் கட்டிடம் கட்டுவது நமது உரிமையா? இல்லையா? சுகாதாரத்திற்காக வைத்தியசாலை வசதிகளைப் பெறுவது நமது உரிமையா? இல்லையா? குடிப்பதற்காக, குளிப்பதற்காக தண்ணீர் வசதி பெறுவது நமது உரிமையா? இல்லையா? பிரயாணம் செய்வதற்காக பாதை வசதிகளைப் பெறுவது நமது உரிமையா? இல்லையா?

சில உரிமைகள் கண்ணால் காணக் கூடிய அபிவிருத்தி வடிவத்தில் இருக்கின்றன. சில கண்ணால் காணமுடி[illegible] வால் உணரக்கூடிய வடிவத்தில் இருக்கின்றன. உதாரணம் பாதுகாப்பு.

மறைந்த தலைவர் ஏன் எதுவும் செய்ய மாட்டேன் என்று சொன்னார்? அன்று எங்களுடைய பாதுகாப்பு கேள்விக்குறியாக இருந்தது. உயிர்களுக்கு உத்தரவாதமிருக்கவில்லை. வட கிழக்கு இணைக்கப்பட்டு அரசியல் அடிமையாக்கப்பட்டிருந்தோம். பாராளுமன்றத்தில்கூட குரல் கொடுக்க முடியாமல் நம் வாய்களுக்குப் பூட்டுப் போடப்பட்டிருந்தது.

அந்த சூழ்நிலையில் தலைவர் கண்ணுக்குத் தெரியக் கூடிய அபிவிருத்தியுடன் தொடர்புடைய உரிமைகளுக்கு மக்கள் முன்னால் முக்கியத்துவத்தைக் குறைத்து





கண்ணால் காண முடியாத மேற்சொன்ன பாதுகாப்பு, பேச்சுச் சுதந்திரம், இணைந்த வட கிழக்கில் நாம் மாட்டியிருந்த அடிமைத்தளையில் இருந்து நம்மை மீட்டல், அதிகாரப் பகிர்வில் நமது அக்கறைகள் உள்வாங்கப்படுதல் போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கினார்.

அன்றைய காலகட்டத்தில் அரசியல் மேடைகளில் இந்தளவு உரிமை தொடர்பான விளக்கத்தைக் கொடுத்திருந்தால் மக்கள் புரிந்திருப்பார்களா? மறுபுறத்தில் ஆளும் கட்சியான ஐ.தே.கட்சிக்காரர்கள் அபிவிருத்தியோடு தொடர்புபட்ட உரிமைகளைப் பேசிக் கொண்டிருந்தார்கள்; உரிமை என்ற சொல்லைப் பாவிக்காத போதிலும்கூட.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். எல்லா உரிமைகளையும் அனுபவிப்பதற்கு நாம் முதலில் உயிர்வாழ வேண்டும். வயலுக்கு சென்ற கணவன் திரும்பி வருவானா என்று தெரியாமல் நாள்பூராகவும் பதைபதைப்புடன் மனைவி, வியாபாரத்திற்கு சென்ற மகன் திரும்பி வருவானா என்று தெரியாமல் முந்தானையை ஏந்தி துஆவுடன் தாய்; வெளியே சென்ற சகோதரன் திரும்பிவருவானா? என்று தெரியாமல் நிம்மதி இழந்த சகோதரி; என்று அன்றைய சூழ்நிலை ஒரு பயங்கரமாகும்.

அந்த மக்களிடம் அவ்வாறு பேசாமல் வேறு எவ்வாறு பேசுவது? உலகத்திலே எதுவும் செய்யமாட்டோம்; என்று பகிரங்கமாக பேசி வாக்குப் பெற்ற கட்சிகள் ஏதாவதுண்டா? அல்லது அவ்வாறு பேசிய [illegible] ளுடைய முஸ்லிம் காங்கிரஸ் பேசியது. மக்களும் ஒன்றும் செய்யமாட்டோம்; என்று சொன்ன கட்சிக்கு வாக்களித்தார்கள்.

தலைவர் இன்னும் ஒன்றும் சொன்னார். ''நாம் எதுவும் செய்யமாட்டோம்; முஸ்லிம் சமூகமே நீ ஒற்றுமைப்படு; அனைத்தும் உன் காலடிகளுக்குத் தேடிவரும்; என்றார்.

இதன் பொருளென்ன? மக்கள் ஒற்றுமைப்பட்டு வாக்களித்தார்கள் என்பதற்காக ஒன்றும் செய்யாமல் இருந்தால் எல்லாம் தேடிவருமா? ஒரு துரும்பும் வராது. நானே இந்த வசனத்தை எத்தனையோ மேடைகளில் பேசியிருக்கின்றேன். ஆனால் எல்லாம் வந்தது. சுயமாக வரவில்லை. தலைவர் எல்லாம் செய்தார். கொண்டு வந்தார்.

வெட்டுப்புள்ளித் திட்டத்தை மாற்றினார். புலிகள் முஸ்லிம்களுக்குச் செய்த அட்டகாசத்தை உலகிற்கு சொன்னார். முஸ்லிம்களும் தமிழர்களே! வணக்கஸ்தலம் மாத்திரம்தான் வேறு; என்று இந்தியாவே சொன்னபோது இல்லையென மறுத்து முஸ்லிம்கள் தனித்துவ சமூகமென நிறுவினார்.

பல்கலைக்கழகம் கொண்டு வந்தார். துறைமுகம் கொண்டுவந்தார். (அவர் மரணித்தபின் கட்டியவர்கள் விட்டதவறினால் இன்று பாதிக்கப்பட்டுள்ளோம்; என்பது வேறு விடயம்). கல்விக் கல்லூரி கொண்டுவந்தார். அஷ்ரப் வைத்தியசாலை நிறுவினார். (பெயர் பிந்தியது) பாடசாலைக் கட்டிடங்கள் கட்டினார்.... பட்டியல் நீளும்.

இவையெல்லாம் தாமாக வரவில்லை. அவர் கொண்டுவந்தார். இங்கு நம் சிந்தனைக்கு எடுக்க வேண்டியது, எதுவும் செய்யமாட்டேன் என்றவர் எல்லாம் செய்தார்; ஒற்றுமைப்பட்டால் தானாகவரும் என்றார்; எதுவும் தானாக வரவில்லை. அனைத்தும் அவர் கொண்டுவந்தார்.

எனவே, இந்த வசனங்களை அன்றைய சூழலில் மக்களை ஒற்றுமைப்படுத்த பாவித்தாரேயொழிய அவ்வாறு செயற்படவில்லை. அபிவிருத்தி செய்யமாட்டேன் என்றுதான் சொன்னாரேதவிர அபிவிருத்தி உரிமையில்லை; என்று சொல்லவில்லை. சட்டம் தெரிந்தவர் அவ்வாறு சொல்லவும் முடியாது.

இதைப் புரிந்துகொள்ளாமல் அபிவிருத்தி வேறு, உரிமை வேறு, அது முதல், இது பின்னர் என்றெல்லாம் குழம்பிக் கொண்டிருக்கின்றோம். 18 வருடங்கள் வீணாக்கப்பட்டிருக்கின்றன.

எவ்வளவுதான் ஒற்றுமைப்பட்டாலும் செய்யத் தெரியாதவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஒற்றுமைப்பட்டதற்காக தாமாக வராது. அன்று தலைவர் அந்த ஒற்றுமைப் பலத்தை சந்திரிக்காவுக்கு முட்டுக்கொடுத்துத்தான் ஆயிரக்கணக்கானவர்களுக்கு துறைமுகத்தில் வேலை கொடுத்தார்.

இன்று பல கட்சிகள் இருந்தபோதும் அதிகப்பெரும்பான்மையான வாக்குகளை அந்தக் கட்சிக்குத்தானே வழங்குகிறீர்கள். இந்த அரசாங்கத்தில் அந்தக் கட்சியின் பலம் என்பது அன்று சந்திரிக்காவுக்கு நாம் முட்டுக்கொடுத்தபோது இருந்த பலத்தை விட யதார்த்தத்தில் அதிகமாகும். சாதித்ததென்ன?

### சாதித்திருக்கின்றோமா? இழந்திருக்கின்றோமா?

புதியமுறையில் மாகாண சபைத் தேர்தல் நடந்தால் பிரதிநிதித்துவத்துவத்தை இழக்கப் போகின்றோம் நாம் கையுயர்த்தியதால்.

சம்மாந்துறையில் கரங்காவை இழந்திருக்கின்றோம்!

பொத்துவிலிலும் பல கரங்காக்களை இழந்திருக்கின்றோம்!

ஒலுவிலில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்திருக்கின்றோம்!

கல்முனையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தை இழந்திருக்கின்றோம்! ......

இவ்வாறு நீண்டதொரு பட்டியல்.

கண்ணுக்குத் தெரியாத உணரக்கூடிய உரிமை எதைப் பெற்றோம். கண்ணுக்குத் தெரியக்கூடிய அபிவிருத்தி உரிமை எதைப் பெற்றோம்.

எனவே, செய்யத் தெரியாதவர்களுக்குப் பின்னால் சமூகம் ஒற்றுமைப்பட்டும் பிரயோசனம் இல்லை. ஒற்றுமைப்படாவிட்டாலும் பிரயோசனம் இல்லை.

இப்பொழுது 'நானும் இருக்கிறன் சின்னக்குட்டி' தலைவருக்குப் பின் அவர்தான் அஷ்ரபாம். அவரும் இல்லாவிட்டால் முஸ்லிம் சமூகத்தின் நிலை அதோகதியாம்.

என்ன சாதித்தார் என்றுதான் சொல்லுகிறார்கள் இல்லை.

முசலியில் மஹிந்த ஆட்சியில் பறிகொடுத்த பன்னிரண்டாயிரம் ஏக்கர் காணியை மீட்டதனால் குட்டி அஷ்ரப் ஆனாரா? அல்லது

நல்லாட்சியில் பறிகொடுத்த ஒரு லட்சம் ஏக்கரை மீட்டதனால் குட்டி அஷ்ரப் ஆனாரா? அல்லது

இடம்பெயர்ந்த மக்களையெல்லாம் மீள்குடியேற்றிவிட்டதனால் குட்டி அஷ்ரப் ஆனாரா? அல்லது

முசலிக்கென்று இருக்கின்ற சிலாவத்துறை வைத்தியசாலையையாவது உருப்படியாக அபிவிருத்தி செய்ததனால் குட்டி அஷ்ரப் ஆனாரா? அல்லது

கிழக்கு மாகாணத்தைக் குடிசை (குடில்) இல்லாத மாகாணமாக்குவேன்; என்றார். அவ்வாறு ஆக்கியதனால் குட்டி அஷ்ரப் ஆனாரா? அல்லது

கிழக்கிலங்கையில் பறிகொடுத்த காணிகளை மு.கா. மீட்கவில்லை; நான் மீட்டுத் தருவேன்; என்றார். அவ்வாறு மீட்டுத் தந்தனால் குட்டி அஷ்ரப் ஆனாரா? அல்லது

மாகாண சபை சட்டத்திற்கு கையுயர்த்தியதற்காக குட்டி அஷ்ரப் ஆனாரா? அல்லது

கணக்காய்வாளர் நாயகம் அறிவித்தாரே! அதற்காக குட்டி அஷ்ரப் ஆனாரா?

எதற்காக என்று சொல்லிவிட்டு குட்டி அஷ்ரப் என்றால் பரவாயில்லை.

எனவே, சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். பல விடயங்களில் இவர்களுக்கிடையில் ஒற்றுமை இருக்கின்றது. ஆனால் யார் சமூகத்தை அதிகம் ஏமாற்றுவது என்பதில் மட்டும் போட்டி இருக்கின்றது.

போராளிகள் இதனைப் புரியாமல் அடித்துக் கொள்கிறீர்கள். எதையும் செய்யாமல் இருப்பதை மறைப்பதற்காக பாவிக்கும் உத்திகள்தான் உரிமை வேறு அபிவிருத்தி வேறு என்று வேறு பிரிப்பதும் உங்களைக் குழப்புவதும்.

யாராவது உங்களிடம் உரிமை வேறு, அபிவிருத்தி வேறு என்று கூறினால் உரிமை என்றால் என்ன? என்று கேளுங்கள். உரிமை பத்துக் கிலோ ஒவ்வொரு ஊருக்கும் தரச்சொல்லுங்கள்.

உரிமை என்றொரு சாமானே உலகில் கிடையாது. அது சடப்பொருள் அல்ல. ஒன்றைச் செய்வது அல்லது பெறுவது நமது உரிமை. அது உணரக்கூடியதாக இருக்கலாம். கண்ணுக்குத் தெரியக்கூடியதாக இருக்கலாம்.

அபிவிருத்தி கண்ணுக்குத் தெரியக் கூடியது.

எனவே, அபிவிருத்தியும் உரிமையே!!!

உரிமை, அபிவிருத்தி என்பது இரண்டு அல்ல. ஒன்றே!

வாகனமும் காரும் இரண்டல்ல. ஒன்றே.

வாகானத்தில் ஒரு வகை கார். இன்னொரு வகை லொறி. இன்னொரு வகை பஸ். ஆனால் எல்லாம் வாகனமே!

அதேபோன்றுதான் உரிமையில் அபிவிருத்தியும் அடங்கும். பாதுகாப்பும் அடங்கும். எல்லாம் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இடைவிலகலின் விளைவுகள்



பாடசாலை முறைசார் கல்வியைப் பூரணப்படுத்தாது இடைநடுவில் விலகிச் செல்லல் என்பது பல்வேறு வகையான விளைவுகளை உருவாக்குகின்றது. இடைவிலகலைத் தூண்டும் காரணிகள் வேறுபட்டவை என்பது போல் இடைவிலகலின் விளைவுகளும் வேறுபட்டவை. அவை எப்போதும் எல்லா இடங்களிலும் ஒருபடித்தானவையாக இல்லை என்பதையும் ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

பாடசாலை இடைவிலகலின் விளைவுகள் தனிமனிதன், குடும்பம், சமூகம், தேசம் என்ற வகையில் பரந்துபட்டதாக உள்ளன. இவ்வுண்மையைக் கருத்திற்கொண்டே அனைவருக்கும் கல்வி எனும் சர்வதேசக் கோட்பாட்டை யுனிசெப் முன்வைத்துச் செயற்படுகின்றது. ஒரு நாட்டின் கல்வி அறிவீனம், எழுத்தறிவின்மை என்பன குறிப்பிட்ட தேச எல்லைகளைத் தாண்டி சர்வதேச ரீதியிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக அபிவிருத்திக் கோட்பாட்டாளர்கள் (Development Theorists) மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் (Policy Makers) எச்சரிக்கின்றனர். ஏனெனில் பாடசாலை இடைவிலகல் என்பது வறுமை, தொழிலின்மை, சமூகப் பாகுபாடு, சிறுவர் துஷப்பிரயோகம், போதைப்பொருள் பாவனை என்பவற்றுடன் தொடர்புறுகின்றது. (Peak- Mills 1987)

அண்மைக் காலங்களில் உலகளவில் பல்வேறு நாடுகளிலும் குற்றச் செயல்களில் (Criminal Activities) ஈடுபடுவோர், போதைப்பொருள் கடத்தல்காரர்கள், ஆயுதக் குழுக்கள், வன்முறைக் கும்பல்கள், சிறைக்கைதிகள், கடும் வறுமைப்பட்டோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அனைத்தும் ஒரு பொது உண்மையை வெளிப்படுத்தியுள்ளன. கல்வி அறிவீனம் இத்தகையோரின் உருவாக்கத்திற்குப் பிரதான காரணமாக உள்ளது என்பதை இந்த ஆய்வுகள் நிரூபித்துள்ளன. அவற்றின் படி பாடசாலை இடைவிலகலே கல்வி அறிவீனத்திற்கும் எழுத்தறிவின்மைக்குமான மூல காரணமாகும்.

இடைவிலகல் பாரிய பொருளாதார, சமூக சவால்களை உருவாக்குகின்றது. வேலையற்ற இளைஞர்கள் தொகையைப் பெருக்குகின்றது. அது சமூகக் கொந்தளிப்பையும் இளைஞர்களுக்கு மத்தியிலான விரக்தியையும் தோற்றுவித்து இறுதியில் ஒரு நாட்டின் அரசியல், சமூக ஸ்திரமின்மைக்கு இட்டுச்செல்கின்றது. (யுனிசெப் 2006)

அமெரிக்காவில் நடந்த ஓர் ஆய்வில் அந்நாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபடும் பெரும்பாலான இளைஞர்கள் குறிப்பாக போதைப் பொருள் கடத்தல், பாவனை, வணிகம் என்பவற்றிலும் வன்முறைகளிலும் சட்ட விரோதக் கொலைகளிலும் ஈடுபடுவோரில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் பாடசாலைக் கல்வியைப் பூரணப்படுத்தாது இடைவிலகியோர் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இத்தகையோர் சிலவேளை நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களிலும் (Organized Crimes) ஈடுபடுகின்றனர்.

குறைந்த வருமானம் தரும் தற்காலிகத் தொழில்கள் (Odd Jobs) பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை மனவிரக்திக்கு உட்படுத்தியுள்ளது. இது நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரம், சமூகக் கட்டமைப்பு என்பவற்றில் எதிர்மறையான தாக்கத்தை உருவாக்கியுள்ளது. (California Drop out Research Project 2012 )

அமெரிக்காவில் ஒரு பாடசாலை மாணவனுக்குரிய நலப்பணிகள் மீதான செலவீனங்களை விட 03 மடங்கு அதிகமான செலவீனம் ஒரு சிறைச்சாலைக் கைதியைப் பராமரிக்கத் தேவைப்படுகின்றது. ஆக கல்வி மீதான அரச செலவீனத்தை விட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் சிறைக் கைதிகளுக்குப் புனர்வாழ்வளிப்பதற்குமான செலவு பன்மடங்கு அதிகம் என்பதை அந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இது ஒரு நாட்டின் பொருளாதாரத்தை எதிர்மறையாகப் பாதிக்கின்றது. இதேவேளை அந்நாட்டின் மனநல மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளைக் கவனிக்கவும் சிகிச்சையளிப்பதற்குமான செலவீனம் கல்வி மீதான செலவீனத்தை விட பல மடங்கு அதிகமாகும். பாடசாலை இடைவிலகலே இரண்டுக்குமான அடிப்படைக் காரணம் என்ற உண்மையை அங்கு கல்வி, உளவியல் ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வினூடே நிறுவியுள்ளனர். (OERI 1987)

சமூக அபிவிருத்திக்கான செலவீனங்கள் உயர்வதோடு திறனற்ற தொழிற்படை (Unskilled Labour Force), கூலித் தொழிலாளர் பெருக்கம், குறைந்த உற்பத்தித் திறன், வரியிழப்பு, பொதுத் துறைச் செலவு அதிகரிப்பு, குற்றச் செயல்களின் பெருக்கம் என்பனவும் இடைவிலகலின் எதிர்மறையான சமூக விளைவுகளாகும். (General Accounting office USA. 1986).

இலங்கையைப் பொறுத்தவரை பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களில் 19.1 சதவீதமான மாணவர்கள் சிறுவர் தொழிலாளர்களாக (Child Labour) உள்ளனர் என சிறுவர் செயற்பாட்டு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது. இவர்களில் 20.8 சதவீதமானோர் 12 - 14 வயதுக்குட்பட்டவர்கள். அதேவேளை 1.1 சதவீதமானோர் 5 - 14 வயதுக்குட்பட்டோர் என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

தோட்டப்புறப் பாடசாலைகளிலேயே இடைவிலகல் வீதம் அதிகமாக உள்ளது. நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் இடைவிலகல் வீதம் உயர்வாக உள்ளது. இங்கு சிறுவர்களை விட சிறுமிகளே அதிகம் சிறுவர் தொழிலாளர்களாக உள்ளனர். அவர்கள் 24.7 சதவீதமானோர் எனவும் சமீபத்திய சிறுவர் செயற்பாட்டு மைய அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. கல்வித் துறையில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் பெருந்தொகை செலவீனங்களை பாடசாலை இடைவிலகல் அர்த்தமற்ற தாக்குகின்றது. மேலும் பெற்றோரும் சிவில் சமூகமும் கல்வியில் வைத்திருக்கும் எதிர்பார்ப்பை நிறைவு செய்யாது தடுக்கின்றது.

உலகளாவிய ரீதியில் பாடசாலைகளிலிருந்து கல்வியைப் பூரணப்படுத்தாமல் இடைவிலகிய மாணவர்கள் வீதியோர வியாபாரம், கூலி வேலை, கடற்தொழில், தச்சுத் தொழில், மரவேலை, கட்டட நிர்மாண வேலை போன்ற முறைசார் மற்றும் முறைசாரா தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். குறைந்த வயதுள்ள சிறுவர்கள் பலர் தமது எஜமானர்களால் முறைசாராத் தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

சமீபத்தியக் கணிப்பீடு ஒன்றின் படி இன்று உலகளவில் 5 - 14 வயதுப் பிரிவைச் சேர்ந்த 25 கோடிக் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (International Labour Organization) இத்தகவலை வெளியிட்டுள்ளது. அவர்களில் 61 சதவீதமானோர் ஆசியாவிலும் 32 சதவீதமானோர் ஆபிரிக்காவிலும் 7 சதவீதமானோர் லத்தீன் அமெரிக்காவிலும் மிகச் சொற்பமான தொகையினர் செல்வந்த நாடுகளிலும் உள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் குழந்தைத் தொழிலாளர்களின் மொத்தத் தொகை 2 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆபிரிக்காவில் மூன்றில் ஒரு பகுதி பிள்ளைகளும் ஆசியாவில் நான்கில் ஒரு பகுதி பிள்ளைகளும் குழந்தைத் தொழிலாளர்களாக இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் அவர்களில் 2 சதவீதமானோர் 5 - 9 வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள். நகரங்களிலும் மாநகரங்களிலும் இவ் வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைத் தொழிலாளர்கள் 5 சதவீதத்தினர் மட்டுமே (சோ. பிடிகார 2007). அனைத்திற்கும் மேலாக வளர்முக நாடுகளில் 15 - 20 சதவீதக் குழந்தைகள் எந்த ஊதியமும் இல்லாமல் தமது உணவுத் தேவைக்காக மாத்திரம் வீட்டு வேலைக்காரர்களாகவும் பண்ணைத் தொழிலாளர்களாகவும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

---

**24 மனநலம்**

# மனச் சோர்வுக்கான காரணங்கள்



மருத்துவ ரீதியான மனச்சோர்வுக்கு குறிப்பிட்ட ஒரு காரணம் கிடையாது. இருப்பினும் இறப்பு அல்லது வேலை இழப்பு போன்ற அதிர்ச்சியான நிகழ்வுகள் மனச்சோர்வைத் தூண்டி விட அதிக வாய்ப்புள்ளது.

குழந்தைப் பருவத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் எதிர்காலத்தில் அவர்கள் எவ்வாறு எதிர்வினை செய்கிறார்கள் என்பதில் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். அது அவர்களது சுய விம்பத்தை வடிவமைப்பதிலும் அன்பு காட்டுவதிலும் பிறர் காட்டும் அன்பை உணர்வதிலும் தாங்கள் மற்றவர்களால் அன்பு காட்டப்படுகிறார்களா என்று உணர்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. பொதுவாக, வாழ்க்கை பற்றிய அவர்களுடைய மனப்பாங்கை அது தீர்மானிக்கின்றது.

ஒருவர் குறுகிய காலத்திற்குள் எதிர்கொள்ளும் சில நிகழ்வுகளை இரண்டு அல்லது அதற்கும் அதிகமான முறையில் அனுபவித்தால் அது மனச் சோர்வை ஏற்படுத்தலாம். பருவ வயதை அடைதல், புதிதாகப் பெற்றோர் ஆகுதல், பணியிலிருந்து ஓய்வு பெறுதல், மாதவிடாய் முற்றுப் பெறுதல் போன்ற சில குறிப்பிட்ட காலங்களில் மனச்சோர்வு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம்.

புள்ளிவிபரங்களின் படி ஆண்களை விட பெண்கள் மனச்சோர்வால் அதிகம் அவதிப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆண்களை விட பெண்கள் உதவியை நாடும் மனப்பாங்கு அதிகம் உள்ளது. ஆண்கள் தமக்கு ஏற்படும் நோய்க் குறிகளை குடிப்பழக்கத்தின் மூலம் மறைப்பதற்கு முயற்சி செய்வர். அதே போன்று ஹோர்மான் அடிப்படையிலான காரணிகளும் உள்ளன.

குழந்தை பிறந்த பின்பு 'பேரு காலத்திற்குப் பிந்திய' மனச்சோர்வு ஏற்படலாம். சரியான சிகிச்சை அளிக்காவிட்டால் சில வாரங்களோ மாதங்களோ -ஏன் வருடங்களோ அது நீடிக்கலாம். திருமணமான ஆண்களை விட திருமணமான பெண்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

மனச்சோர்வுக்கு வேறு சில காரணங்களும் உள்ளன.

- தனிமை / உறவினர் அல்லது நண்பரின் இழப்பு
- திருமணச் சிக்கல் அல்லது மணமுறிவு
- வேலைவாய்ப்பின்மை
- வேலையிலிருந்து நீக்கப்படுதல்
- பணச் சிக்கல்கள்
- வீடு மாற்றுதல்
- வேலைப் பழு அல்லது பதவி உயர்வு கிடைக்காமை
- ஊனமடைந்தவர்களைப் பராமரித்தல்
- கடுமையான அதிர்ச்சி
- சிறைவாசம்
- குழந்தைப் பருவத்தில் தகாத பாலுறவு அல்லது வேறு பேரதிர்ச்சியை அனுபவித்தல்

---

## நோபல் பரிசு பெற்ற ஈராக்கிய பெண்

# நாதியா முராத்


2018 இல் அமைதிக்கான நோபல் பரிசை இருவர் பெற்றனர். ஒருவர் டெனிஸ் முக்வேஜ். அடுத்தவர் நாதியா முராத். ஈராக்கின் கோஜோ பகுதியைச் சேர்ந்த நாதியா முராத் 1993 இல் பிறந்தவர். 25 வயதிலேயே அமைதிக்கான நோபல் பரிசு பெறும் நாதியா, ஈராக்கிலுள்ள யஸிதி இனச் சிறுபான்மையைச் சேர்ந்தவர்.

ஈராக்கில் மனித உரிமை செயற்பாட்டாளராக இயங்கி வந்த நாதியா முராத், தற்போது ஜேர்மனியில் வசித்து வருகிறார். 2014 இல் அவரது பிறப்பிடமான கோஜோவிலிருந்து பயங்கரவாத இயக்கம் என அறியப்படும் தாஇஷினால் கடத்தப்பட்டு மூன்று மாதம் சிறை வைக்கப்பட்டார்.

ஆயுத போராட்டங்களிலும் யுத்தங்களிலும் பாலியல் வன்முறையை ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கெதிராக தீவிரமாகச் செயற்பட்டவர் நாதியா முராத். ஈராக்கைச் சேர்ந்த ஒருவர் அமைதிக்கான நோபல் பரிசு பெறுவது இதுவே முதன் முறையாகும். நாதியா இயக்கம் என்ற பெயரில் சிவில் அமைப்பொன்றை நிறுவி, இனப்படுகொலையினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பெண்களுக்கு ஆதரவளித்து வந்தார் நாதியா.

ஈராக்கிய போர்ச் சூழலில் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பெண்களின் மனித உரிமைகளுக்காகவும், குழந்தைகளின் அடிப்படை உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தவர் என்று அவரைத் தெரிவுசெய்த நோபல் பரிசுக் குழு கூறுகின்றது.

ஈராக்கிலுள்ள சின்ஜார் மாவட்டத்தில் கோஜோ எனும் கிராமத்தில் நாதியா முராத் 1993 இல் பிறந்தார். இன மதச் சிறுபான்மை எனக் கருதப்படும் யஸிதி சமூகத்தைச் சேர்ந்த குடும்பமொன்றிலேயே அவர் பிறந்தார். அவரது பெற்றோர் விவசாயிகள்.



19 வயது மாணவியாக இருந்தபோது வடக்கு ஈராக்கிலிருந்து பல பெண்கள் கடத்திச் செல்லப்பட்டனர். அவர்களுள் நாதியாவும் ஒருவர். நாதியாவின் ஆறு சகோதரர்களும் ஒன்று விட்ட சகோதரர்கள் சிலரும் தாஇஷ் பயங்கரவாதிகளால் அடிமை என அறிவிக்கப்பட்டனர். இதுவரை 6700 யஸிதி பெண்களை தாஇஷ் வன்முறையாளர்கள் கடத்திச் சென்று பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

2014 செப்டம்பர் 15 இல் நாதியா கைதுசெய்யப்பட்டு மூன்று மாதம் அடிமையாகப் பயன்படுத்தப்பட்டார். பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட அவர், சிறையிலிருந்து தப்பி வந்தார். பின்னர் ஈராக்கிலிருந்து ஜேர்மனுக்கு அகதியாய் வந்து சேர்ந்தார். 2015 பெப்ரவரியில் பெல்ஜியம் பத்திரிகையொன்றுக்கு தனது வாழ்வில் எதிர்கொண்ட வேதனை மிக்க அனுபவங்களைப் பகிர்ந்தார்.

பின்னர் ஜேர்மனியின் அகதி முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்ட அவருக்கு தனி வீடு வழங்கப்பட்டது. 2015 டிசம்பரில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் ஈராக்கில் இடம்பெற்று வரும் ஆள்கடத்தல் குறித்து நாதியா முராத் அறிக்கையொன்றை சமர்ப்பித்தார். ஆள் கடத்தல் குறித்து பாதுகாப்புச் சபை பெற்றுக் கொண்ட முதல் தனிமனித அறிக்கை இது.

பின்னர் சர்வதேச ரீதியில் இடம்பெற்ற ஆள் கடத்தல் குறித்த மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் நாதியா முராத் பங்குகொண்டார். 2016 ஜூன் மாதம் ஐ.நா. அலுவலகத்தில் போதைப்பொருட்களும் குற்றச் செயல்களும் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற கருத்தரங்கிலும் அவர் உரையாற்றினார். அவரது விஷேட அக்கறை ஈராக்கின் களநிலவரங்கள் குறித்ததாகவே இருந்தது. குறிப்பாக தாஇஷ் பயங்கரவாதிகள் மேற்கொள்ளும் இனப்படுகொலை, கற்பழிப்பு, ஆட்கடத்தல் இவை குறித்து ஆவணங்களைத் திரட்டுவதிலும் சட்ட நடவடிக்கைகளை ஊக்குவிப்பதிலும் அவர் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்.

2016 செப்டம்பரில் நியூயோர் நகரில் இடம்பெற்ற இனப்படுகொலைக்குப் பலியானவர்கள் குறித்து ஆதரித்து வாதிடுதல் (Advocacy) தொடர்பான நிகழ்வொன்றிலும் அவர் கலந்துகொண்டார். இதே ஆண்டு இதே மாதம் அவருக்கு நல்லெண்ணத் தூதுவர் என்ற பட்டம் ஐ.நா. சபையினால் வழங்கப்பட்டது. 2017 மே மாதம் வத்திக்கானில் போப்பாண்டவர் பிரான்சிஸ் மற்றும் உயர் கிறிஸ்தவ மதகுருக்களை அவர் சந்தித்தார். தாஇஷ் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யஸிதி சமூகத்தைப் பாதுகாக்குமாறு நாதியா முராத் அங்கு வேண்டுகோள் விடுத்தார்.

இதுவரை நான்கு விருதுகளை வென்றுள்ள நாதியா முராத், 2018 ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசை வென்றுள்ளார். இவரது பிரபலமான நூலாக The Last Girl: My story of Captivity and my fight against the Islamic State எனும் நூல் விளங்குகின்றது. இதனை க்ரௌன் வெளியீட்டு நிறுவனம் 2017 இல் வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷரீஆவுக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)



முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த அறிக்கைகளில் பிந்திக் கைச்சாத்திட்ட 08 பேரில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா 06 ஆவதாகக் கையொப்பமிட்டிருந்த போதும் அவரது பெயரிலேயே இந்த அறிக்கை பரவலாக்கப்பட்டு வருகிறது.

பாயிஸ் முஸ்தபா அறிக்கையே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தைப் பரவலாக்கும் பலரும் நீதியரசர் சலீம் மர்சூபினுடைய அறிக்கை ஷரீஅத்துக்கு முரணானது, எனவே பாயிஸ் முஸ்தபா தரப்பு அறிக்கைக்கே முஸ்லிம் சமூகம் ஆதரவளிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இருந்த போதிலும் நீதியரசர் சலீம் மர்சூபுடைய அறிக்கை ஷரீஅத்துக்கு மாற்றமானது என்ற கருத்திலோ முஸ்லிம்களுக்கு விரோததமானது என்ற கருத்திலோ பாயிஸ் முஸ்தபா இல்லை என்று தெரிய வருகிறது.

மாறாக சலீம் மர்சூபுடைய முன்மொழிவுகளில் இன்னும் கலந்தாலோசிக்கப்பட வேண்டியிருப்பதாகவே அவர் கருதுவதாகவும் அறியக் கிடைக்கின்றது. தனது பெயரைப் பயன்படுத்தி சிலர் மக்களைத் தவறாக வழிநடத்துவதையிட்டு முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தக் குழுவின் அங்கத்தவரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா அதிருப்தி அடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## வடக்கிலிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

அனுபவித்து வரு கின்றனர். இந்தத் துயரங்கள் இன்னு மொரு தலைமுறைக்குக் கடத்தப்பட்டு யுத்தத்தையே சந்திக்காத புதிய தலைமுறை கூட இந்த இனவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தமிழர் என்றாலே இனவாதிகள் தான் என்ற உணர்வு தான் முஸ்லிம் மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்திருக்கிறது.

இரு சிறுபான்மை இனங்களும் தமது இருப்பிடங்களில் சுமுகமாக வாழ வேண்டும் என்றிருந்தால் முதலில் இந்த உணர்வுகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும். ஒரு தாய் மக்களாக வாழ்ந்த அந்தப் பசுமையான பொழுதுகளை மீண்டும் மீட்டெடுக்க வேண்டும். தமது இலாபங்களுக்காக முஸ்லிம் தமிழ் உறவைப் பயன்படுத்தியவர்களின் முகத்திரையைக் கிழித்தெறிந்து உண்மையான மனித உறவுகளைக் கட்டியெழுப்ப வேண்டும். இதில் முஸ்லிம் சமூகத்துக்கும் பொறுப்பிருக்கிறது. அதைவிட தமிழ்ச் சமூகத்துக்குப் பாரிய பொறுப்பிருக்கிறது. தமக்கு எதிராகப் போராடிய சிங்கள இனத்துடனேயே இணக்கமாக வாழுகின்ற தமிழ்ச் சமூகத்துக்கு தம்முடன் இணக்கமாகவே இன்றுவரை வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் சமூகத்தை அரவணைப்பது முடியாத காரியமல்ல.

## இணக்கம் காண... (07 ஆம் பக்கத் தொடர்)

இந்த அறிக்கைகளை வாசிக்கும் போது சில விடயங்களில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. அதற்குக் காரணம், அவர்கள் இமாம் ஷாபியின் கருத்துக்களை மாற்ற முடியாது எனக் கூறுவது. அதுவே நிலையான கருத்து என்ற நிலைப்பாட்டில் இருக்கும் வரையில் இதில் எமக்கு சுமுகமான தீர்ப்புக்கு வர இயலாது. இந்த நிலையில் இனிமேலும் இதனை வைத்துக் கொண்டிருக்கவும் முடியாது. இந்த அறிக்கை பல வருடங்களாக தாமதமான தற்குரிய காரணம் இதுதான்.

இதற்கிடையில் எனக்குப் பல்வேறு பக்கங்களிலிருந்தும் அழுத்தங்கள் வரத் தொடங்கின. அமைச்சிலிருந்தும் இந்த அறிக்கையை விரைவில் முடித்துத் தருமாறு கடிதங்களும் அனுப்பப்பட்டன. இந்த அறிக்கையை காலம் தாழ்த்தியமைக்கு நீதியமைச்சர் விஜேதாசவும் என்னுடன் முரண்பட்டார். இதனாலேயே அவர் பிறிதொரு குழுவை நியமித்தார். நான் ஹஜ்ஜுக்கு செல்லும் சமயத்திலேயே இது நடந்தது.

அறிக்கையை விரைவில் முடிக்க வேண்டும் என்பதற்காக வேண்டி நான் ஹஜ்ஜுக்கு போகும் போது மடிக் கனணி உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் கூடவே எடுத்துச் சென்றேன். ஜித்தா விமான நிலையத்தில் எனது கால் அடிபட்டு வருத்தம் அதிகரித்ததால் ஹஜ்ஜைக் கூட சக்கரை நாற்காலியில் இருந்து கொண்டே செய்ய வேண்டிய நிலை உண்டாயிற்று. இந்த அறிக்கை தயாரிக்கும் பணியைப் பூர்த்திசெய்திருப்பது குறித்து நான் மிகுந்த மனநிம்மதியடைகின்றேன். ஆரம்பத்திலிருந்தே எமக்கு மத்தியில் ஏற்றுக்கொள்ள முடியாமல் காணப்பட்ட இடைவெளியொன்று இருந்து வந்தது. அது இன்னும் உள்ளது. இதுவே அறிக்கை தாமதத்திற்கு காரணம்.

- 2006 ஆம் ஆண்டில் வெளியான இல ங்கை சட்டக் கல்லூரியின் Law Journal இல் sect (பிரிவு) என்பது இஸ்லாத்தில் உள்ள ஷீஆ, சுன்னி பிரிவுகளையே குறிக்கிறது. ஏனையவை அனைத்தும் school of laws எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். இங்கு (SECTS) பிரிவுகள் என நீங்கள் நாடுவது ஷீஆ சுன்னி பிரிவுகளையா? அல்லது மத்ஹப்களையா?

எனது கருத்தாக நான் அதை சொல்லியிருக்கக் கூடும். sect என்பது பிரிவாகும். எமது உம்மத்துக்கு மத்தியில் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டால் அதுவும் பிரிவுதான். உதாரணத்திற்கு தௌஹீத் ஜமாஅத்தையும் ஒரு sect ஆகக் குறிப்பிடக் கூடும். நிரந்தரமான பிரிவொன்று எங்கு உருப்பெறுகிறதோ அதுதான் sect ஆகும். மத்ஹப் பிரிவல்ல. மத்ஹப் இமாம்களின் கருத்து என்பதாக சிலர் சொல்கின்றனர். இமாம்களின் கருத்தென்றால் அது பிரச்சினையல்ல. அந்தக் காலத்திலிருந்து இமாம்கள் மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள். கருத்து வேறுபாடுகளால் இஸ்லாத்திற்கு எவ்வித பின்னடைவுகளோ கெடுதிகளோ ஏற்படவில்லை.

கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமல் நீ முஸ்லிமல்ல எனக் கூறி சண்டை பிடித்திருந்தால் இஸ்லாம் எப்போதோ உடைந்து போயிருக்கும். ஏனையவர்களது கருத்துக்களை ஏற்றுக்கொள்வது மிக முக்கியம். கருத்து முரண்பாடு உள்ளதெனக் கூறி அடுத்தவர்களை ஒதுக்கிவிட முடியாது. எனவே பன்முகத் தன்மை Diversity என்பது இஸ்லாத்தில் ஒரு பலமாகும்.

மத்ஹபுகளுடைய கருத்துக்களை பின்பற்றுவதில் யாருக்கும் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. சில சமயம் நான் பீஜி நாட்டில் இருப்பேன். அங்கு ஹனபி மத்ஹப் தான் உள்ளது. சிங்கப்பூருக்கு வந்தால் ஷாபி மத்ஹப் வருகிறது. அங்கிருந்து இங்கு வந்தால் ஷாபி மத்ஹப். மத்ஹபை பொறுத்தவரையில் யாருக்கும் எந்த மத்ஹபையேனும் பின்பற்ற முடியும். மத்ஹபைப் பின்பற்றும் முறை நாட்டுக்கு நாடு வித்தியாசமானது.

சிங்கப்பூரில் அனேகமாக ஷாபி மத்ஹப் பின்பற்றப்படுகின்றது. எனினும் இலங்கையிலுள்ள ஷாபி மத்ஹபுக்கும் சிங்கப்பூரின் ஷாபி மத்ஹபுக்கும் இடையில் நிறைய வித்தியாசங்களை காண முடிகின்றது. சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் 100 வீதம் ஷாபி மத்ஹபில் தான் இருக்க வேண்டும் எனக் கூறப்படவில்லை. சிங்கப்பூரில் முஸ்லிம் சட்டம் Muslim Law Administration Act எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மலேஷியாவில் Islamic Law Administration (Federal territories Act) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு சட்டங்களிலும் ஒரே கருத்துள்ள இரண்டு பிரிவுகள் உள்ளன.

சிங்கப்பூரில் முஸ்லிம் விவாக, விவகாரத்து சம்பந்தப்பட்ட விடயங்கள் மாத்திரமல்லாமல் சொத்துப் பங்கீடு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துப் பங்கீட்டில் முழுச் சொத்தையும் ஒருவர் வாரிசுக்கு வழங்க முடியாது என அந்தச் சட்டம் குறிப்பிடுகிறது. எமது சட்டத்தின் படி எமது முழுச் சொத்தையும் உயிலாக யாருக்கும் எழுதி வைக்க முடியும். எமது குடும்பத்துக்கு இல்லாமல் வேறு யாருக்காவது என்றும் எழுதி வைக்க முடியும்.

ஆனால் இஸ்லாத்தில் இது தடைசெய்யப்பட்டுள்ளது. ஷரீஆ சட்டத்தின் படி குடும்பத்தவர்களுக்கு மூன்றில் ஒரு பங்காவது வழங்க வேண்டும். சிங்கப்பூரில் சொத்துள்ள ஒருவர் முழுச் சொத்தையும் தனது வாரிசுக்கு கொடுக்க முடியாது. மற்றைய உறவுகளுக்கும் அதில் ஒரு பகுதி செல்ல வேண்டும். இது இஸ்லாமிய சட்டம். ஸூறா நிஸாவில் இந்த விடயம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதாவது ஒரு சொத்தை 100 வீதம் ஒருவருக்கு எழுதி வைக்க முடியாது என்பது. ஆனால் இலங்கையில் அது முடியும்.

மலேஷியாவில் இஸ்லாமிய சட்டம் ஷாபி மத்ஹபின் கருத்து என்பதாகக் குறிப்பிடப்பட்டு, (that is the opienion of shafi) அதற்கு அடுத்த பிரிவில் if the application opinion of the shafi results in violation of public interest then sharia court may consider the opienion of imam Abuhanifa, imam Hanbal or Malic பொதுநலனுக்கு முரணாகாத வகையில் இமாம் ஹனபி, மாலிக், ஹன்பலி போன்றவர்களின் கருத்துக்களையும் பின்பற்ற முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் முரண்பாடுகள் ஏற்படின் மலேஷியாவில் முப்தியின் ஆலோசணை பெறப்படுகிறது. சிங்கப்பூரில் கவுன்ஸிலின் ஆலோசனை பெற வேண்டும். அதன் தலைவராக முப்தி இருப்பார். முப்தி ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார். சிங்கப்பூரின் முப்தி ஒரு பெண்ணாக உள்ளார்.

முப்தி அல்லது கவுன்ஸில் எதைப் பின்பற்றுவது என்கின்ற முடிவுக்கு வர வேண்டும். சில சமயங்களில் எந்த இமாமினதும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிருந்தால் சிங்கப்பூரில் அதையும் கவுன்ஸிலுக்கு அறிவிக்க வேண்டும். அப்போது இந்தக் கவுன்ஸில் உரிய காரணத்துடன் பத்வா போன்ற ஒன்றை வழங்க வேண்டும். அந்த நாடுகளின் முறைமை இப்படித்தான் உள்ளது. இந்த முறைகளை நான் இங்குள்ளவர்களுக்கு காண்பித்தேன். இதுபோன்று இங்கும் உருவானால் ஷீஆக்களின் சட்டம், வேறு பிரிவுகளுக்கான சட்டம் என்றெல்லாம் வர முடியாது.

எமது நாட்டு சட்டத்தின் படி, we have to apply the law of sect wich the parties belong. இங்கு sect எனும் போது ஷீஆ, சுன்னியாகும். ஆனால் மத்ஹப் ஒரு பிரிவா இல்லையா என்பதை ஆராயுமிடத்து, அல்குர்ஆனில் ஸூறா அல்அன்ஆம் 159 ஆவது வசனம் பின்வருமாறு உள்ளது. ''நிச்சயமாக தங்கள் மார்க்கத்தைப் பலவாறாகப் பிரித்து, பல பிரிவினர்களாகி விட்டனரே அத்தகையோர் - அவர்களின் எக்காரியத்திலும் நீர் இல்லை. அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடமே இருக்கின்றது. அவர்கள் செய்துகொண்டிருந்தவற்றை பின்னர் அவன் அவர்களுக்கு அறிவித்து விடுவான்''

மத்ஹப் என்பது ஒரு பிரிவல்ல என்பது ரிஸ்வி முப்தி போன்றவர்களின் தர்க்கமாக உள்ளது. sect என்பதில் மத்ஹபும் உள்ளடங்குகிறது என நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதனாலேயே ஷாபி மத்ஹபைச் சேர்ந்த பெண், ஹனபி மத்ஹபைச் சேர்ந்த ஆண் என பிரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவர் ஷாபி. இவர் ஹனபி என பிரிவுபடுத்தப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம். அப்துல் காதர் எதிர் ராசிக் வழக்கில் ஒரு பெண் பிள்ளைக்கு தந்தையின் விருப்பமின்றி அவளுடைய விருப்பப்படி திருமணம் முடிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. தந்தை இதற்குக் கடுமையான எதிர்ப்பை தெரிவித்த போது முதலில் அந்தப் பிள்ளை ஒரு இமாமை சந்தித்து நான் ஹனபி மத்ஹபைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பெண் என்பதாக அறிவித்துக் கொண்டாள். அதன் பின்னர் அவள் தனக்கான வலியாக ஒருவரை நியமித்துக் கொண்டாள். அவர் இந்தத் திருமணத்திற்கான அனுமதியை வழங்கினார். வலியானவர் திருமணம் முடிக்கவுள்ள ஆணின் நெருங்கிய நண்பராக இருந்திருக்கலாம். இதன் பிறகு திருமணம் நடந்தது. இந்த விவகாரம் பிரீவி கவுன்ஸில் வரை சென்றது. ஷாபியாக உள்ள பெண்ணுக்கு ஹனபியாகும் உரிமையுள்ளது என பிரிவீ கவுன்ஸிலில் கூறப்பட்டது.

அண்மையில் மாஸ் யூஸுப் ஒரு கட்டுரையில் வலி சம்பந்தமாக உள்ள பிரச்சினையில் தந்தை அனுமதிக்க மறுத்தால் அந்தப் பெண்ணுக்கு ஹனபியாக மாற முடியுமே என்று குறிப்பிட்டிருந்தார். எமது கருத்து அதுவல்ல. மாறுவதென்றால் (Convert) இஸ்லாத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறுவதைக் குறிப்பிட முடியும். வலி விடயத்தில் ஷாபியிலிருந்து ஹனபிக்கு மாற வேண்டும் என்பது கிடையாது. இந்தக் கருத்தை எமக்கு நடைமுறைக்குக் கொண்டு வர முடியும். இதை காதி நீதவானே செய்ய வேண்டும்.

எமது ஊரில் இது தற்காலத்திற்கு பொருத்தம் என்றால் மாத்திரமே அவர் இதனைச் செய்வார். பொறுத்தமில்லா விட்டால் செய்யமாட்டார். ஆனால் அவர் பொருத்தம் என்று செய்தால் அவர் இஸ்லாத்திற்கு முரணாகச் செயற்பட்டார் என்றெல்லாம் சொல்ல முடியாது. ஏனெனில் ஷரீஆ என்பது இமாம் ஷாபியின் கருத்துக்கள் மாத்திரமல்ல. இதற்காக வேண்டி நான் ஒரு நாள் ரண்முது ஹோட்டலில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து எத்தனையோ விடயங்களில் ஹனபி இமாமின் கருத்துக்களை வேறு சமூகத்தவர்கள் தற்போதைய நிலைமையில் ஏற்றுக்கொள்வதில்லை என்பதை கூறினேன். உதாரணமாக சாட்சி தொடர்பில்.

sect ஐ நீக்க வேண்டாம் என அவர்கள் குறிப்பிட்டார்கள். எனது மனச்சாட்சிப்படி sect ஐ நீக்காமல் முடியாது. அந்தக் காலத்திலிருந்த உலமாக்கள், சட்டத்தரணிகள் எல்லோரதும் கோரிக்கைக்கு அமைய ஷாபி, ஹனபி எல்லாம் sect என்பதாக நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. sect என்பது சுன்னி என்பதாக விட்டிருந்தால் ஒரு பிரச்சினையும் வந்திருக்காது. இப்படி விட்டால் ஷீஆக்களும் வருவார்கள் என்று அவர்கள் பயப்பட்டிருப்பார்கள். அப்படியென்றால் அதைத் திருத்த வேண்டும். ஷீஆக்கள் வராதிருக்க வேண்டுமென்றால் மலேஷியாவில் கொண்டுவரப்பட்ட முறையே மிகச் சிறந்த முறையாகும். அதை விட்டுவிட்டு இவர்கள் இதனைத் திருத்தாமல் வைத்துக் கொண்டு ஷாபி மத்ஹப், ஹனபி மத்ஹப் எல்லாவற்றையும் sect என்பதாக போட்டுவிட்டார்கள்.

பத்ஹுத் தையான் என்ற நூலிலிருந்து ஒரு கருத்தை நான் மேற்கோள் காட்டியுள்ளேன். அதாவது, இமாம் அபூ ஹனீபாவின் சியாரத்தில் இமாம் ஷாபி தொழுகை நடத்தினார். இமாம் ஷாபியின் ஆட்களும் அங்கிருந்தார்கள். சுப்ஹு தொழும்போது குனூத் ஓதப்படவில்லை. அப்போது ஏன் நீங்கள் குனூத் ஓதவில்லை என எல்லோரும் கேட்டார்கள். அப்போது அவர், நான் இங்கு அடக்கப்பட்டுள்ளவரின் மதிப்புக்காக, அவருடைய கொள்கைப்படி தொழுகை நடாத்தினேன் என்றார். எனவே அவர்களுடைய இடத்தில் இருந்து கொண்டு எமது சட்டத்தை போட முடியாதல்லவா? இப்படியிருக்கும் போது நீ ஷாபி, நீ ஹனபி என வித்தியாசப்படுத்தி கூற முடியாது. இதுவே பிரச்சினை.

எமது தற்போதைய சூழ்நிலையில் நாம் தீர்மானிக்கும் வழக்கிற்கு அது சரியாக உள்ளதா? என்பதையே அவர் தீர்மானிக்க வேண்டும். இந்த முடிவைப் பெறுவதற்கு ஒவ்வொரு இமாமினதும் கருத்தை அவருக்கு ஆலோசிக்க முடியும். இப்படித்தான் முடிவுகள் எடுக்க வேண்டும். இந்த நெகிழ்வுத்தன்மை இல்லாவிட்டால் பிக்ஹு சட்டத்தை முன்கொண்டு செல்ல முடியாது. இதனாலேயே இது நீக்கப்பட வேண்டும் என கூறுகின்றனர்.

இதன் நடைமுறை ரீதியான பிரச்சினைகளும் உள்ளன. இருவர் சுன்னி. இதில் ஒருவர் ஷாபி. மற்றையவர் ஹனபி. மனைவி ஷாபி மத்ஹபைச் சார்ந்தவள், கனவன் ஹனபி என்று வைத்துக் கொள்வோம். இவர்கள் திருமணம் முடிக்கும் போது இரண்டு ஆண் சாட்சிகள் இல்லை. இவர்கள் இருவரும் டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து திருமணம் முடிக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்வோம். இரண்டு சாட்சிகள் தேவை. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒப்பமிட்டு திருமணம் நடத்தி முடிக்கப்பட்டது.

திருமணம் பதிவுசெய்யப்படவில்லை என்றும் வைத்துக்கொள்வோம். ஒருவர் அவுஸ்திரேலியா. அடுத்தவர் இலங்கை என்று வைத்துக்கொள்வோம். இது போன்ற தொரு ஒப்பந்தம் டுபாய் விமான நிலையத்தில் நடைபெற்றது என வைத்துக் கொண்டால் அதற்கு ஒரு ஆணும் இரண்டு பெண்ணும் சாட்சியாக உள்ளார்கள்.

இதில் இமாம் அபூ ஹனீபாவின் கருத்தென்னவெனில், ஒரு ஆண் இரண்டு பெண் இருந்தால் அது ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை. ஆனால் இமாம் ஷாபியின் கருத்துப்படி இரண்டு ஆண்கள் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் திருமணம் செல்லுபடியாகாது. எனவே ஷாபியின் சட்டம் ஒரு விதமாகவும் மற்ற இமாமின் சட்டம் மற்றொரு விதமாகவும் உள்ளது.

இந்நிலையில் எவ்வாறு முடிவெடுப்பது. ஹனபி சட்டப்படி இந்தத் திருமணம் செல்லுபடியானது. ஷாபி சட்டப்படி செல்லுபடியற்றது. இதுபோன்ற நடைமுறைச்சிக்கல்கள் குறித்து ரிஸ்வி முப்தி தரப்பினரிடம் சில கேள்விகளை தொடுத்தேன். இருவரும் இரண்டு sect (பிரிவு) களைச் சார்ந்தவர்களாக இருப்பின் அவர்களுக்கு முஸ்லிம் சட்டம் செல்லுபடியாகாது. ஒரு முஸ்லிம் வேதம் வழங்கப்பட்ட ஒரு பெண்ணை திருமணம் செய்தால் அது ஷரீஆவுக்கு முரணல்ல. ஆனால் சிலை வணங்குபவர்கள் அப்படி ஒருவரை திருமணம் செய்தால் அது செல்லுபடியாகாது. முஸ்லிம் தனியார் சட்டத்திற்குள் வரும் போது இருவரும் முஸ்லிமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பொதுத் திருமணச் சட்டமே செல்லுபடியாகும்.

இதற்கு மற்றுமொரு உதாரணமாக சனல் - டனல் வழக்கினை குறிப்பிடலாம். பிரான்ஸிற்கும் இங்கிலாந்துக்கும் இடையில் பாதையும் புகையிரதப் பாதையும் சுரங்க வழியாக உள்ளது. இந்தச் சுரங்கப் பாதையை நிர்மாணிப்பதற்கு பிரான்ஸ் அரசாங்கமும் இங்கிலாந்து அரசாங்கமும் பல்வேறு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் போது ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அது தொடர்பில் இங்கிலாந்து நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுமா? அல்லது பிரான்ஸ் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுமா? என்கின்ற பிரச்சினை மேலெழுந்தது.

இத்தோடு இவ்விடயத்தில் பிரான்ஸிய சட்டம் அமுல்படுத்தப்படுமா? அல்லது ஆங்கிலச் சட்டம் அமுல்படுத்தப்படுமா? என்கின்ற பிரச்சினை வந்தது. இதன்போது ஒரு முடிவெடுக்கப்பட்டது. நாங்கள் இரு நீதிமன்றங்களுக்கும் செல்வதில்லை. நடுநிலையானதொரு தீர்ப்பை மாத்திரமே பெறுவோம் என்பதாக.

அதாவது இது international commercial arbitration செய்வதாக இருந்தது. இதைச் செய்யும் போது எந்தச் சட்டம் அமுல்படுத்தப்படும் என்று உடன்பட்டிருந்தனர். இவ்விடயத்தில் ஆங்கிலச் சட்டத்தையும் அமுல்படுத்தாமல் பிரென்சு சட்டத்தையும் அமுல்படுத்தாமல் English French law ஐ வரைந்து கொண்டார்கள். ஆங்கிலச் சட்டத்திற்கும் பிரான்ஸிய சட்டத்திற்கும் பொதுவான முதன்மைச் சட்டங்களையே அமுல்படுத்தினார்கள். மற்றையவைகளை விட்டுவிட்டார்கள்.

இதுபோன்று ஷாபி மத்ஹபின் சட்டத்திற்கும் ஹனபி மத்ஹபின் சட்டத்திற்கும் இடையில் பொதுவான விடயங்கள் அதிகமாகவே உள்ளன. விவாகம் தொடர்பான விடயத்தில் நிறையவே வித்தியாசங்கள் உள்ளன. திருமண வயது போன்றவற்றை குறிப்பிடலாம். இதனால் இதை அமுல்படுத்துவதென்பது மிக மிகக் கடினம். எனவே நடைமுறையில் இதனை அமுல்படுத்த முடியாது.

அடுத்தது இது அல் குர்ஆனுக்கு முரணாகக் காணப்படுகின்றது. சூறா அல் அன்ஆம் இதற்கு உதாரணம். இதனை மேற்கோள் காட்டிய போது இந்த வசனம் தற்போதைய தலைமுறைக்கு வரவில்லை. இதற்கு முன்பிருந்த தலைமுறைக்கே வந்ததென்று ரிஸ்வி முப்தி ஒரு கருத்தைச் சொன்னார். நான் அவருக்கு கூறினேன். அது அப்படியல்ல. ஸூரா அர்ரூம் 30, 31, 32 ஆகிய வசனங்களையும் இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம். ஸூரா அஸ்ஸூரா போன்வற்றையும் உதாரணமாக குறிப்பிடலாம். பிரிவுகள் பற்றி இந்த ஸூறா வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. எனவே கருத்து வேறுபாடுகளால் சமூகத்தில் பிரச்சினை ஏற்படக்கூடாது.

(அடுத்த இதழிலும் தொடரும்)

மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/C: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அஸன்வளவில் வேர் மண்டிய ஈரக் காலடி



வளவுக்குள் வைத்த கடைசிக் காலடியை
எடுக்க முடிவதில்லை
தவிப்புற்ற வறள்தாகக் கொதிப்பில்
தீய்ந்து போகிறதென் இதயம் மறுபடி கருகி

பனைக் கிழங்கின் பிரிக்க மேலெழும் பீலியாய்
பிஞ்சுக் கால்கள் பரப்பி அடர்ந்தேறிய மகிழ்பொழுதுகள்
நினைவில் கிடந்து துடிப்பெடுக்கின்றன.

வேர் மண்டிய காலடியின்
நரம்பிலேறிப் படர்கிறது உணர்வின் ரேகை
உம்மாவின் உம்மாவின் கனவில் நிமிர்ந்த
சுருக்குப் பனை
தலை முறிந்த தலைமுறை இடைவெளி பேசிற்று
பின்
பேய்க் காற்றில் மௌனித்துப் போயிற்று
தொட்டாச் சிணுங்கி முகிழ்ந்த
ஒற்றை வழிப்பாட்டில் தொடரறுந்து நடக்கிறேன்
பேரற்ற எதுவோ அடர்ந்த அடித்தடத்தில்
பாம்புகள் பொங்கியெழுகின்றன
அஸன்வளவில் ஈசான மூலையில்
நச்சு நிறக் கள்ளச் செடியொன்று
காலில் தைக்கிறது
கணத்தில் அலறுகிறேன்

என் கழுத்தை நசிப்பதாக சுற்றி லே'கள் நெருக்கின
எலும்புக் கூடும் சிதறிற்று
ஏக்கத்தில்
காலடியை எடுத்து வெளியே எறிகிறேன்

வாப்பாவின் வாப்பாவின்
வாப்பாவின் ஆதிக் காலடி
உக்கிப் புதைந்த சுவட்டில்
முளைத்தெழுகிறது சின்னக் காலடிச் செடி மூன்று

– முல்லை முஸ்ரிபா

## இலக்கை மறந்த இளைஞர் கூட்டம்

இலக்கை மறந்த இளைஞர் கூட்டம்
பயனற்றுத் திரிகிறது
உரலற்ற உலக்கையாய்

கேட்பார் யாருமற்று
கேட்டாலும் பீதியுற்று
விடியல்களும் நடுச் சாமமாக
தூங்கிக் கொண்டிருக்கின்றது


ஸ்மார்ட் தொலைபேசிகளோ உயிர்த் தோழனாக
உயிர் தோழனோ அனைத்திலும் மேலாக
புத்தகங்களோ மூலையில் புழுதிபடிய
மோட்டார் சைக்கிளோ வாசலில் புழுதி துடைத்த
நிலையில்

பெற்ற இதயங்கள் துடிக்கத் துடிக்க
பார்க்கும் இவர்களுக்கோ மனம் வலிக்க
பெற்றோர்களின் சுமை குறைக்க - வீதி வீதியாய்த்
திரிகிறார்கள் வாழ்க்கை துணை சிறக்க

வீரம் புரிந்த இளைஞர்களால்
வெல்லப்பட்ட ஸ்பெய்ன்
காதல் புரிந்த இளைஞர்களால்
பறிகொடுக்கப்பட்டது போல

வெல்லப்படாமலே வீட்டையும் சேர்த்து
நாட்டையும் பறிகொடுக்கத் துடிக்கும்
இந்த யாதுமறியாக் குழந்தைகள்

சமூகமே! விழித்திட்டால் உலகம் சிறக்கும்
மறந்திட்டால் நாடே தவிக்கும்
எதிர்காலமோ கசப்பாய் இருக்கும்
புரிந்திட்டால் மறுமையும் இனிக்கும்



எம்.எஸ். சஸ்னி ஷரீப்

## அகதியாகும் போது...



மணல்களில் அம்மணமாய்
மல்லாந்து கிடக்கும் போது
முள்ளுகள் கூட
முதுகுகளை
முரட்டுத்தனமாக குத்தும்.
+
பள்ளி நில முகாம்களில்
பாய்களை தாண்டி
ஈரலிப்பு தரையில்
ஈட்டியோடு தலை காட்டி
போட்டி போட்டு குத்தும்
புழுக்கள்..
+
கூப்பன் கடைகள் முகாமைகளுக்கு
கொப்பன் வீட்டு கடைகளாகும்
கல்லுகளுக்குள் அரிசியை
வில்லைகள் வைத்து தேட
வேண்டியிருக்கும்
+
வானத்தின் மனஉளைச்சல்
விழிகளை திறக்கும் போது
துவாரம் விட்டு நெய்த
தென்னோலை இடைகளால்
தூவானம் அடிக்கும்.
தூக்கம் விரண்டு ஓடும்
துயில் எழுந்த விஷ ஜந்துக்களின்
பல் விலக்கும் சத்தம்
பயத்தை இதயத்தில் புகுத்தும்
+
'பெரியார்களே சகோதரர்களே..'
பள்ளிகளின் ஸ்பீக்கர்கள்
வெள்ளிகளை அலங்கரிக்கும்..
மதில்களை தாண்டி
'வந்தான் வரத்தான்'
வீதிகளில் உலா வரும்
+
பனையோலை வேலி ஓரம்
பதம் பார்க்கும் விரல்களை. .
பாதையெல்லாம்
பொசுக்குகிற
போர்க்களமாகும்.
மாலை நேர
பள்ளிக்கூடங்கள்
எள்ளி நகையாடும்.
வீதியோர நாய்கள் கூட
வெறித்து முறைக்கும்.
+
குளங்கள்
கொலைக்களங்கள் ஆகும் .
கூடி நிற்கிற காவாலிக்கூட்டம்
ஓட ஓட ஓரத்தை நோக்கி விரட்டும்
ஓட்டை வீட்டின் வாடகைகள்
ஓவர்களாகி கூரைகளை பிய்க்கும்.
உப்பளத்தின் நாட்கூலிகள்
உணர்வற்று வெறித்துப்பார்க்கும்
ஊரில் வேண்டாத பயல்களுக்கெல்லாம்
கார சாரமாய் பேச்சும் வரும்.
+
நாடி நரம்பெல்லாம் புடைக்கும்.
அடி வயிற்றின் பசி அதை அடக்கும் .
'பனங்கொட்டையன்' என்று
'பலாக்காய்கள்' அழைக்கும்
பாவம் செய்த பிறவிகள் என
பள்ளி மிம்பர்கள் கூவும்.
+
அகதியாகும் வலியை
அரை நாள் மட்டும் உணர்ந்து பார் ..
காதலின் வலி
எதிரிக்கும் வேண்டாம் என்று
கவிஞன் சொன்னதின் பொய்யை
கண்டு கொள்வாய் ..

-முஹம்மது ராஜி

## CPA சட்டத்தை... (01 ஆம் பக்கத் தொடர்)

சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு முற்றி லும் அமைவானதாக பாராளுமன்றம் இந்தச் சட்ட மூலத்தை திருத்தி அமைக்க வேண்டும் எனவும் இந்த மறுசீரமைப்புக்கு எதிரான அழுத்தங்களைத் தாண்டிச் செல்ல வேண்டும் எனவும் நியுயோர்க்கைத் தளமா கக் கொண்ட அந்த அமைப்பு வேண்டிக் கொண்டுள்ளது.

புதிய சட்டமூலமானது பயங்கரவாதம் தொடர்பில் புதிய வரைவிலக்கணத்தை வழங்கியுள்ளது. முன்னைய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் இல்லாத புதிய விடயங் களை இது கொண்டிருந்த போதிலும், அமைதியான பேரணிகள், அரச சார்பற்ற நிறுவனங்களையெல்லாம் கட்டுப்படுத்தும் விதமாக இந்தச் சட்டமூலம் அமைந்துள்ள தாக எடுத்துக் காட்டப்படுகிறது.

யுத்தத்துக்குப் பின்னரான அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகளில் ஓர் அங்கமாக இந்தச் சட் டத்தை நடை முறைப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலும் ஐரோப்பிய யூனியனும் விடுத்த வேண்டு கோளை அரசாங்கம் ஏற்றிருந்தது. இருந்த போதிலும் 2015 இலிருந்து இதுவரை இதை நிறைவேற்றுவது தொடர்பிலான அரசாங் கத்தின் மந்தமான செயற்பாடு தொடர்பில் இவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டு வந்தனர்.

## சுற்றுலா... (01 ஆம் பக்கத் தொடர்)

வெளியிடுகையில், கடற்கரைக்கு வரும் சுற்று லாப் பயணிகள் குட்டையாக அணியாமல் வேறு எப்படி அணிவது என்று கேள்வி தொடுத்துள்ளார்.

ஹபராதுவ பிரஜைகள் பொலிஸ் பிரிவு 'பிகினி' ஆடையுடன் காணப்படும் இரண்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் புகைப்படத்துடன் காட்சிப் படுத்தி யுள்ள விளம்பரப் பலகையில், ''இலங் கைக் கலாச்சாரத்துக்கு ஏற்ற வகையில் பொருத்த மான உடைகளை அணியுங்கள்'' என வேண்டிக் கொண் டுள்ளது.

இது தொடர்பில் தனக்குத் தகவல் கிடைத்த உடனேயே அதனை அகற்றுமாறு உத்தரவிட்டதாக சட்டம், ஒழுங்கு அமைச்சர் பிபிசிக்கு தெரிவித் துள்ளார். இவரது உத்தர வுக்கு அமைய தற்பொழுது இந்த விளம்பரப் பலகை அகற்றப்பட்டுள்ளது.

இலங்கையின் அழகிய கடற்கரையை ரசிக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஆடைகள் குறித்த வரை யறைகளை அமுல்படுத்துவதற்கான போலீஸ் தேவையில்லை என இலங்கை சுற்றுலா அபிவித்தி அதிகார சபையும் அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தல் பலகை குறித்து ஊடக மற் றும் நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் கவனத் திற்கு வந்ததாகவும், இது குறித்து உடனடியாக பொது நிர்வாக, சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவிற்கு அறிவித்துள்ளதாகவும் அரச செய்திப் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சுதர்சன குணவர்தன தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் இது தொடர்பாக அலசப் பட்டதைத் தொடர்ந்து இலங்கை சுற்றுலா அபி விருத்தி அதிகார சபை (SLTDA) பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு அறிவித்த அவர், பொலிசா ருக்கு உத்தரவிட்டு இந்த காட்சிப் பலகையை அகற்றியுள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஆனால் அது அவர்களை தொந்தரவு பண்ணுவதாக அமையக் கூடாது என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அதனது டுவிட்டரில் தெரிவித்துள்ளது.

## பயங்கரவாத... (01 ஆம் பக்கத் தொடர்)

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அண்மையில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு ஒக்டோபர் 09 ஆம் திகதி பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 05 ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட வுள்ள நிலையில் அதற்கு முன்னர் இந்தச் சட்டமூலம் விவாதத்துக்கு எடுக்கப்படு வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன.

வரவு செலவுத் திட்ட விவாதங்கள் டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி வரை தொடரப்படவுள்ளன. அதற்குப் பின்னர் பாராளுமன்றத்தில் விஷேட அமர்வுகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படு கிறது. அந்த வேளையில் புதிய அரசியலமைப்பு தொடர்பிலும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பிலும் பாராளுமன்றம் கலந்துரையாடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னைய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விட வீரியம் மிக்கதாக அமையவுள்ள புதிய சட்டம் பற்றிய தெளிவுகள் இதுவரை பொதுமக்களை சென்றடையாத நிலையே காணப்படுகிறது.

## விளையாட்டு... (01 ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு தகைமை அடிப்படையில் நாடு தழு விய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 3850 பயிற்று விப்பாளர்களின் பெயர் பட்டியலை கடந்த ஜூன் மாதம் கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக வெளி யிட்டிருந்தது. இவர்கள் மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளில் நியமனம் பெற இருந்தார்கள்.

ஆனாலும் இதுவரையில் தெரிவு செய்யப்பட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான நியமனம் இன்னும் கல்வி அமைச்சினால் வழங்கப்படாமல் இழுத் தடிப்பு செய்யப்பட்டுக் கொண்டே வருகின்றது.

அவ்வாறு நியமனம் வழங்கப்படாமைக்கான நியாயமான எந்தவித காரணங்களையும் கல்வி அமைச்சு இதுவரையில் கூறவில்லை. மாறாக சாக் குப் போக்குகளையே கூறிவருகின்றது.

இந்நியமனங்களை வழங்குமாறு கோரி தெரிவு செய்யப்பட்ட பயிற்றுவிப்பாளர்கள் அனைவரும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர் களை சந்தித்து பல தடவைகள் கோரிக்கை விடுத் திருந்தார்கள்.

அதற்கு கல்வி அமைச்சர் அவர்கள் அமைச்ச ரவை அங்கீகாரம் பெற்றபின்புதான் நியமனம் வழங்கப்படும் என்று கூறியுள்ளார். இவ்வாறு கூறி பல மாதங்கள் கடந்தும் இன்னமும் அமைச்ச ரவைக்கு அது சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிய வில்லை.

மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு
புத்தகம் - **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம்.
சிறையில் புத்தக வாசிப்பை மட்டும்
அனுமதிக்க வேண்டும்.
- **நெல்சன் மண்டேலா.**

நல்ல புத்தகங்களை வாசிக்காத ஒருவன்
வாசிக்கவே தெரியாதவனை விட
உயர்ந்தவன் அல்ல.
- **மார்க்டிவைன்**

## கல்வியை... (01 ஆம் பக்கத் தொடர்)


இலங்கைச் சமூகத்திலும் பொருளாதாரத்திலும் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு அமைவாக பொதுக் கல்வியின் பாடத்திட்டத்தை மாற்றியமைக்கும் வகையில் பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் (General Education Modernization) திட்டம் நடை முறைப்படுத்தப்படும்.

பாடத்திட்டங்களை நவீனமயப்படுத்தல், பன் முகத்தன்மை, ஆசிரியர் மேம்பாடு, பாடசாலை முறையின் தரத்தை மதிப்பீடு செய்தல், பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்தல் போன்ற திட்டங்கள் அடுத்த ஐந்து வருடத்துக்குள் இதனூடாக நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் 2030 இன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளையும் (SDG) விஷன் 2025 இலக்குகளையும் அடைவதற்குத் துணைபுரியும் வகையில் வகுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேசப் பார்வை

சர்வதேச விவகாரங்களுக்கான
இலங்கை இதழ் - 36

வெளிவந்து விட்டது




## 90,000 கோடிக்கு மன்செஸ்டரை வாங்கவிருக்கும் சவூதி இளவரசர்

இங்கிலாந்தின் பிரபல மன்செஸ்டர் யுனைட்டட் கால்பந்தாட்ட அணியை 4 பில்லியன் பவுண்களுக்கு (90,000 கோடி ரூபா) வாங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் சவூதி இளவரசர் ஸல்மானுக்கும் மென்செஸ்டர் யுனைட்டட் கழக உரிமையாளர்களுக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

2005 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் கிளேசர் குடும்பம் மன்செஸ்டர் அணியை கையகப்படுத்தியது. தற்போது சவூதி இளவரசருடன் செய்துகொள்ளவிருக்கின்ற விற்பனை உடன்படிக்கையினால் கிளேசர் குடும்பம் 2.2 பில்லியன் பவுண்களை இலாபமாக அடையவுள்ளனர். ஊடகவியலாளர் கொலை விவகாரத்தில் சிக்கியுள்ள இளவரசர் முஹம்மது பின் சல்மான் இந்த நெருக்கடிகள் தளர்ந்ததும் இது தொடர்பான விவகாரங்களை துரிதப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மென்செஸ்டர் கழகத்தின் தற்போதைய பெறுமதியாக 3.2 பில்லியன் பவுண்கள் போப்ஸ் பத்திரிகையினால் விலை குறிக்கப்பட்ட போதும், மேலதிகமாக 800 மில்லியன் பவுண்களை வழங்கி இந்தக் கழகத்தை விலைக்கு வாங்குவதற்கான தயார் நிலையை ஸல்மான் வெளிப்படுத்தியுள்ளார். ஸல்மானின் மொத்த சொத்து மதிப்பு 850 பில்லியன் பவுண்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சவூதியின் 2030 திட்டத்தின்படி எண்ணெய் வருமானத்திலிருந்து நீங்கிக் கொள்வதற்கான முயற்சிகளில் ஒன்றாக அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. சவூதி பாலைவனத்தில் புதிதாக 03 நகரங்களை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ள இவர், அண்மையில் 50 மில்லியன் பவுணுக்கு ஒரு படகையும் வாங்கியிருந்தார்.



குளியாப்பிட்டிய, எதுன்கஹகொடுவ, ஹபரவெவ மக்தபுல் ஹைராத் மாணவர்களின் பரிசளிப்பு விழா கடந்த 2018.10.21 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு முன்னைய நாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் N.M. நஸீர் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில் வழங்கி வைத்தார். இதன்போது குருநாகல் மாவட்ட மக்தப் பயிற்றுவிப்பாளர் பஹ்மி மௌலவி (சாதி) சிறப்புரை நிகழ்த்தினார்.







'புத்தகம் எனது உற்ற நண்பன்' எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களின் புத்தகங்களுடனான தொடர்பை வலுப்படுத்தும் நிகழ்வொன்று நேற்று (14.10.2018) கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உதவிப் பொதுச்செயலாளர் சகோதரி ரிஸானா ஷிமாஸின் திட்ட முன்மொழிவின் பிரகாரம் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் கொழும்பு மா நகர சபை உறுப்பினர் மொஹமத் ஸபீன் அவர்களின் விஷேட திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக "Colombo Our City" என்ற சிவில் சமூக அமைப்பின் நடத்தாளர் டாக்டர் சுஜாதா கமகே மற்றும் பொது நூலக நூலகர் வருனி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## புத்தளம் பிராந்திய மத்ரஸா மாணவர்களுக்கான 'மகாஸித் அல் வதனிய்யா' செயலமர்வு









'மகாஸித் அல் வதனிய்யா' எனும் கருப்பொருளில் புத்தளம் பிராந்திய மத்ரஸாக்களின் விடுகை வருட மாணவர்களுக்கான ஒரு நாள் செயலமர்வொன்று 11/10/2018ம் திகதி புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரி கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. ஸலாமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத் (நளீமி) அவர்கள் 'மகாஸித் பற்றிய அறிமுகம்' என்ற தலைப்பில் ஆரம்பவுரையை நிகழ்த்தினார். இதில் 'தேசம், நாடு பற்றிய கருத்தியல்' என்ற தலைப்பில் சர்வதேசப் பார்வை சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் அஷ்ஷெய்க் ரவூப் ஸெய்ன் (நளீமி) அவர்களும், 'மகாஸிதுல் வதனிய்யா'' என்ற தலைப்பில் மர்கஸுஸ் ஸலாமாவின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் முஹம்மத் பகீஹுத்தீன் (நளீமி) அவர்களும், 'சமூக வலைத்தளங்களும் தஃவாவும்'' என்ற தலைப்பில் SLBC தயாரிப்பாளர் அஷ்ஷெய்க் இஸ்பஹான் ஷரப்தீன் (நளீமி) அவர்களும் உரையாற்றினர். காஸிமிய்யா அரபுக் கல்லூரி அதிபர் மதிப்பிற்குரிய உஸ்தாத் அப்துல்லாஹ் மஃமூத் ஆலிம் அவர்கள் நினைவு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். செயலமர்வின் முடிவில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org